ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL
லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture 2 4 5 B D E
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30

ஐரோப்பியப் பதிப்பு
# ஈழமுரசு®
முரசு 03 | 03 - 16 ஒக்டோபர் 2017 | முழக்கம் 057

பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே
உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்
பரிஸ்தமிழ்.கொம்
www.ParisTamil.Com
பரிஸ்தமிழ்.கொம்மில் விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com



## தூங்கும் தமிழினம் எழுச்சி கொள்ளும் தருணம்

### சமூகம் சீரழிய அழிவே மிஞ்சும்!

## காமுகர்களால் கல்லறையில் புதைந்த கனவுகள்

## அத்துமீறிய காணிகள் அபகரிப்பினால் முறிவடையும் தமிழ் – முஸ்லிம் உறவு

## மலரும் சுதந்திர பூமியில் குர்திஸ்தான் நோக்கிய ஒரு பயணம்

## ஆண்கள் எல்லோரிடமும் ஆண்மை என்ற திமிர் நிறைந்திருக்கின்றதே..? இது குறையாதா..?

விளையாட்டு
## சர்வதேச கிரிக்கெட் சபையின் புதிய விதிமுறைகள்

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Boulangerie - Pâtisserie
208 Rue du Faubourg Saint Denis - 75010 Paris
Tél: 01 42 05 00 00 / e-mail : hotbreads@hotmail.fr
Hot Breads
திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் தேவையான கேக்குகள், சிற்றுண்டி வகைகள், பாண், பிஸ்கட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்
Eggless கேக்குகள் எமது சிறப்புத் தயாரிப்புக்கள்

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

Express station service
எரிபொருள் நிரப்பு நிலையம்
பணம் அனுப்பும் சேவை
புத்தம் புதிய கைத்தொலைபேசிகள்
தொலைபேசி உதிரிப்பாகங்கள்
நம்பிக்கை,
நாணயம்,
உத்தரவாதம்...
MoneyGram. Ria Money Transfer WU Western Union Sigue Money Transfer
25 boulevard de la Chapelle 75010 Paris M°: La chapelle
Tél.: 01 40 18 07 44
E-mail: express-station@hotmail.com

AACHI BOUCHERIE
பொண்டியில் ஆச்சி இறைச்சிக்கடை – உங்களிற்காக மிகவும் மலிவு விலையில் தரமான இறைச்சி வகைகள்
HALAL
ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, உயிர்க்கோழி, கோழிக்கால், பாங்கிறைச்சிகள்
120 Rue Roger Salengro 93140 Bondy Tél : 07 51 08 14 83 / 07 51 27 72 38

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# ASCES

26 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் www.asces.fr Tél : 07 82 88 59 16 E-mail : asces@free.fr

சிறந்த முறையில் பெண்களுக்கான சிகை, ஆடை- புடவை, முக அலங்கார மற்றும் கேக் அலங்கார வகுப்பு ஆரம்பம். வகுப்பு முடிவில் வேலை உடனே!

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
BAC , BREVET பரீட்சைகளில் 100வீத சித்தி
Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers, Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

10-10--2017 செவ்வாய் வியாழன் மாலை 5 மணி
01-10-2017 சனி ஞாயிறு மாலை 4 மணி
10-09-2017 ஞாயிறு காலை 11 மணி 1 நாள்வகுப்பு)
02-10-2017 திங்கள் செவ்வாய் காலை 9.30 மணி
24-09-2017 ஞாயிறு காலை 10 மணி (Nationality வகுப்பு)
18-09-2017 திங்கள் செவ்வாய் காலை 11 மணி

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

**Bridal makeup & cake icing**

மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

Epinay sur seine 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்





**RAMI COIFFURE**
உங்கள் எண்ணம் போல் சிகை அலங்காரம் செய்து கொள்ள
Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY
Port: 06 27 93 63 44



**பாரீஸ் அறிவாலயம்**
Paris Arivalayam



7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.



**Aubervilliers Quatre chemins**ல் ஒரு தமிழ்க்கடை
**Anna Marché**
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...



மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65



**J.K.S ALIMENTATION GENERALE**
SPÉCIALITÉ AFRO - ASIATIQUE
Ria Sigue WESTERN UNION WU MoneyGram
இலங்கை இந்திய மளிகைப் பொருட்களை
உங்கள் Le Bourget இல்
மலிவாகவும் தரமாகவும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளுங்கள்



52, avenue Jean Jaures
93350 Le Bourget
RER B : Le Bourget
jks.alimentation@gmail.com
Tel: 01 48 51 71 41
09 66 97 71 41
தினமும்: 9h00 - 21h00




**DEVI Textiles & Tailors**



சாரி பிளவுஸ் 30 நிமிடங்களில் தைத்துத் தரப்படும்
ஆண் பெண் இருபாலாருக்கும் அனைத்து விதமான ஆடைகளும் மற்றும் உங்கள் வசதிக்கு அமைவான தோல்பைகளும் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
29, Bld de la Chapelle, 75010 Paris
Tél: 09 51 01 85 59 - Suresh: 07 81 29 86 50
M°: La Chapelle (ligne 2)






Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23



**Ragawa Tailor**
அனைத்து விதமான ஆடைகளும் உங்கள் வசதிக்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
01 40 35 14 77



190 Rue Fbg St. Denis
75010 Paris
M°: Gare du Nord



பரிஸ் லா சப்பலில்
**AMBAAL STORE**



பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris



**VICHNESH SHOP**
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலைபேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்



8 Esplanade de l europe
95100 Argenteuil
Tél: 01 39 81 35 60



ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.



**COIFFURE VITHUSA**
TÉL: 06 52 44 89 27
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS

# ஈழமுரசு®

mediacentre ஊடகமையம்

முரசு 03 | 03 - 16 ஒக்டோபர் 2017 | முழக்கம் 057


"சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படும் என நான் என்றுமே நம்பியதில்லை. அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப்போவதில்லை."

- தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



# தூங்கும் தமிழினம் எழுச்சி கொள்ளும் தருணம்

கலாநிதி சேரமான்

அடங்கிக் கிடந்த தேசங்கள், அடக்கப்பட்ட தேசங்கள், தமது அரசியல் வேணவாவை உலகிற்கு இடித்துரைப்பதற்கான காலம் கனிந்து விட்டதையே குர்திஸ்தான், கற்றலானா ஆகிய தேசங்களில் எழுச்சி பெற்றுள்ள தனியரசுக்கான சுதந்திர இயக்கங்கள் உணர்த்துகின்றன.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அந்நிய அரசுகளிடம் தமது இறைமையைப் பறிகொடுத்தாலும் தமது இறைமையை மீளவும் நிலைநாட்டுவதில் இத்தேசங்கள் ஓர்மத்துடன் தான் இருக்கின்றன.

1923 ஆம் ஆண்டு கையெழுத்தாகிய லுசேர்ண் ஒப்பந்தத்தின் விளைவாக துருக்கி, சிரியா, ஈராக், ஈரான் ஆகிய நாடுகளிடையே குர்திஸ்தான் நாடு துண்டாடப்பட, அன்று சீற்றம்கொண்டு கிளர்ந்த குர்தி மக்கள், குர்திஸ்தான் தனியரசை அமைப்பதற்கான சுதந்திர இயக்கத்தை உருவாக்கினார்கள்.

இதற்கு ஓராண்டுக்கு முன்னர் 1922 ஆம் ஆண்டு ஸ்பெய்னில் இருந்து பிரிந்து சென்று கற்றலானா தனியரசை அமைப்பதற்கான சுதந்திர இயக்கம் (அரசியல் வழியிலானது) கற்றலானா தேசத்தில் தொடங்கப்பட்டது.

இதே ஆண்டில் தான் தமிழீழத்திற்கான கருத்தியலும் ஈழத்தீவில் முகிழ்த்தது. பிரித்தானியர்கள் அறிமுகம் செய்த தேர்தல் முறைமை ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகளுக்குச் சாவுமணியாக அமைவதை உணர்ந்து கொண்ட அன்றைய தமிழ்த் தலைவர்களில் சிலர், தமிழர்களின் வரலாற்றுத் தாயமாகிய வடக்குக் கிழக்கு பிராந்தியத்திற்கென்று பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சிக்கு உட்பட்ட தனியான நிர்வாக அலகு உருவாக்கப்படுவதை முதலாம் உலகப் போருக்கு முன்னர் இருந்தே வலியுறுத்தி வந்தார்கள். இக் கோரிக்கைகளின் அடுத்த படிநிலை வளர்ச்சியாகவே 1922 ஆம் ஆண்டில் முதன்முறையாக ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தாயகமாகிய வடக்குக் கிழக்குப் பிராந்தியத்திற்குத் தமிழீழம் என்ற பெயரை சேர் பொன். அருணாச்சலம் அவர்கள் சூட்டினார்.

1619 ஆம் ஆண்டு சங்கிலி மன்னனின் வீழ்ச்சியை அடுத்து ஆரியச் சக்கரவர்த்திகளின் வழிவந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் வாரிசுகளான இமெல்டா சகோதரிகளால் ஈழத்தமிழர்களின் இறைமை போர்த்துக்கேயர்களிடம் தாரைவார்க்கப்பட்டதைத் தொடர்ந்து, மூன்று நூற்றாண்டுகளாக அரசு அற்ற தேசமாக விளங்கிய ஈழத் தமிழர்கள், தமது இறைமையை மீளவும் ஈழத்தீவில் நிலைநாட்டுவதற்கான சுதந்திர இயக்கத்தைத் தொடங்குவதற்கு இப்பெயர் சூட்டல் வழிகோலியது.

குர்திஸ்தான் தனியரசுக்கான சுதந்திர இயக்கமாக இருந்தாலும் சரி, கற்றலானா தனியரசுக்கான சுதந்திர இயக்கமாக இருந்தாலும் சரி, தமிழீழத் தனியரசுக்கான சுதந்திர இயக்கமாக இருந்தாலும் சரி, இம் மூன்று சுதந்திர இயக்கங்களும் தொடங்கப்பட்டு இன்னும் சில ஆண்டுகளில் ஒரு நூற்றாண்டு காலம் நிறைவுக்கு வந்து விடும்.

இதில் குர்திஸ்தான், கற்றலானா ஆகிய இரு தேசங்களின் சுதந்திர இயக்கங்களும் உயிர்ப்புடன் இருப்பதையே கடந்த வாரமும், இவ்வாரமும் இவ்விரு தேசங்களிலும் நடைபெற்ற தனியரசுக்கான வாக்கெடுப்புக்கள் உணர்த்துகின்றன. ஆனால் தமிழீழ சுதந்திர இயக்கத்தின் நிலை?

புலம்பெயர் தேசங்களிலும், தமிழகத்திலும் மட்டுமே தமிழீழத் தனியரசு பற்றிப் பேசப்படுகின்றது. ஆனாலும் கூட புலம்பெயர் தேசங்களிலும் சரி, தமிழகத்திலும் சரி, தமிழீழத் தனியரசை வலியுறுத்தும் வலிமையான சுதந்திர இயக்கம் ஒன்று இயங்குவதாக நாம் பெருமைப்பட முடியாது.

இடையிடையே ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமை பற்றியும், ஐ.நா. மன்றின் அனுசரணையுடன் தமிழீழத் தனியரசுக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அறிக்கைகள் வெளியிடப்படும். கொட்டெடலிகள் எழுப்பப்படும். அவ்வளவுதான்.

தமிழீழ தாயகத்திலோ நிலைமை இன்னும் மோசம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரான கடந்த எட்டரை ஆண்டுகளில் தமிழீழத் தனியரசுக்கான கருத்துப் பகிர்வுகளோ, அன்றி அரசியல் விவாதங்களோ துளியளவுக்குக் கூட தமிழீழ தாயகத்தில் இடம்பெறுவது கிடையாது.

இதற்கு 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஆடி இனவழிப்பைத் தொடர்ந்து ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் கொண்டு வரப்பட்ட ஆறாம் திருத்தச் சட்டம் நடைமுறையில் இருப்பது முக்கிய காரணமாக முன்வைக்கப்படுகின்றது.

உண்மைதான். தமிழீழத் தனியரசை வலியுறுத்துவோருக்கு ஏழாண்டு கால கடூழிய சிறைத்தண்டனை, சொத்துப் பறிமுதல், குடியியல் உரிமை இழப்பு என கடுமையான தண்டனைகளை ஆறாம் திருத்தச் சட்டம் விதிக்கின்றது.

இதனால் தனியரசு பற்றிப் பேசுவதற்கு அரசியல்வாதிகள் மட்டுமன்றி சாதாரண மக்களும் அஞ்சுவதில் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது.

ஆனால் இதற்காக ஆறாம் திருத்தச் சட்டத்திற்கு எதிராகக் குரல்கொடுக்காது வாளாவிருப்பது அபத்தமானது. பிரிவினையை வலியுறுத்தி அரசியல் செய்வதை மட்டும் தண்டனைக்குரிய குற்றமாக ஆறாம் திருத்தச் சட்டம் வரையறுக்கின்றதே தவிர, இச்சட்டம் நீக்கப்படுவதை வலியுறுத்தி ஒரு அரசியல் இயக்கம் தொடங்கப்படுவதை அது தடை செய்யவில்லை. அவ்வாறு செய்யவும் முடியாது.

ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான எந்தவொரு உருப்படியான அரசியல்

தொடர்ச்சி 04ம் பக்கம்


நிர்வாக அலுவல்கள் - அகதி விண்ணப்பங்கள் அரசாங்கங்களுடனான தொடர்புகள்
நிர்வாகம் - மேலாண்மை வியாபார, தொழில் ஆலோசனைகள்
அனைத்திலும் உங்களின் தேவைகளிற்காக
MAK CONSULTANT INTERNATIONAL
நிர்வாக ஆலோசனை மையம்
உங்கள் ஆவணங்கள் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்படும்
பிரெஞ்சு - தமிழ் மொழி தெரிந்த பெண் காரியதரிசி தேவை!
12 rue Anselme - 93400 Sanit-Ouen M° Mairie de Sanit-Ouen
06 05 69 52 95 / 07 53 12 13 87

செல்லில் - உங்கள் அபிமான பேபியின் புதிய உதயம்





அபி சலூன்
தொடரூந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்
11 avenue Maréchal Foch
77500 Chelles
07 82 31 73 94
07 51 28 81 34

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com

மக்கள் கடை
NEW CASTEL





உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

ஈழமுரசு
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"
"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
தலைவர்: ச.புலேந்திரன்
**Redacteur:** K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்

ஆசிரியர் பீடம்
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

விளம்பரம் / விநியோகம்
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

சந்தா விபரம்
வருட சந்தா
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

லாச்சப்பலில்
ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு
பாலன்:
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

# தூங்கும் தமிழினம் எழு...

தீர்வையும், எந்தக் காலத்திலும் சிங்கள ஆட்சியாளர்கள் வழங்கப் போவதில்லை என்பதையே கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் மைத்திரி - ரணில் அரசாங்கம் வெளியிட்டிருக்கும் புதிய அரசியலமைப்பிற்கான வரைபு நிரூபிக்கின்றது.

இவ்வாறான பின்புலத்தில் சமஸ்டி பற்றித் தமிழ் மக்களோ, அன்றி தமிழ் மக்களின் அரசியல் தலைமைகளோ இனியும் பேசிக் கொண்டிருப்பதில் எந்தவொரு அர்த்தமும் இருக்கப் போவதில்லை. இவ்விடயத்தில் சம்பந்தர் மட்டுமன்றி விக்னேஸ்வரனும் மூக்குடைபட்டுப் போய் இருக்கின்றார்கள். இப்பொழுது தமிழீழ மக்களுக்கு இருப்பது ஒரேயொரு தெரிவுதான்.

குர்திஸ்தான், கற்றலோனா ஆகிய தேசங்களில் சனநாயக வழியில் எழுச்சி பெற்றிருக்கும் தனியரசுக்கான சுதந்திர இயக்கங்களைப் போன்று, தமிழீழத் தனியரசுக்கான சுதந்திர இயக்கம் ஒன்றை சனநாயக வழியில் உருவாக்குவதுதான் அது. இதன் அர்த்தம் தமிழ் அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் போன்றவை ஒரே குடையின் கீழ் வர வேண்டுமென்பதல்ல.

தனித்தனியாக ஒவ்வொரு தரப்பினரும் தமிழீழத் தனியரசுக்கான கருத்துருவாக்கத்தைத் தொடங்கலாம். இதுவே ஒரு இயக்கமாக வளரும்.

இதில் இன்றைய சூழமைவில், அதுவும் ஆறாம் திருத்தச் சட்டம் என்ற கொடுஞ்சட்டம் நடைமுறையில் இருக்கும் பின்புலத்தில், தமிழீழ தாயகத்தில் தமிழீழத் தனியரசுக்கான கருத்துருவாக்கம் என்பது ஆறாம் திருத்தச் சட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கமாக முதலில் வடிவம் எடுக்கலாம்.

தமது அரசியல் தலைவிதியை ஈழத்தமிழர்கள் நிர்ணயிப்பதற்கும், தமது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஆறாம் திருத்தச் சட்டம் என்ற கொடுஞ் சட்டம் தடையாக இருக்கின்றது என்பதை உலகிற்கு இடித்துரைக்கும் வகையிலும், இச்சட்டம் நீக்கப்படாமல் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை என்பதை தெளிவுபடுத்தும் விதத்திலும் அவ் இயக்கம் அமைய வேண்டும். இவ்வாறானதொரு மக்கள் இயக்கம் தமிழீழ தாயகத்தில் தோற்றம் பெறும் பட்சத்தில், அது புலம்பெயர் தேசங்களிலும், தமிழகத்திலும் உறங்கிக் கொண்டிருக்கும் தமிழீழத் தனியரசுக்கான சுதந்திர இயக்கத்தைத் தட்டியெழுப்பும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் ஆயுத எதிர்ப்பியக்கமாகத் தமிழீழ தனியரசுக்கான சுதந்திர இயக்கம் முன்னெடுக்கப்பட்டபொழுது அதனை பயங்கரவாதம் என்றும் உலகம் சிறுமைப்படுத்தியது. ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, அரசியல் வழியில் தமது உரிமைகளுக்கான போராட்டத்தைத் தமிழர்கள் முன்னெடுத்தால், அதற்கு உலகம் பக்கபலமாக நிற்கும் என்று முன்னாள் அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் தொடக்கம் முன்னாள் நோர்வீஜிய சிறப்புத் தூதுவர் எரிக் சுல்கைம் வரை அன்றைய காலகட்டத்தில் தமிழர்களிடம் போதித்தார்கள்.

தமிழீழத் தனியரசுக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு எட்டரை ஆண்டுகள் அண்மித்து விட்டன. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் விட்டுச் சென்ற இடத்தில் இருந்து தனியரசுக்கான சுதந்திர இயக்கத்தை அரசியல் ரீதியில் முன்னெடுக்காது ஈழத்தமிழினம் உறங்குகின்றது. குர்திஸ்தானிலும், கற்றலானாவிலும் எழுச்சி பெற்றிருக்கும் தனியரசுக்கான சுதந்திர இயக்கங்கள், தமிழீழ தேசம் உறக்கத்தில் இருந்து விழுத்தெழுவதற்கான தருணம் வந்து விட்டதையே கட்டியம் கூறுகின்றன.

இத்தருணத்தில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கவிதை ஒன்றை உறங்கும் எம்மவர்களுக்குச் சமர்ப்பணமாக்குவது பொருத்தமானது:

தூங்கும் புலியைப் பறை கொண்டெழுப்பினோம்.
தூய தமிழரைத் தமிழ் கொண்டெழுப்பினோம்.
தீங்குறு பகைவரை இவணின்று நீக்குவோம்.
செந்தமிழ் உணர்ச்சி வேல்கொண்டு தாக்குவோம்.
பண்டைப் பெரும் புகழ் உடையோமா இல்லையா?
பாருக்கு வீரத்தைச் சொன்னோமா இல்லையா?
எண்டிசை வாய்மையால் ஆண்டோமா இல்லையா?
எங்கட்கும் இங்குற்ற நரிகளால் தொல்லையா?
தமிழ் காப்போம் என்றோம் எழுந்தாரா இல்லையா?
தமிழக்குயிர் தர இசைந்தாரா இல்லையா?
தமிழ்வாழ்ந்தால் தமிழர் வாழ்வார்கள் என்றோம்
தமிழர் மார்தட்டி வந்தாரா இல்லையா?
செந்தமிழ் நெஞ்சம் கொதித்ததா இல்லையா?
தில்லி நரிதான் நடுங்கிற்றா இல்லையா?
முந்தா நாள்விட்ட பிஞ்சுகள் தமிழை
முறிக்க எண்ணுதல் மடமையா இல்லையா?
தமிழர் ஒற்றுமை நிறைந்ததா இல்லையா?
தக்கைகள் ஆட்சி சரிந்ததா இல்லையா?
தமக்குத் தமிழகம் அடிமையே என்னும்
சழக்கு மரவேர் அறுந்ததா இல்லையா?.



# பிரபாகரன் இல்லையென்றால் தமிழ் மொழி இருப்பது எவருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை

## - இயக்குநர் பாரதிராஜா

தமிழ் இனம் ஒன்று உள்ளது அதற்கும் வீர வரலாறு இருக்கிறது என்பதை உலகறியச் செய்தவர் பிரபாகரன் மட்டுமே என இயக்குனர் சிகரம் பாரதிராஜா தெரிவித்துள்ளார். தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் பாரதிராஜா தமிழர் தாயகத்திற்குப் பயணம் மேற்கொண்டார். கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றில் இலவச கணனிக் கற்கைநெறி இடம்பெற்றது. குறித்த கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 28ம் திகதி வடக்கு மாகாணசபை உறுப்பினர் த.குருகுலராஜா தலைமையில் இடம்பெற்றது. அதில் விருந்தினராக பாரதிராஜா கலந்துகொண்டார்.



நிகழ்காலத்தில் வாழ்ந்த மிகப் பெரிய வீரத் தமிழன் யாழ்ப்பாணத்தில் பிறந்தான். அவன் தமிழர்களுக்கு ஓர் அடையாளத்தைச் சொல்லிவிட்டுச் சென்றுள்ளான் என இயக்குநர் பாரதிராஜா அங்கு உரையாற்றியபோது தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், இது ஒரு தனி நாடாக பிரிந்திருக்கவேண்டியதற்காக போராடிய ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க மிகப் பெரிய தலைவனோடு இந்த மண்ணில் சில நாட்கள் தங்கியிருந்தேன். அந்த உணர்வுபூர்வமான விடயமே இன்று நான் ஈழத் தமிழர்களோடு பிணைந்திருப்பதற்கான முக்கிய காரணமாகும். இப்போது நான் அவற்றைக் கூறினால் பிழையான கருத்தாக மாறிவிடும். காரணம் இன்றைய சூழல் மாற்றமடைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

பின்னர் தென் தமிழீழம் சென்றிருந்த இயக்குநர், மட்டு மாவட்ட கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டார். அங்கு உரையாற்றிய பாரதிராஜா கருத்து தெரிவிக்கையில், பிரபாகரன் மட்டும் இல்லையென்றால் தமிழ் என்ற ஒன்று இருப்பதே தெரியாத நிலை இருந்திருக்கும். ஈழத்தமிழர்கள் மட்டும் தான் தமிழ் மொழியை இன்னும் அழுத்தமாக காப்பாற்றிக் கொண்டிருக்கின்றார்கள், இங்கிருந்து புலம் பெயர்ந்தவர்கள் தமிழ் மொழியை கட்டிக் காப்பதுபோல் தமிழ்நாட்டில் கூட யாரும் தமிழ் மொழியை கட்டி காக்கவில்லை. அகநானூறு, புறநானூறு என்று எவ்வளவோ படைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் உங்கள் படைப்புகளிலே தமிழ் இன்னும் சோர்ந்து போகாமல் இருக்கிறது அது உங்களுக்கு பெருமை தரும் விடயமாகும்.

மொழியின் மீதும் இனத்தின் மீதும் அழுத்தமான பக்தியை உங்களை விட யாரும் வைத்ததில்லை. நான் இந்த பூமியில் கால் வைக்கும் போதேல்லாம் பெருமையாக உணர்ந்தேன். தமிழ் நாட்டில் தமிழர்களதும், தமிழச்சிகளதும், வீர வரலாற்றை புத்தகங்களிலும், ஏடுகளிலும் வாசித்துப் பார்த்திருக்கின்றோமே ஒழிய வாழ்க்கையில் வாழ்ந்து பார்த்ததில்லை. வீர வரலாற்றை வாழ்ந்த தமிழர்களும், தமிழச்சிகளும் ஈழத்தில் தான் இருக்கின்றார்கள். சுத்தமான தமிழ் உரையாடல் இங்கிருக்கின்றது. இன்னும் நீங்கள் சோரம் போகவில்லை. இங்கு ஏற்பட்ட நெருக்கடி கூட நல்லதற்கோ என நான் நினைத்ததுண்டு. காரணம் அந்த நெருக்கடிகளினால் இங்கிருந்து புலம்பெயர்ந்தவர்கள் எங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் சரி அங்கும் முளைத்து விருட்சமாய் இருப்போம் என வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழனை அடையாளப்படுத்துவது ஈழமண் மட்டும் தான். கறுப்பாக ஒரு தமிழன் இருந்தான். அவன் வீர வரலாறு கொண்டவன் என அடையாளப்படுத்தியது பிரபாகரன் மட்டும் தான். அவர் இல்லாவிட்டால் தமிழ் என்ற ஒன்று இருப்பது எவருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தமிழினத்தை உலகுக்க அடையாளம் காட்டியவர் பிரபாகரன் மட்டுமே. மூத்த கலைஞர்களுக்கு நான் விருதுகள் வழங்குவதை விட அவர்களது கரங்களால் நான் ஆசிர்வாதம் வாங்கிச் செல்ல வேண்டும் என தெரிவித்தார்.

# வாசகர் வேண்டுகோளுக்கு இணங்க....

ஈழமுரசின் எழுத்தின் அளவு சற்று சிறிதாக இருப்பதாகவும் அதன் அளவை சற்று பெரிதாக்க வேண்டும் என்றும் ஏராளமான வாசகர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். 24 பக்கங்களுக்குள் பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கி வெளிக்கொண்டுவர வேண்டிய தேவையும், ஈழமுரசின் உள்ளடக்கம் கனதியாக இருக்கவேண்டிய அவசியமும் எழுத்தின் அளவை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பை கடினமாக்குகின்றது. எனினும், ஈழமுரசின் ஏராளமான மூத்த வாசகர்கள் சில கட்டுரைகளை வாசிப்பதற்கு சிரமம் அடைவதாக தொடர்ந்தும் கவலை வெளியிட்டு வருவதால், அவர்களினதும் ஏனைய அனைத்து வாசகர்களினர்தும் வேண்டுகோள்களுக்கு இணங்க இவ் இதழில் இருந்து ஈழமுரசு தனது கட்டுரைகள், மற்றும் செய்திகளின் எழுத்தின் அளவை சற்று அதிகரித்து தருகின்றது என்பதை மகிழ்வோடு வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஆ–ர் (ஈழமுரசு)

ஈழமுரசு

# இனத்தை அழித்து மீளமுடியாத கடனுக்குள் சிக்கியுள்ள சிறீலங்கா!

மடியில் கனம் இருந்தால் வழியில் பயம் வரத்தான் செய்யும் என்பது சிங்களப் பேரினவாதிகளுக்கு நன்றாகவே பொருந்தும். இனப்படுகொலையில் ஈடுபட்டுவிட்டு அதனை மறைப்பதற்கு அவர்கள்படும்பாடு பெரும்பாடு.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 36வது கூட்டத்தொடர் முடிவடைந்துவிட்டது. தங்கள் கழுத்திற்கு இம்முறை கத்தி வராது என்று நம்பியிருந்த சிறீலங்கா ஆட்சியாளர்களுக்கு, சாதாரண இரத்தக் கசிவு ஏற்பட்டதைத் தவிர்க்கமுடியவில்லை. அந்தக் கோபத்தின் வெளிப்பாடுதான் இன்னொரு நாட்டின் கட்சித் தலைவர் என்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ மீது சிங்களப் பேரினவாத சக்திகள் கொதித்தெழுந்து கொந்தளித்ததற்குக் காரணம். அவர்களின் வெறித்தனம் வைவோவிற்கு மனித உரிமைகள் சபைக்குள்ளேயே பாதுகாப்பை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஐ.நா.விற்கு ஏற்படுத்தியது எனும்போது, இதே சிங்களப் பேரினவாதிகளின் ஆட்சிக்குட்பட்டு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள தமிழினம் குறித்து இந்த உலகம் ஒருமுறை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதேவேளை, இலங்கை நிலைமை குறித்து உத்தியோகபூர்வமான நிகழ்ச்சிகள் மனித உரிமைகள் சபையில் இடம்பெறவில்லையாயினும், உத்தியோகபூர்வமற்ற முறையில் பல்வேறு அறிவிப்புகள் இடம்பெற்றதுடன், இலங்கை தொடர்பான 15ற்கும் மேற்பட்ட உபகுழுக் கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. அவற்றில் சிங்கள தேசத்தின் இனஅழிப்பின் கோரத் தாண்டவங்கள் ஆதாரங்களுடன் மேலும் அம்பலப்படுத்தப்பட்டிருந்தன.

முதல்நாள் அமர்விலேயே ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசேன், சிறீலங்கா அரசு தொடர்பில் அதிருப்தி வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால் சிங்களப் பேரினவாத சக்திகள் கடும் சீற்றமடைந்தன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அத்துமீறி நடந்து கொள்வதாக ஐ.நா. பொதுச் செயலரிடம் முறைப்பாடும் செய்தன. புலம்பெயர் பூகோள சிறீலங்கன் அமைப்பின் மூலமாக அந்த அமைப்பின் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, அமைப்பின் செயலர் வசந்த கீர்த்திரன் உட்பட்டோரால் இந்த முறைப்பாடு ஐ.நா. பொதுச் செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் அதேவேளை, ஐ.நா. பொதுச் சபையில் மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசேனை, மைத்திரிபால சிறீசேன சந்தித்தபோது, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில் சிறீலங்கா அதன் உடன்படிக்கைகளுக்கு ஏற்ப, மக்களின் நலனுக்காக மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு வருவதாகவும், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதாகவும் கூறி அவரைச் சமாதானப்படுத்த முயன்றதுடன், சிறீலங்கா அடைந்துள்ள முன்னேற்றங்களை நேரில் கண்டறிவதற்காக அடுத்த வருடம் இலங்கைக்கு பயணம் செய்யுமாறும் ஆணையாளருக்கு அழைப்பு விடுத்தார்.

இதன்போது, சிறீலங்கா அடைந்துள்ள முன்னேற்றத்தை பாராட்டுவதாகக் குறிப்பிட்ட மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசைன், முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கான பயணம் மேலும் விரைவுபடுத்தப்படுமாயின் மகிழ்ச்சியடைய முடியும் என்றும் பதிலளித்துள்ளார்.

இதேவேளை, அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டுமென மைத்திரிபால சிறீசேனவிடம் ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் வலியுறுத்தியிருந்ததும் முக்கியத்துவமானது.

இலங்கைத் தீவைத் தாங்கள் மட்டுமே ஆளவேண்டும் என்ற சிங்களத்தின் மகாவம்ச இனவெறிச் சிந்தனை, சர்வதேச ரீதியாக அவர்களின் கோர முகத்தை அம்பலப்படுத்தியே வருகின்றது. தமிழர்களுடன் உறவைப் பலப்படுத்தி, உரிமைகளைப் பங்கிட்டிருந்தால் இத்தனை அவமானங்களை அது சந்திக்கவேண்டி வந்திருக்காது. இப்போதும் 'புதிய அரசியல் அமைப்பு' என்ற பெயரில் சில விலைபோன தமிழர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு தமிழர்களையும், உலகத்தையும் ஏமாற்ற இன்னொரு நாடகமாடுகின்றது.

சிங்களப் பேரினவாதத் தலைமைகள் சரியாகச் சிந்தித்திருந்தால் நாடு இப்போது சிங்கப்பூரை விட பொருளாதார ரீதியாக உச்ச வளர்ச்சியை எட்டியிருக்கும். ஆனால், தமிழர்களை அடக்கியாள வேண்டும் என்ற அதன் வெறித்தனம், இனங்களுக்கிடையேயான நிரந்தரமான பிளவை ஏற்படுத்தியுள்ளது மட்டுமல்ல, இப்போது நாட்டை மீளமுடியாத கடன்கார நாடாகவும் மாற்றி, கடன்கொடுத்த நாடுகளின் மாநிலங்களாக இலங்கைத் தீவை ஆக்கியிருக்கின்றது. தமிழர்களின் நிலத்தைப் பறிக்கப்போய் இப்போது தன் நிலங்களையும் இழந்துவருகின்றது சிறீலங்கா. ஒரு நாடு கடன்கார நாடாகின்றது என்று சொன்னால் அந்நாட்டை கடன்கொடுத்த நாடுகளால் இலகுவில் அடக்கியாள முடியும். இதனையே வல்லரசு நாடுகள் வளர்ச்சியடையாத நாடுகள் மீது காலம்காலமாகப் புரிந்துவருகின்றன. குறிப்பாகச் சீனா அவ்வாறான ஒரு நிலைக்குத்தான் சிறீலங்காவை கொண்டுவந்துள்ளது.

சிறீலங்காவின் இன்றைய கடன் தொகை 10 இலட்சத்து 50 ஆயிரம் கோடி (10,500,000,000,000) ரூபா என்றும் இந்தக் கடன்களில் இருந்து சிறீலங்கா மீண்டெழ முடியாது என்றும் ஜே.வி.பி கதறுகின்றது. 2019ம் ஆண்டுக்குப் பின்னர் சிறீலங்காவுக்கு கடன் உதவிகளை வழங்குவதில்லையென உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளதாக சிறீலங்காவின் பிரதமர் ரணில் கவலை வெளியிடுகின்றார்.

ஆனால், மேலும் கடன்களை வழங்குவதற்காக சீனா தயாராகவே இருக்கின்றது.இதற்காக சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் (எக்சிம் வங்கி) உயர்மட்டக் குழு இந்த வாரம் சிறீலங்கா செல்லவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சீனாவின் எக்சிம் வங்கி ஏற்கனவே இலங்கையில் பல்வேறு திட்டங்களுக்குக் கடன்களை வழங்கியுள்ளது. ஹம்பாந்தோட்ட துறைமுகம், நுரைச்சோலை அனல்மின் நிலையம், மத்தல விமான நிலையம் ஆகிய திட்டங்களுக்கும் சீன எக்சிம் வங்கியே கடன்களை வழங்கியது. இந்தக் கடன்களையே சிறீலங்கா மீளச் செலுத்தமுடியாமல் மூச்சுத்திணறி வரும் நிலையில், நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசனம், வடிகாலமைப்பு உள்ளிட்ட உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மேலும் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதே சீன உதவியைச் சிறீலங்கா நாடியுள்ளதால், அவர்கள் மேலும் கடன்களை வழங்குவதற்காக சிறீலங்கா செல்கின்றனர்.

அமெரிக்கா தனது நாணய மதிப்பைத் தக்கவைக்க, தனது நாணயத் தாளை 100 டொலர்களுக்கு மேல் ஒருபோதும் அச்சிடுவதில்லை. ஆனால், சிறீலங்கா 5000 ரூபா நாணயத்தாளை வெளியிடுகின்றது. ஒரு நாட்டின் நாணயத்தாளில் தொகை அதிகரித்துச் செல்லுமாயின் அந்நாட்டின் நாணயப் பெறுமதி வீழ்ச்சியடைந்துகொண்டு செல்கின்றது என்பது அர்த்தம்.சில வருடங்களுக்கு முன் 1000 ரூபா தாளை நெருங்காத சிறீலங்கா, இப்போது 5000 ரூபா நாணயத்தளை வெளியிடுகின்ற அளவிற்கு அதன் பொருளாதார நிலைமை தள்ளப்பட்டுள்ளது. அத்துடன், வருடம் ஒன்றுக்கு குறைந்தது 50 ஆயிரம் மனிதத் தொழிலாளர்களை என்றாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாவிட்டால் சிறீலங்காவின் அந்நியச் செலவாணி வருகை அதளபாதாளத்திற்கு சென்றுவிடும் என்றளவிற்கு நிலைமை இருக்கின்றது. இனத்தை அழித்த சிறீலங்கா இன்று மீளமுடியாத பொருளாதார நெருக்கடிக்குள்ளும் கடனுக்குள்ளும் சிக்கியுள்ளது.

இந்நிலையில், தங்கள் நிலங்களையே அந்நிய நாடுகளின் ஆளுகைக்குள் இருந்து மீட்டெடுக்க கடுமையாக உழைக்கவேண்டிய சிறீலங்கா, தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கத் துடிக்கின்றது.

# கூட்டமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்த சீனா ஆர்வமாம்!

## கொம்யூனிஸ்ட் கட்சியின் வெளிவுறவு பிரிவு அறிவிப்பு

தமிழ் தேசிய கூட்டமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்தி கொள்வது தொடர்பில் சீனா ஆர்வம் கொண்டுள்ளது என சமகால உலக ஆய்வு நிலையம் மற்றும் சீன பட்டுப்பாதை சிந்தனை குழாமின் பணிப்பாளர் நாயகமுமான ஜின் ஷின் தெரிவித்தார். உத்தியோகப்பூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு சீனா சென்றிருந்த இலங்கை தமிழ் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே பணிப்பாளர் நாயகம் ஜின் ஷின் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தத் தமிழ் ஊடகவியலாளர்கள் யார் என்பது குறித்த விபரம் தெரியவரவில்லை. எனினும் இச்சந்திப்பில் சீன பொருளாதாரம், துறைமுக அபிவிருத்தி மற்றும் கட்டட நிர்மான துறையின் முன்னேற்றங்களை காண்பிக்கும் முகமாகவே இந்தப் பயணம் அமைந்திருந்ததாக கொழும்பு ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது.



சீன அரச மட்டத்திலான இந்த சந்திப்பில் கொம்யூனிஸ்ட் கட்சியின் வெளியுறவு பிரிவின் தலைவராகவும் ஜின் ஷின் செயற்படுகின்றார். உலக பொருளாதார தொடர்புகளில் சீனாவின் வளர்ச்சி குறித்தும் ஒரு பாதை, ஒரு பட்டி திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஜின் ஷின் இதன் போது தமிழ் ஊடகவியலாளர்கள் தெளிவுப்படுத்தினார். சுமார் 2 மணித்தியாலம் வரை இடம்பெற்ற இந்த சந்திப்பில் இலங்கை தமிழர்கள் மத்தியில் காணப்படும் சீனா தொடர்பான எதிர் மறையான நிலைப்பாடுகள் குறித்து தெளிவுப்படுத்தப்பட்டது.

போரின் போது சிறீலங்கா அரசாங்கத்திற்கு இராணுவ ரீதியில் சினா உதவியமை மற்றும் போரின் பின்னரான காலப் பகுதியில் நல்லிணக்கத்திற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் நழுவிய நிலையில் சர்வதேசத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளின் போது சிறீலங்காவிற்கு ஆதரவாக செயற்பட்டமை போன்ற செயற்பாடுகள் தமிழர்கள் மத்தியில் சீனா தொடர்பில் ஒரு எதிர்மறையான நிலைப்பாடு ஏற்படுவதற்கு காரணமாகியதாக தமிழ் ஊடகவியலாளர்களால் தெரிவிக்கப்பட்டதாம்.

அப்போது, சீனா தற்போது இலங்கையில் தமிழ் அரசியல் தரப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கொள்வதில் ஆர்வமாக உள்ளது என்றும் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் தொடர்புகளை ஏற்டுத்தி கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் கொமினிஸ்ட் கட்சியின் வெளியுறவு பிரிவின் தலைவராகவும் ஜின் ஷின் தெரிவித்துள்ளாராம்.

தற்போது இலங்கையில் சாதகமான செயற்பாடுகள் பல முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோன்று அங்கு முன்னெடுக்கப்படுகின்ற தமிழர் சார்ந்த விடயங்கள் குறித்து உன்னிப்பாக சீனா அவதானித்து வருகின்றது. போரில் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மக்கள் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது குறித்து சீனா கருத்தில் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டதாக கூறப்பட்டுள்ளது.

# போர் முடிந்தும் அதிகரித்துச் செல்லும் சிறீலங்காவின் பாதுகாப்பு செலவீனம்!

சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான என்ற போர்வையில் மேற்கொண்ட பாரிய இனஅழிப்புப் போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டபோதும், சிறீலங்காவின் பாதுகாப்பு செலவீனம் ஆண்டுதோறும் அதிகரித்துச் செல்கின்றது.

2018ம் நிதியாண்டுக்கென அரச மொத்த செலவினமாக ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 726 கோடியே 40 இலட்சத்து 63 ஆயிரம் (1,977,264,063,000) ரூபாவை சிறீலங்கா அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளது. அதில் அதிகபட்சமாக பாதுகாப்பு அமைச்சுக்கு 29 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 2018ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் அரசினால் வர்த்தமானியில் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2017ம் ஆண்டிலும் பார்க்க 2018ம் ஆண்டிற்கு அரசின் மொத்த செலவினம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றுக்கான செலவினங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

2017ம் நிதியாண்டுக்கான மொத்த செலவினம் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 291 கோடியே 44 ஆயிரம் (2,112,910,044,000) ரூபாவாக இருந்த நிலையில், 2018ம் நிதியாண்டுக்கான மொத்த செலவினமானது அதிலும் பார்க்க 13 ஆயிரத்து 564 கோடியே 59 இலட்சத்து 81 ஆயிரம் (135,645,981,000) ரூபா குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம், 2018ம் ஆண்டுக்கான பாதுகாப்பு அமைச்சுக்கான செலவினமாக 29 ஆயிரத்து 71 கோடியே 13 இலட்சத்து 75 ஆயிரம் (290,711,375,000) ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2017ம் ஆண்டு அந்த அமைச்சுக்கென ஒதுக்கப்பட்ட 28 ஆயிரத்து 404 கோடியே 43 இலட்சத்து 44 ஆயிரம் (284,044,344,000) ரூபாவிலும் பார்க்க 666 கோடியே 70 இலட்சத்து 31 ஆயிரம் (6,667,031,000) ரூபா அதிகமாகும்.

அதேபோல், ஜனாதிபதிக்கென 2018ம் ஆண்டுக்கான செலவினமாக 998 கோடியே 35 இலட்சத்து 25 ஆயிரம் (9,983,525,000) ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2017ம் ஆண்டில் இந்த விடயத்துக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 654 கோடியே 26 இலட்சத்து 79 ஆயிரம் (6,452,679,000) ரூபாவிலும் பார்க்க 353 கோடியே 8 இலட்சத்து 46 ஆயிரம் (3,530,846,000) ரூபா அதிகமாகும்.

## சிறீலங்காக் படையினருக்கு அமெரிக்கா பயிற்சி

இனப்படுகொலையில் ஈடுபட்ட சிறீலங்கா கடற்படையின் மரைன் படைப்பிரிவினருக்கு, அமெரிக்காவின் மரைன் படைப் பிரிவின் அதிகாரிகள் பயிற்சி வழங்கி வருகின்றனர். வெலிசறைக் கடற்படைத் தளத்தில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. கடற்படையின் மரைன் படைப்பிரிவினருக்கு, மருத்துவப்



பயிற்சிகளை அமெரிக்க மரைன் படைப்பிரிவு அதிகாரிகள் வழங்கி வருகின்றனர். கடற்படையின் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரைன் படைப்பிரிவுக்கு அமெரிக்க மரைன் கொமாண்டோக்கள் தொடர்ச்சியாகப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்நாட்டு விசாரணைகள் மட்டுமே

போர்க்குற்ற விசாரணைகள் என்ற பெயரில் பன்னாட்டு நீதிமன்றில் நிற்பதற்கு நான் ஒரு போதும் தயாரில்லை. வெளிநாடுகளுக்குப் பதில் கூறவும் விரும்பவுமில்லை. எனது கட்டளைக் கேற்ப போர் செய்த எவரையும் தண்டிக்க இடமளிக்கமாட்டேன். ஆனால் உள்நாட்டு விசாரணை ஒன்றின் மூலம் போரின் போது குற்றங்களைச் செய்த இராணுவ உயர் அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை இவ்வாறு பீல்ட்மார்ஷல் அமைச்?சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

## மனித உரிமை செயற்பாட்டாளர்களை தண்டிக்கும் நாடுகளில் சிறீலங்காவிற்கும் ஒரு இடம் வழங்கப்பட்டது

மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களை தண்டிக்கும் நாடுகள் பட்டியலில் 14வது இடம் சிறீலங்காவிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களை தண்டிக்கும் 21 நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களை தண்டிக்கும் நாடுகள் பட்டியலில் சிறீலங்கா சேர்க்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இது தொடர்பிலான பட்டியலை உதவி ஆணையாளர் அண்ட்ரூ கில்மோர் வெளியிட்டுள்ளார். இந்தியாவுக்கும் இந்த குற்றச்சாட்டு எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்கா இனஅழிப்பு கடற்படைக்கு தமிழர்களின் 617 ஏக்கர் காணிகள் சுவீகரிப்பு

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் பகுதியில் சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையினரால் அபரிக்கப்பட்டுள்ள மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணிகள் நிரந்தரமாகவே சுவீகரிக்கப்படுவதான வர்த்தமானி அறிவித்தல் சிறீலங்காவினால் வெளியிடப்பட்டுள்ளது. காணி உரிமையாளர்களுடைய ஆட்சேபனையையும் மீறி இந்தக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளமையானது மக்களிடத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காணி சுவீகரிப்புச் சட்டப் (அத்தியாயம் 460) பிரிவின் கீழான அறிவித்தில் 2030/44ஆம் இலக்க 04.08.2017 அன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலிலேயே குறித்த காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன என அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவித்தல் அடங்கிய கடிதங்கள் கரைதுரைப்பற்றுப் பிரதேச செயலாளர் குணபாலனால் காணி உரிமையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இறுதிப்போரின் பின்னர் முல்லைத்தீவு, வட்டுவாகல் பிரதேசத்தில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணிகள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டன. அங்கு கடற்படையினர் பாரிய கடற்படைத் தளத்தை அமைத்து நிலைகொண்டனர். மக்களுடைய மீள்குடியமர்வின்போது கடற்படையினரால் அபகரிக்கப்பட்ட குறித்த காணிகள் விடுவிக்கப்படவில்லை. மக்கள் நிர்க்கதியாகினர். இதுதொடர்பாக அரசியல் தலைவர்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசுக்குமிடையில் பல பேச்சுகள் இடம்பெற்றன. எனினும் காணிகள் விடுவிக்கப்படவில்லை. கடற்படைமுகாமை அகற்றி தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டங்கள் நீண்டகாலமாக இடம்பெற்றன.

ஆனால் எதுவும் நடக்கவில்லை. சுவீகரிப்புக்காகக் காணிகளை அளவிடும் முயற்சியில் கடற்படையினர் இரண்டு தடவைகள் ஈடுபட்டனர். அந்த முயற்சிகள் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டன. இது தொடர்பில், சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சின் உபசெயலாளர் தலைமையில் கடந்த வருடம் ஜனவரி 16ம் திகதி மற்றும் 24ம் திகதிகளில் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இதன்போது தமது நிலம் மீளக் கையளிக்கப்படவேண்டும் என்று காணி உரிமையாளர்கள் உறுதியாகக் கோரினர். இவை அனைத்தையும் தாண்டி கடற்படையினர் அடாத்தாக மேற்படி பிரதேசத்தினை அபகரிக்கும் நோக்கில் அளவீடு செய்ய முயன்றனர். எனினும் காணி உரிமையாளர்கள், மக்கள், மீனவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் என அனைவரும் வீதி மறியலில் ஈடுபட்டனர். வட்டுவாகல் பாலம் மறிக்கப்பட்டது. போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன. அங்கு பெரும் ஆர்ப்பாட்டம் நடந்தது.

சம்பவ இடத்திற்கு வந்த மாவட்டச் செயலக அதிகாரிகள் மக்களுக்குச் சாதகமாக வாக்குறுதிகளை வழங்கினர். காணிகளை விடுவிப்பதற்கு தாம் நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தனர். அந்த வாக்குறுதிகளை ஏற்று போராட்டம் கைவிடப்பட்டது. இந்த விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அந்தப் பிரதேசத்தை எந்தக் காரணம் கொண்டும் கடற்படையினருக்கு வழங்கமுடியாது என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இதற்குப் பின்னரே வட்டுவாகல் கடற்படைத் தளத்தின் சுற்றுக் காவலரண்கள் அனைத்தும் நிரந்தரமாக சீமெந்தினால் கட்டியமைக்கப்பட்டன.

இதனையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் மீண்டும் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், காணிகள் சுவீகரிக்கப்படுவதாக அரசு அறிவித்தது. இதுதொடர்பாக ஆட்சேபனை இருப்பின் தெரியப்படுத்துமாறும் கோரியது. தமது சொந்த நிலங்களைத் தங்களிடம் கையளித்துவிட்டு கடற்படையினர் அவர்களுக்குப் பொருத்தமான இடங்களுக்குச் செல்லவேண்டும் என மக்கள் தமது ஆட்சேபனைக் கடிதங்களில் தெரிவித்திருந்தனர். இவை எல்லாவற்றையும் மீறி தற்போது அரசு அந்தக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன என அறிவித்தமை மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். அந்தக் காணிகளில் கடற்படையினர் நிரந்தரமாக் குடிகொள்வார்களேயானால் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் பலர் பாதிப்படையும் நிலை உருவாகும் என அவர்கள் தங்களுடைய ஆதங்கங்களை வெளியிட்டுள்ளனர்.

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

## யாழில் குடும்பஸ்தர் கடத்திச் சென்று கொலை

இளைஞர் கும்பலொன்றால் கடத்திச் செல்லப்பட்டு வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மீட்கப்பட்ட குடும்பத் தலைவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். அவரது மகன் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார். மாடுகளை களவாடியமையுடன் தொடர்புடைய பிணக்கொன்றினாலேயே குடும்பத்தலைவர் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் தந்தை, மகன் உறவுள்ள இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் நாவலர் சாலையைச் சேர்ந்த செல்வநாயகம் இரட்ணபாலசிங்கம் (வயது 38) என்பவரே உயிரிழந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். யாழ்ப்பாணம் நாவலர் சாலையில் உள்ள அவரது வீட்டில் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த 18ம் திகதி இரவு நான்கு உந்துருளிகளில் சென்ற எட்டுப்பேர் கொண்ட கும்பல் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்தவர்களைச் சரமாரியாக தாக்கியது. பின்னர் குடும்பத்தலைவர் மீது வாளால் வெட்டியது. அவரது மகனையும் அந்தக் கும்பல் வெட்டியது. படுகாயமடைந்த நிலையில் அவரது மகனான இரட்னபாலசிங்கம் ரஜீவன் (வயது 18) என்பவர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். குடும்பத் தலைவரை வாள்வெட்டுக் கும்பல் காயத்துடன் கடத்திச் சென்றது. நல்லூர் சங்கிலியன் பகுதியில் அவரைப் போட்டுவிட்டு வாள்வெட்டுக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது. வெட்டுக்காயங்களுடன் குருதி வெள்ளத்தில் அவர் கிடந்துள்ளார். சாலையில் பயணித்தவர்கள் அது தொடர்பில் காவல்துறையிருக்கு அறிவித்துள்ளனர். அங்கு சென்ற காவல்துறையினர் சாலையில் பயணித்தவர்களுடன் இணைந்து படுகாயமடைந்து கிடந்தவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்திருந்தனர். சிகிச்சை பலனளிக்காது அவர் சில மணிநேரத்தில் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

## எரிந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு


மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான வீதி தள்ளாடி சிறீலங்கா இனப்படுகொலை இராணுவ முகாமில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் இருந்து கடந்த 25ம் திகதி எரிந்த நிலையில் ஒரு ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் மன்னார், தாழ்வுமடு கிராமத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான அந்தோனிதாஸ் குரூஸ் என உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து சுமார் நூறு மீற்றர் தொலைவில் உள்ள காட்டு பகுதியில் அடையாளம் தெரியாத நிலையில் சடலம் ஒன்று காணப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற மன்னாரில் நிலைகொண்டுள்ள சிறீலங்காக் காவல்துறையினர் குறித்த சடலத்தை மீட்டுள்ளனர்.



இது குறித்து மேலும் தெரிய வருகையில், குறித்த குடும்பஸ்தர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) காலை தாழ்வுபாட்டு கிராமத்திலுள்ள தனது வீட்டிலிருந்து மன்னார் நகரிற்கு வந்ததாகவும் பின்னர் அவர் இரவு வரை வீடு திரும்பாத நிலையில் குறித்த நபரை அவரின் உறவினர்கள் பல இடங்களிலும் தேடியதாகவும் சடலத்தை அடையாளம் காட்டிய உறவினர் ஒருவர் தெரிவித்தார். குறித்த மரணம் கொலையா? அல்லது தற்கொலையா? என்ற விடயம் தெரிய வரவில்லை.

## மாந்தை சந்தி விபத்தில் இளைஞன் பலி

மன்னார் – யாழ் பிரதான வீதி மாந்தை சந்தியில் கடந்த 23ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் ஆத்திமோட்டை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார். திருக்கேதீஸ்வரத்தில் இருந்து வந்த 4 இளைஞர்கள் முச்சக்கர வண்டியில் பிரதான வீதியை கடக்க முற்பட்ட போது, மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பாரவண்டியுடன் மோதி விபத்து நடந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. முச்சக்கர வண்டியில் பயணித்த ஒரு இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த மூன்று இளைஞர்களும் உடனடியாக மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.




சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# காமுகர்களால் கல்லறையில் புதைந்த கனவுகள்

'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை வழக்கு ஏதொவொரு விதத்தில் முடிவுக்கு வந்திருக்கின்றது. சோகங்களையும் வேதனைகளையும் நீண்ட இழுத்தடிப்புக்களைம் தந்த பின்னர், ஏழு பேருக்கு மரண தன்டனை விதிக்கப்பட்டதன் மூலம் நீதித்துறை வித்தியா வழக்கை முடிவுக்குகொண்டுவந்துள்ளது.

இனி மேலதிக முறைப்பாடுகள் செய்யப்படுமாயின் மாத்திரம், நீதிமன்று விரும்பினால் இந்த வழக்கு மீண்டும் மறு விசாரணைக்கு எடுக்கப்படும். அதில் சில வேளைகளில் தீர்ப்புகளில் மாற்றங்கள் வரக்கூடும். எனினும், அவர்களுக்கு மரண தண்டனை என்பதில் மாற்றம் வருவதற்கு சாத்தியப்பாடுகள் மிகக் குறைவாகவே உள்ளன.

> **வித்தியாவின் படுகொலையும் அதன் பின்னரான விசாரணைகள், நீதி வழங்கல்களும் அதிகாரத்தின் பெயரால் நீதி முறைகேட்டுக்குள்ளாக்கப் பட்டுள்ளமையை வெளிக்காட்டியிருக்கின்றது. பதவியில் இருப்பவர்களைப் பாதுகாப்பதற்கே நீதிமன்றம் முயன்றதா என்ற கோணத்தில் மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர்.**

இந்த வழக்கில் வித்தியாவுக்கு நீதி கிடைத்தது என்பது உண்மைதான். ஆனால், அந்த வழக்குடன் தொடர்புடைய பலம்மிக்க நபர்கள் சிலரை நீதிமன்று கண்டுகொள்ளாமல் விட்டிருக்கின்றது. இது வித்தியா படுகொலை வழக்கை எதிர்பார்த்திருந்த பொதுமக்களுக்கும் ஏனையோருக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

வித்தியா கொலை வழக்குடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்பட்ட உயர் காவல்துறை அதிகாரிகள் இருவரும் பெண் அரசியல்வாதி ஒருவரும் தப்பவிடப்பட்டிருக்கின்றனர். நீதிமன்று ஏன் அவ்வாறு செய்தது என்பது மக்களுக்கு பெரும் கேள்வியாக உள்ளது.

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவியான சி.வித்தியா கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி காலை படுகொலை செய்யப்பட்டார்.

க.பொ.த உயர்தரப் பிரிவில் கல்வி கற்ற வித்தியா பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்தபோது வழிமறிக்கப்பட்டு, பாழடைந்த வீடொன்றுக்குள் கொண்டு செல்லப்பட்டு கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

அந்த அப்பாவி மாணவியின் படுகொலைக்குப் பின்னரான விடயங்கள், வித்தியா கொலைக்கு நிகரான குற்றங்களாக அமைந்தன. குறிப்பாக, வித்தியா படுகொலையின் பிரதான சூத்திரதாரி என பின்னர் நீதிமன்றத்தால் கண்டுபிடிக்கப்பட்ட சுவிஸ் குமார், புங்குடுதீவில் இருந்து தப்பிச்செல்வதற்கு அதே தீவுக் கூட்டங்களில் ஒன்றான காரைநகரைச் சேர்ந்தவரும் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதியுமான திருமதி. விஜயகலா மகேஸ்வரன் தீவிர பங்காற்றினார்.

சுவிஸ்குமாரை மக்கள் பிடித்துக் கட்டி வைத்த இடத்திற்கு சில மணித்துளிகளில் சென்ற விஜயகலா, அவரைத் தாக்க வேண்டாம் எனவும் கட்டுக்களை அவிழ்த்து அவரை விடுவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

உடனடியாக ஊர்காவற்றுறை காவல்துறை மற்றும் யாழ்ப்பாண காவல்துறையை அழைத்த விஜயகலா, கொலைக் குற்றவாளியான சுவிஸ்குமாரை அந்த இடத்தில், மக்களின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பாக வெளியேற உதவினார்.

> **இறுதி யுத்தத்தில் இசைப்பிரியா உட்பட எத்தனையோ தமிழ் யுவதிகள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். செம்மணியில் கிரிசாந்தி, புங்குடுதீவில் சாரதாம்பாள் போன்று படையினரால் படுகொலை செய்யப்பட்ட பல பெண்கள் தொடர்பாக இதுவரை உரிய விசாரணைகளே ஆரம்பிக்கப்படாமல் உள்ளன. அரசு அவற்றை நடத்தவேண்டும். அதன் பின்னர் சிறிலங்காவில் நீதி சாகவில்லை என முகப்புத்தகப் போராளிகள் எழுத முடியும்.**



அதன் பின்னரும், உயர் பொலிஸ் அதிகாரி லலித் ஜெயசிங்க, மற்றும் பொலிஸ் அதிகாரி ஸ்ரீகஜன் மற்றும் சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறன் ஆகியோரின் உதவியுடன் சுவிஸ்குமாரை அடுத்த நாளே விடுவித்தார் விஜயகலா மகேஸ்வரன்.

சிறுவர்களின் நலன்களில் அக்கறை எடுக்கவேண்டிய, சிறுவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டிய சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக இருக்கின்ற விஜயகலா, கொலைக் குற்றவாளிகள் தப்பிச்செல்ல உதவியமை பாரதூரமான குற்றமாகும்.

விஜயகலாவின் உத்தரவுகளைக் கேட்டு, உரிய ஏற்பாடுகள் ஏதுமின்றி, கொலைக் குற்றவாளியை விடுவித்தமை காவல்துறை அதிகாரிகள் செய்த பாரிய குற்றமாகும். அதுவும், கொலையின் பிரதான சூத்திரதாரி எனக் குற்றம்சாட்டப்பட்ட ஒருவரை விடுதலை செய்வதானது நீதி, நெறிமுறைகளை மீறிய செயலாகும்.

இதில், சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறன பாரிய தவறிழைத்திருக்கின்றார். கொழும்பில் இருந்த அவர் இரவோடு இரவாகப் புறப்பட்டு அடுத்த நாளே யாழ்ப்பாணம் வந்து சுவிஸ்குமாரின் விடுதலைக்கு உதவினார். தமிழ்மாறன் தனது பெயரில் தமிழ் என்பதை வைத்திருக்கின்றாரே தவிர, அவர் ஒரு மோசடி நபர் என, இந்த வழக்கிற்கு பின்னர் தமிழ் மக்கள் அறிந்துகொண்டனர்.

தொடர்ச்சி 14ம் பக்கம்

## போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களில் 52,000 பேர் கைது

போதைப் பொருள் தொடர்பான குற்றச் சாட்டுக்களில் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதிகளில் இலங்கைத் தீவு முழுவதிலும் 52 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் சிறீலங்கா காவல்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறீலங்காவின் காவல்துறை, சிறப்பு அதிரடிப் படையினர், சுங்கத் திணைக்களத்தினர் மற்றும் கடற்படையினர் ஆகியோரால் ஜனவரி முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் 11ம் திகதி வரை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறீலங்காவின் காவல்துறையின் தகவல்களுக்கமைய, போதைப்பொருள் தொடர்பான 52,157 சம்பவங்களுடன் 52,072 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கஞ்சா போதைப்பொருள் தொடர்பான 32 ஆயிரத்து 673 சம்பவங்கள் தொடர்பில் 32 ஆயி?ரத்து 463 பேரும், ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பான 19 ஆயிரத்து 434 சம்பவங்கள் தொடர்பில் 19 ஆயிரத்து 237 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 4 ஆயிரம் கிலோ கஞ்சாவும், 290 கிலோ ஹெரோயினும் இந்தச் சுற்றி வளைப்புகளின்போது கைப்பற்றப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 220 கிலோ கொக்கேய்ன், 770 மில்லிகிராம் ஒபி முதலான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு 27 வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர். அவர்கள், பாகிஸ்தான், இந்தியா, பிரான்ஸ், இத்தாலி, நைஜீ?ரியா, மாலைதீவுகள் மற்றும் லட்வியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நியூஸிலாந்து சென்றோர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்

படகு மூலம் நியுசிலாந்து நோக்கி பயணித்த 28 பேர் இந்தோனேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு பகுதியை சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இலங்கையை வந்தடைந்த இவர்கள் சிறீலங்காவின் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு மினுவாங்கொடை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல மினுவாங்கொடை நீதவான் சிலனி சதுரந்தி பெரேரா அனுமதித்தார். இதேவேளை, சந்தேகநபர்களை எதிர்வரும் பெப்ரவரி 6ம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிரவிடப்பட்டுள்ளது.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## உலகின் மிகப்பெரிய புத்தக விற்பனை இலங்கையில்

உலகின் மிகப்பெரிய புத்தக விற்பனையாகக் கருதப்படும் பிக் பாட் வுல்வ் புத்தக விற்பனை முதல் தடவையாக இலங்கையில் நடைபெறவுள்ளது. கொழும்பு கண்காட்சி மற்றும் மாநாட்டு மத்திய நிலையத்தில் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 15ம் திகதி வரை இடம்பெறும். உலகம் முழுவதும் வாசிக்கப்




படும் சுமார் 2 ஆயிரம் பிரபல ஆங்கில புத்தகங்கள் உள்ளிட்ட 15 இலட்சத்திற்கும் அதிகமான புத்தகங்கள் இங்கு விற்பனை செய்யப்படும். இந்த புத்தக விற்பனை 24 மணி நேரமும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கிழக்குப் பல்கலைக்கழக இனப்படுகொலை நினைவேந்தல்

கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் தஞ்சமடைந்த தமிழர்களில் 158 பேர் கொல்லப்பட்ட நினைவு தினம் கடந்த 24ம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழக ஆலையடிப் பிள்ளையார் முன்றிலில் நிகழ்வு இடம்பெற்றது. கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், மாணவர்கள் ஆலயத்தில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். உலகத்தமிழ் மாணவர் ஒன்றியம், கிழக்குப் பல்கலைக்கழக கலை காலாசார பீட மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது. 1990ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தமிழர்கள் பலர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்தனர். அவர்களில் 158 பேர் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

## தாயும் இரண்டாவது கணவனும் சிறுவனுக்கு செய்த கொடுமை!

யாழ். பருத்தித்துறை வீடொன்றில் 7 வயது சிறுவனின் கையை அடித்து முறித்த தாயின் இரண்டாவது கணவன் உட்பட அதை வேடிக்கை பார்த்த பெற்ற தாயும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



குறித்த தாக்குதலில் சிறிய தந்தையால் துன்புறுத்தப்பட்ட சிறுவன் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். தவறு ஒன்று செய்ததாக கூறி சிறுவனை தாயின் இரண்டாவது கணவன் என கூறப்படும் நபர் கடுமையாக தாக்கியுள்ளார். இதன் போது சிறுவனின் தாயாரும் இதனைத் தடுக்காது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

## தமிழர் தாயகக் கோட்பாட்டைச் சிதைக்க வடக்கில் சிங்களப் பிரதேச சபை உருவாக்கம்!

தமிழர் தாயகக் கொள்கையை அழிக்கும் சிங்களத்தின் நிகழ்ச்சி நிரலில், வடமாகாணத்தில் வெலிஓயா எனும் சிங்களப் பிரதேச சபையொன்று புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி, வடக்கில் புதிதாக 11 உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றது. நெல்லியடி உட்பட 5 பிரதேச சபைகள் நகரசபையாக மாற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தின் கீழேயுள்ள 5 மாவட்டங்களில் புதிய 1 1 உள்ளூராட்சி மன்றங்களில் 1 மாநகரசபையும், 5 நகரசபைகளும், 5 பிரதேச சபைகளும் புதிதாக உருவாக்கப்படவுள்ளன. வவுனியா நகரசபை மாநகரசபையாகவும், நல்லூர், மானிப்பாய், கிளிநொச்சி, நெல்லியடி மற்றும் சுன்னாகம் பிரதேசசபைகளாகவும், மருதங்கேணி, கண்டாவளை, மடு, ஒட்டிசுட்டான், வெலி ஓயா புதிய பிரதேச சபைகளாகவும் உருவாக்கப்படவுள்ளன. இம்முறை வடக்கு மாகாணத்தில் புதிய சிங்களப் பிரதேசசபையொன்றும் உருவாக்கப்படுகின்றது.

## கூட்டமைப்பு சரியாகச் செயற்பட்டிருந்தால் தமிழ் மக்கள் தனிநாட்டைப் பெற்றிருப்பர்

### குர்திஸ்தானை உதாரணம் காட்டுகின்றார் சட்டத்தரணி சுகாஸ்

தமிழீழ தேசியத் தலைவர் முன்னெடுத்த போராட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக வழியில் கொண்டு சென்றிருந்தால் குர்திஸ்தான் போன்று தமிழர்களும் சுதந்திர தனிநாட்டைப் பெற்றிருப்பர் என சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்தார்.

குர்திஸ்தான் மக்கள் சர்வஜன வாக்கெடுப்பில் சுதந்திர தனிநாட்டுக்கு ஆதரவளித்தமை தொடர்பாகக் கருத்துக் கூறுகையிலேயே சுகாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், தேசியத் தலைவர் முன்னெடுத்த போராட்டம் சுதந்திரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு ஆயுதங்கள் மௌனித்தன.

அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக வழியில், அரசாங்கத்திடம் மண்டியிடாமல், அந்தப் போராட்டத்தை சர்வதேச அரசியலின் பாதையில் சரியாக நகர்த்தியிருந்தால் இன்று நாம் வெற்றி பெற்றிருப்போம். குறிப்பாக, குர்திஸ்தான் மக்களைப் போல எமது மக்களும் சுதந்திர தேசத்தில் கால் பதித்திருப்பர்.

துரோகத் தலைமைகளும் அடிவருடிகளும் தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து அகற்றப்படும்வரை தமிழ் மக்கள் விடிவைப் பெற்றுக்கொள்ள முடியாது.

சர்வதேச அரசியலே ஈழத்தமிழருக்கு மீட்சியைத் தரும் என்பதை புரிந்துகொண்டு, அதற்கேற்ப செயற்படும் அரசியல் தலைவர்களே தமிழருக்குத் தேவையாகும். என சட்டத்தரணி சுகாஸ் மேலும் தெரிவித்தார்.

சட்டத்தரணி சுகாஸ் அண்மையில் ஐ.நா மனித உரிமைகள் அமர்வுக்குச் சென்றிருந்தபோது, அங்கு தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் சரஸ்வதி பூசை கொண்டாடத் தடை

### - முஸ்லிம் பிரதேச செயலாளர் அடாவடி -

மட்டக்களப்பு சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஹனீபா அந்தச் செயலகத்தில் நவராத்திரி பூசைக்குத் தடை விதித்துள்ளார். இப்பிரதேச செயலகத்தில் முஸ்லிம் மதவாதம் தலைதூக்கியுள்ளமையின் வெளிப்பாடாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஐம்பது வரையான தமிழ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றும் மேற்படி பிரதேச செயலகத்தில் நவராத்திரி பூசை நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டமையானது உத்தியோகத்தர்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

நவராத்திரி விழா நடத்துவதற்கு அவரிடம் அனுமதி கேட்டபோது நிர்வாக உத்தியோத்தரிடம் கேட்குமாறு அவர் கூறியுள்ளார். ஆனால், நிர்வாக உத்தியோகத்தரோ பிரதேச செயலாளரிடம் அனுமதி பெறுமாறு கூறியுள்ளார்.

இவ்வாறு இருவரும் மாறி மாறி உத்தியோகத்தர்களை அலைக்கழித்த நிலையில், இறுதியாக, பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழாவை நடத்தவேண்டாம் எனக் கூறிய பிரதேச செயலாளர் ஹனீபா, சுமார் இரண்டு கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள கலாசார மத்திய நிலையத்தில் நடத்துமாறு கூறியுள்ளார்.

இவ்வருடத்திற்கான இஸ்லாமிய மத நிகழ்வை பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்ட பிரதேச செயலாளர் இந்து மத நிகழ்வை நடத்த அனுமதி மறுத்த செயலானது உத்தியோத்தர்களிடையே மட்டுமன்றி பிரதேச மக்களிடையேயும் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் கவனத்திற்குக் கொண்டுவரவுள்ளதாக உத்தியோத்தர்கள் தெரிவித்துள்ளனர்.



## செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** இங்குள்ள சிலர் பத்திரிகைகளில் தமது பெயர்கள் வரவேண்டும் என்பதற்காக ஒன்றுமே தெரியாமல் எமக்கு அ. ஆ... படிப்பிப்பதுபோல கருத்துக்களைக் கூறிவருகின்றனர் என்று மாவை.சோனாதிராசா சீற்றத்துடன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** உங்களுக்கு எல்லாமே தெரியுமா..? தெரிந்துகொண்டா தமிழ் மக்களுக்கு இவ்வளவு எதிர்கால ஆபத்துக்களையும் ஏற்படுத்துகின்றீர்கள்..?

★★★★ ★★★★

**செய்தி:-** புதிய அரசமைப்பில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டமை எமக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்னவென்று ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை விளக்குவாரா..?

★★★★ ★★★★

**செய்தி:-** தமிழ் மக்கள் மத்தியில் விடுதலைத் தீயை விதைத்த தியாக தீபம் திலீபனின் தியாகத்துக்கு இன்னமும் பரிகாரம் கிடைக்கவில்லை என சிறீலங்கா எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** உங்களைப் போன்றவர்கள் இருக்கும்போது எப்படிப் பரிகாரம் கிடைக்கும்..?

★★★★ ★★★★

**செய்தி:-** வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் 2012ம் ஆண்டு இடம்பெற்ற கலவரம் அதன்போது கொலை செய்யப்பட்ட 27 கைதிகள் தொடர்பிலான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**எழும் கேள்வி:-** 1983 வெலிக்கடைப் படுகொலையை எப்போது புலனாய்வு செய்யப்போகின்றீர்கள்..?

★★★★ ★★★★

**செய்தி:-** இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நிலவிய போரினை முடிவுக்குக் கொண்டுவந்த பெருமை தன்னையே சேரும் என சிறீலங்கா முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** இனப்படுகொலையில் உங்களுக்கு முழுமையான பங்கிருக்கென்பதை ஒத்துக்கொள்கின்றீர்களா..?

★★★★ ★★★★

**செய்தி:-** அத்தியவசியமில்லாத மற்றும் சுகாதாரத்துக்கு தீங்கு ஏற்படுத்தும் அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

**எழும் கேள்வி:-** சீனாவிடம் இதற்கு அனுமதி பெற்றுவிட்டார்களா..?

★★★★ ★★★★

**செய்தி:-** கூட்டு அரசமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வருகின்றது. அதை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமதாக்கிக் கொள்வதற்கு மகிந்த அணி திட்டம் போட்டு வருகின்றது.

**எழும் கேள்வி:-** அப்போ சம்பந்தரின் கதி(ரை)..?

★★★★ ★★★★

**செய்தி:-** பொலிஸ் திணைக்களத்தில் சேர்ந்து கொள்வதில் தமிழர்கள் நாட்டம் காட்டுவதில்லை என்று சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** விருப்பத்துடன் சேர்வதற்கு அது என்ன தமிழீழக் காவல்துறையா..?

★★★★ ★★★★

**செய்தி:-** வாட்ஸ் அப் மூலம் செய்தி மற்றும் காணொளி பரிமாற்றம் செய்ய சீன அரசு தடை விதித்துள்ளது.

**எழும் கேள்வி:-** இதற்கு வாட்ஸ் அப்பையே தடை செய்திருக்கலாமே..?

★★★★ ★★★★

**செய்தி:-** சிறீலங்காவின் இறைமையில் எந்தவொரு சக்தியும் தலையீடு செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தி சிங்கள அமைப்புக்கள் ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையின் முன்றலில் போராட்?டம் நடத்தின.??

**எழும் கேள்வி:-** தமிழினத்தை அழிப்பதற்கு வெளிநாட்டு உதவிகள் தேவை, இப்போது தலையிடக்கூடாதோ..?

‘கிழக்கில் இருந்து’ எழுவான்

# அத்துமீறிய காணிகள் அபகரிப்பினால் முறிவடையும் தமிழ் - முஸ்லிம் உறவு



கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்ஸிம் உறவு என்பது பிட்டும் தேங்காய்ப்பூப் போன்றது என கூறுவர். ஆனால் அந்த உறவு 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர்தான், அவ்வாறு இருந்திருக்க முடியும். 80க்கு பின்னரான காலப் பகுதியில் குறிப்பாக முஸ்லிம் கொங்கிரஸ் என்ற அரசியல் கட்சி உதயமாகிய பின்னர் கொழும்பு அரசாங்கத்தின் தேவைக்காக இரு இனங்களிடையே பாரிய இடைவெளி ஏற்பட்டதெனலாம். சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களினால் மிகவும் திட்டமிட்ட முறையில் தமிழ் - முஸ்லீம் தரப்பிடையே முறுகலை ஏற்படுத்தி அதனை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டது சிங்களம்.

தமிழ் - முஸ்லிம் கூட்டிணைவு சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் புரிந்துகொண்ட சிங்கள பேரினவாத சக்திகள், தமிழ் - முஸ்லிம் தரப்பிடையே கலவரத்தையும் ஏற்படுத்தினர். இதற்கு துணைபோன முஸ்லிம் தலைவர்கள் எனக் கூறப்படும், குறிப்பாக மறைந்த அஷ்ரப் போன்றவர்கள் கொழும்பு அரசாங்கத்தின் பின்புலத்தில் சிங்களப் படைகளின் துணையோடு தமிழர்களை படுகொலை செய்யவும் துணிந்தனர். இவ்வாறான படுகொலைச் சம்பவங்கள் தமிழர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. இதனால் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முஸ்லிம்கள் தமிழர்களின் பூர்விகக் காணிகளை அடாத்துச் செய்தனர்.

மட்டு - அம்பாறை மாவட்டங்களில் பல தமிழ் கிராமங்களின் அடையாளங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிங்களவர்களினால் அபகரிக்கப்பட்ட கிராமங்களை விட முஸ்லிம்களினால் அடாத்தாக பிடிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கதான் அதிகம். கடந்த காலங்களில் சிங்களவர்களும், தமிழர்களும் நிலத்திற்காக அடிபட, இடையில் இருந்த முஸ்லிம்கள் நோகாமல் எவ்வித பாதிப்புமின்றி நிலங்களை அபகரித்தனர். இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்திலிருந்து (1990 ஆம் ஆண்டு) அம்பாறை மாவட்டத்தில் அட்டப்பள்ளம், நிந்துவூர், சம்மாந்துறை, கல்முனை போன்ற பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 90 வீதமான குடியிருப்பு மற்றும் பயிர்ச் செய்கை காணிகள் தமிழர்களுக்குச் சொந்தமானது.

அவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர்ப்பற்று, செங்கலடி, காத்தான்குடி போன்ற பிரதேச செயலாளர் பிரிவில் பல தமிழ் கிராமங்கள் பறிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கோறளைப்பற்று மத்தி எனும் பிரதேச செயலாளர் பிரிவு தற்போதைய கிராமிய வீடமைப்பு பிரதியமைச்சரான எம்.எஸ்.எஸ் அமீர அலியினால் கடந்த 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தியாவட்டவான், காவத்தமுனை, மைலங்கரச்சை, குப்பிலாகொடி, ஆலங்குளம் போன்று இன்னும் பல தமிழ் கிராமங்கள் உள்ளடங்கிய கிராமங்களைக் கொண்டு தமிழர்களின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் இப்பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டது.

ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆறுமுகத்தான் குடியிருப்பு, தளவாய், சவுக்கடி, புகையிரத பாதை அருகில் போன்ற காணிகள் தற்போது 2007 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மட்டக்களப்பு மாவட்டம் பறிபோன பின்னர் முஸ்லிம்களினால் அபகரிக்கப்பட்டு பல முஸ்லிம் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. தற்போதும் கொழும்பை மையப்படுத்திய அரசியல் பின்புலத்தில் காவல்துறையின் உதவியுடன் தமிழர்களின் பூர்விக காணிகளுக்கு போலியான உறுதிப்பத்திப்பத்திரங்கள் உருவாக்கப்பட்டு காணிகள் அடாத்துச் செய்யப்படுகின்றன.

அதுமாத்திரமல்ல, பொருளாதார ரீதியாக பின்னடைவில் உள்ள ஒரு சில தமிழர்களை விலைக்கு வாங்கியும் காணிகள் அபகரிக்கப்படுகிறன. இதற்காக காணி உரிமத்தை மாற்றியமைப்பதற்காக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் காணிப் பிரிவுக்கு முஸ்லிம் மதத்தவர் ஒருவர் அதிகாரியாக நியமிக்கப்பட்டு அதனூடாக உண்மைப் பிரதி (தாய் உறுதி) அகற்றிவிட்டு புதிய முஸ்லிம் பெயருடைய பிரதியை இணைப்புச் செய்யும் நடவடிக்கையும் இடம்பெற்றுவருகிறது.

தமிழர் நிலம் அபகரிக்கப்படுவதற்கு இவ்வாறான விடயங்கள் பலவற்றை குறிப்பிடலாம். மட்டக்களப்பு மாவட்டம், கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆலங்குளம் பாடசாலை வீதியை சேர்ந்த திருமதி வேலன் மல்லிகா என்பவருக்குச் சொந்தமான ஆலங்குளம் குப்பிளாக்கொடி கண்டத்தில் உள்ள L/KPN/LO/2531 இலக்கமுடைய அரசால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திர விவசாயக்காணி 05 ஏக்கரையும் ஒட்டமாவடி சுப்ராஸ்டோர்ஸ் சேர்ந்த மீராமூகைதீன் அஜ்மல் என்பவர் அத்துமீறி 24.09..2016 அன்று பிடித்துள்ளார். இதனை வாழைச்சேனை காவல் நிலையத்தில் முறையிட்டும் காவல்துறையினர் பரபட்சமாக நடந்து கொண்டனர். வழக்குத் தொடரவில்லை.

மட்டக்களப்பு மாவட்டம், கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆலங்குளம் எல்லை வீதியை சேர்ந்த திருமதி கண்ணமுத்து அரசமணி என்பவருக்கு சொந்தமான ஆலங்குளம் குப்பிளாக்கொடி கண்டத்தில் உள்ள எனது KPN/LO/6095 இலக்கமுடைய அரசால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திர விவசாயக்காணி 05 ஏக்கரையும் ஒட்டமாவடியை சேர்ந்த அத்துல் ரகுமான் என்பவர் அத்துமீறி 24.09.2016 அன்று பிடித்துள்ளார். பரபட்சமாக நடந்து கொள்ளும் காவல்துறையினர் வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் 66இன் கீழ் PCA 113 /2016 என்னும் இலக்கத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது ஓகஷ்ட் 2017. தற்போது ஆட்சி செய்பவரே காணிக்கு உரித்தாளர் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆலங்குளம் பாடசாலை வீதியை சேர்ந்த திரு நாகமணி இளையதம்பி என்பவருக்கு சொந்தமான 1957 ஆண்டு ஆலங்குளம் குப்புளாக்கொடி கண்டத்தில் 05 ஏக்கர் நெற்காணி காடு வெட்டி துப்பரவு செய்து பராமரித்து வரும்போது 29.11.1966. L/KPN/LO/6089இலக்கமுடைய காணி அனுமதிப்பத்திரம் கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட காணியை செம்மண்ஓடை முறாவோடையை சேர்ந்த முஸ்தபா அம்துல் ரகுமான் என்பவர் அத்துமீறி பிடித்துள்ளார். இவ்வாறு பல இடங்களைக் குறிப்பிடலாம். அனைத்து அபகரிப்புக்களும் அரசியல் மற்றும் காவல்துறையினரின் அங்கீகாரத்துடன்தான் இடம்பெற்றுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் புதிய வரைபடம்

இலங்கையின் புதிய வரைபடம் அடுத்த வருட நடுப்பகுதியில் வெளியிடப்படவுள்ளதாக சிறீலங்காவின் அளவையாளர் நாயகம் பீ.எல்.பீ உதயகுமார குறிப்பிட்டுள்ளார். நாட்டின் நிலப்பரப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுடன் இந்த புதிய வரைபடம் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அண்மைய அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் எல்லைப் பகுதிகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக ஹம்பாந்தோட்ட துறைமுகத்தினாலும் கொழும்பு துறைமுக நகரத்தினாலும் இலங்கையின் நிலப்பரப்பில் பெரியளவிலான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த புதிய வரைபடத்தை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்ட துறைமுகத்தை உருவாக்குவதற்காக, இலங்கையின் நிலப்பகுதியில் கடல் நீர் நிரப்பப்பட்டதும், கடற்பகுதியில் மண் நிரப்பப்பட்டு கொழும்பு துறைமுக நகரம் உருவாக்கப்பட்டுள்ளதால், தரைப்பகுதியின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதுமான சூழலில் புதிய வரைபடம் இந்த மாற்றங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சிங்களப் பெயர் வைக்குமாறு அழுத்தம் அம்மாச்சி உணவகம் சத்தமின்றித் திறப்பு

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் நடத்தப்படும் அம்மாச்சி உணவகம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது. சிறீலங்கா அரசின் அழுத்தத்தால் திறப்பு விழா, நிகழ்வுகள் ஏதுமின்றி அமைதியாக இயங்கியது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் விவசாயக் கண்காட்சி திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயப் பயிற்சி கல்லூரியில் ஆரம்பமானது. அதில் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக அம்மாச்சி உணவகம் ஊடாக கண்காட்சியில் பங்கேற்ற அனைவருக்கும் உணவுகள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண விவசாய அமைச்சால் அம்மாச்சி உணவகங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இடம் தெரிவாகியிருந்த போதும் அதற்கான நிதியை வழங்க சிறீலங்கா அரசு நிபந்தனை விதித்தது. அதனை சிங்களப் பெயரில் ஆரம்பிக்குமாறு, அழுத்தம் கொடுத்ததை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையிலேயே அம்மாச்சி உணவகம் பெயர்ப் பலகையின்றி எந்தவித ஆரவாரம் இல்லாது யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.




**கேள்வி:–** இந்த உலகில் எதுதான் நிலையானது..?

கதிர்காமு சயந்தன் பரிஸ் பிரான்ஸ்

**பதில்:–** 'இந்த உலகில் எதனை இழந்தாலும் உன்னிடம் ஒன்றே ஒன்று மட்டும் எஞ்சியிருக்கும். அந்த ஒன்றையும் நீ இழந்தால்தான் உன் நிலை நிலையில்லாமல் போகும். அந்த ஒன்றை இழக்காத வரைக்கும் உனக்கு எந்தவொரு இழப்பும் இழப்பே இல்லை. அது 'நம்பிக்கை'. இந்த உலகில் நிலையானது ஒன்றே ஒன்றுதான். அது நம்பிக்கை.' இதனை நான் சொல்லவில்லை. கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானி தேல்ஸ் மரிக் என்பவர் சொன்னது.

**கேள்வி:–** என் அழகைப் பலரும் கிண்டல் செய்கின்றார்கள். அவர்களிடம் இருந்து எப்படித் தப்பிப்பது..? ஒரு அருமையான வழி சொல்லுங்களேன்...

எம்.மதியழகன் இலண்டன் பிரித்தானியா

**பதில்:–** மனித உயிர்களின் பரிமாண வளர்ச்சியைக் கண்டறிந்து கூறியவர் பிரித்தானிய ஆராய்ச்சியாளர் சார்ள்ஸ் டார்வின். குரங்கில் இருந்து மனிதன் வந்ததாக இவர் கூறியதுதான் பலரையும் குறிப்பாக அப்போதைய மதவாதிகளை கடும் கோபத்திற்கு உள்ளாக்கியது. தாங்கள் கட்டமைத்து வைத்திருக்கும் மதக் கோட்பாடுகளையே முழுப்பொய்யாக்கிவிடும் என்று பயந்த மதத் தலைவர்கள் அவரைப் பைத்தியம் என்று கூறிக் கல்லால் அடிக்கும் அளவிற்கும் போனார்கள். இதில் ஒருவர், "குரங்கிலிருந்துதான் மனிதன் உருவாகி இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு உங்கள் தோற்றத்தை வைத்துத்தான் நீங்கள் வந்திருக்கின்றீர்களா?" என்று நக்கலாக அவரிடமே நேரடியாகக் கேள்வி எழுப்பினார். அப்போது சற்றும்கூடக் கோபப்படாத டார்வின்,



"நான் கண்டுபிடித்த ஆராய்ச்சிக்கு, நானே ஆதாரமாக இருக்கிறேன் என்பது எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய விடயம்" என்றார். நக்கலாகக் கேள்வி கேட்டவர் வெட்கமடைந்து வாயடைத்துப் போனாராம்.

நீங்களும் பதிலுக்கு அவர்களை கோபமடையும் வார்த்தைகளைப் பயன்படுத்தாமல், அவர்கள் வெட்கமடையும் வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். அவர்களாகவே கேலி செய்வதை நிறுத்திவிடுவார்கள்.

**கேள்வி:–** ஆண்கள் எல்லோரிடமும் ஆண்மை என்ற திமிர் நிறைந்திருக்கின்றதே..? இது குறையாதா..?

கற்பகம் சிவநாயகம் பிரான்ஸ்



**பதில்:–** ஆண்மை என்பது திமிர் அல்ல. அது எத்தனை உன்னதமானது என்பதைப் புரிந்துகொள்ள முதலில் ஆண்கள் அனைவரும் எஸ்.பொ. (எஸ்.பொன்னுத்துரை) அவர்கள் எழுதிய 'ஆண்மை' என்ற சிறுகதைத் தொகுதியைக் கட்டாயம் ஒருமுறையாவுதல் படிக்கவேண்டும். ஆண்மை என்றால் எத்தனை அற்புதமானது என்பதை ஒவ்வொரு கதையிலும் எஸ்.பொ. போன்று வேறு யாரும் சொல்லியிருப்பார்களா தெரியவில்லை. அதனைப் படித்தபின் ஆண்களிடம் திமிர் இருக்காது. வெறும் ஆண்மை தான் இருக்கும்.

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

# சமூகம் சீரழிய அழிவே மிஞ்சும்!

யாழில். கடந்தவாரம் புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பு எல்லோரையும் சிந்திக்க வைத்துள்ளது. ஒவ்வொருவரும் தமக்கு சாதகமாக தமது சிந்தனைகளை முன்வைத்துக் கொண்டு இருப்பதை அவதானிக்க முடிகிறது. சமூக வலைத் தளங்கள் கூட தமது கருத்துக்களைத் தாராளமாக எழுதிவருகின்றன.

ஊடகங்களும் குறித்த சம்பவத்தைத் தாராளமாகவே எழுதிக்கொண்டிருக்கின்றன. நாளிதழ்கள் வார இதழ்கள், மாத இதழ்கள் எல்லாம் தமது கருத்துக்களை பக்கம் பக்கமாக நிழற்படங்களுடன் எழுதி வருகின்றன. காணொளி ஊடகங்களும் விதிவிலக்கல்ல.



ஆனால், யாழ்.குடாவில் இருந்து வெளிவரும் நாழிதழ் ஒன்று தனது ஆசிரிய தலையங்கத்திற்கு 'சமூகம் சீரழிந்தால் அழிவுகள்தான் மிஞ்சும்' என்று தலைப்புத் தீட்டியுள்ளது. கொழும்பில் இருந்து வெளியாகும் நாழிதழ் ஒன்றும் 'நல்லதொரு படிப்பினையாக அமைந்திருக்கும் தீர்ப்பு' என்று ஆசிரிய தலையங்கத்தைத் தீட்டியுள்ளது. அதாவது குறித்த தண்டனை தற்போது தமிழர் தாயகத்தில் இடம்பெறுகின்ற வன்கொடுமைகளுக்கும் அத்துமீறல்களுக்கும் எச்சரிக்கையாக அமையும் என்ற கருத்துப்பட குறித்த ஆசிரிய தலையங்கம் அமைந்துள்ளது.

முதலாவதாகக் குறிப்பிட்ட ஆசிரிய தலையங்கத்தின் முழுவடிவத்தைப் பார்த்தால்,

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலைக் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட ஏழு பேருக்கு நேற்றையதினம் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிப்பதாகத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டபோது மரண தண்டனை பெற்றவர்களும் அவர்களின் உறவினர்களும் நீதிமன்றில் கதறி அழுதனர்.

இந்த அழுகை உலக மக்களுக்கு ஒரு பெரும் செய்தியைச் சொல்கிறது. ஆம், தனி மனிதர்கள் தங்களை நெறிப்படுத்தி வாழுகின்ற அறத்தைப் பின்பற்றாவிட்டால், தனி மனிதர்களை மக்கள் சமூகம் திருத்த முற்படாவிட்டால், மக்கள் சமூகத்தில் போதைவஸ்து, ஆபாசப் படங்கள், சமூக விரோத செயல்கள் மலிந்து போனால் இந்த மண்ணில் வாழும் அனைவரும் கவலை கொள்வதும் கண்ணீர் விடுவதுமே முடிவாக இருக்கும்.

மாணவி வித்தியாவைக் கொலை செய்ததால் வாழவேண்டிய அந்த மாணவி அழிக்கப்பட்டார். அதனால் அவரின் குடும்பம் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்கிறது.

அந்த மிகப்பெரும் அக்கிரமத்தைச் செய்தவர்கள் என்று குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள் மரண தண்டனை பெற்றுள்ளனர்.

இவர்களின் மரண தண்டனை அவர்களின் குடும்பங்களை நிச்சயம் பரிதவிக்க வைக்கும்.

ஆக, கூடாத கூட்டம், சமூகச் சீரழிவில் ஈடுபடுவோரின் உறவு, பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காத மிருகத்தனம் என எல்லாமும் சேர்ந்து தந்தது என்ன? என்பதை இந்த நாடும் இந்த உலகமும் மக்கள் சமூகமும் சிந்திக்க வேண்டும்.

இந்தச் சிந்தனை ஏற்படுமாக இருந்தால், தம் பிள்ளைகள் மீது பெற்றோர் கண்ணும் கருத்துமாக இருப்பதும் பாடசாலைகள் உள்ளிட்ட சமூகக் கட்டமைப்புகள் அன்பு, அறம், அகிம்சை, கொல்லாமை, கள்ளுண்ணாமை உள்ளிட்ட அத்தனை அறக்கருத்துக்களையும் போதித்து தனிமனிதர்களைப் பக்குவப் படுத்துவதிலும் கூடிய கரிசனை கொள்ள வேண்டும்.

இதேவேளை சமூகச் சீரழிவுகளை அடியோடு கட்டுப்படுத்துவதில் சமூக நிறுவனங்கள் மிக உச்சமாகச் செயற்படுதல், போதைவஸ்து உள்ளிட்ட சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதில் காவல் திணைக்களம் உள்ளிட்ட அரச அமைப்புக்கள் பொறுப்புடன் செயலாற்றுதல் என்பனவும் வலிமை பெறும்போதுதான் ஒட்டு மொத்த மக்கள் சமூகத்தில் குற்றச் செயல்கள் நலிந்து போகும்.

இதுவே மக்கள் சமூகம் கண்ணியத்துடன் வாழ்வதற்கு உதவும். போருக்குப் பின்பாக எங்கள் மண்ணில் ஏற்பட்டுவரும் சமூகச் சீரழிவுகளை அடியோடு வேரறுத்து எங்கள் எதிர்காலச் சந்ததியைக் காப்பாற்ற பொருத்தமான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக குற்றம் செய்தால் அதன் பின் விளைவுகள் எவ்வாறாக இருக்கும் என்பதை தெளிவாக அறிய வைத்து எங்கள் சமூகத்தை நல்வழிப்படுத்துவது கட்டாயமானதாகும்.

தொடர்ச்சி 22ம் பக்கம்




– கந்தரதன்


தமிழீழ தேசிய
மாவீரர் நாள்
பிரான்சு
Journée des Héros
27.11.2017
திங்கட்கிழமை
நேரம் 12 :30
நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம் அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.
-தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள்-
இடம்: EUROSITES LES DOCKS DE PARIS
50 Avenue du Président Wilson,
93210 La Plaine Saint Denis
Aubervilliers Front Populaire 12
BUS 153 302 Pont Hainguerlot
தொடர்புகளுக்கு:
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு
0143150421

# தியாகி திலீபன் நினைவாக தாயகத்தில் மரம் நடுகை

தியாகி திலீபனின் 30 ஆவது நினைவு தினமான கடந்த வியாழக்கிழமை தமிழர் தாயகத்தின் பல இடங்களில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக தன்னை உருக்கிய தியாகச் செம்மலுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த மரம் நடுகைகள் இடம்பெற்றன.

பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பொது இடங்கள், ஆலயங்கள் போன்ற இடங்களில் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களின் ஒழுங்குபடுத்தலில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெற்றன.

2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த வருடம் தமிழர் தாயகத்தில் தியாகி திலீபனுக்கான நினைவேந்தல் பெருமெடுப்பில் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# தியாகதீபம் திலீபன் 30வது ஆண்டு நினைவு

## ஐ.நா. மனித உரிமைகள் சபை உட்பட தமிழர்கள் வாழும் நாடுகளெங்கும் எழுச்சி நினைவுகள்





இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக் கையை முன்வைத்து மரணித்த தியாக தீபம் திலீபனின் 30வது ஆண்டு நினைவு தமிழர் தாயகம், தமிழகம் மற்றும் புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளெங்கும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக தியாகி திலீபன் சாவைத் தழுவிய நல்லூர் வீதியில் மிகவும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்ற நிகழ்வில், முன்னாள் போராளி ஒருவர் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தூக்குக் காவடி எடுத்துள்ளார். நீண்ட காலத்தின் பின்னர் திலீபனின் இந்த நிகழ்வுகளால் தமிழர் தாயகமே எழுச்சி கொண்டது. பிரதான நிகழ் வாக நல்லூரில் அஞ்சலி நிகழ்வுகள் புரட்சி பாடல்களுடன் நடைபெற்றன. இதனோடு யாழ்.பல்கலைக்கழகத்திலும் எழுச்சியுடன் நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

நல்லூரில் நடைபெற்ற நிகழ்வில் ஆரம்ப நிகழ்வு நல்லூரின் வடக்கு வீதியில் தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த இடத்தில் அவரது உயிர் பிரிந்த நேரம் காலை 10.58 மணிக்கு குறித்த இடத்தில் அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதன்போது குறித்த இடத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் அந்த இடத்தில் பல மணி நேரம் திரண்டிருந்தார்கள்.

இதனை அடுத்து ஊர்வலமாக திலீபனது நினைவு தூபி அமைந்துள்ள இடத்தை நோக்கி வந்தார்கள். நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு பின்புறமாக அமைந்துள்ள நினைவுத் தூபியில் மு.ப 11.10 மணிக்கு ஆரம்பமாகின. அங்கு பொது ஈகைச் சுடர் ஏற்றல், மலர் மாலை அணிவித்தல், மலர் வணக்க நிகழ்வுகள், உயிர்த்தியாகம் செய்த மாவீரர்கள் பொது மக்களுக்கு அகவணக்கம், நினைவுரைகள், கவிதாஞ்சலி நிகழ்வு எனும் ஒழுங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது கைதடியில் இருந்து ஆரம்பித்த குறித்த காவடி நல்லூரை வந்தடைந்து அங்குள்ள திலீபனது நினைவு தூபிக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். இந்த உணர்வுபூர்வமான தருணம் அங்கிருந்தவர்களை கண்ணீர் சிந்த வைத்தது.

இதேவேளை, நல்லூர் பின் வீதியிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு அண்மையில் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் விசேட அதிரடிப்படையினர் மக்களை அச்சுறுத்தும் வகையில் குழுமிநின்று நிகழ்வுகளைக் கண்காணித்துள்ளனர். இதன் காரணமாகத் திலீபனின் நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத் தச்சென்ற பொதுமக்கள் பலர் அச்சத்துடன் அங்கிருந்து திரும்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பிரதான அரங்கத்தில் கடந்த 26ம் திகதியன்று வைகோ அவர்கள் இரண்டு முறை பேசினார். அப்போது அவர் தியாகி திலீபனுக்குத் தமிழர்கள் ஆகிய நாங்கள் வீர வணக்கம் செலுத்துகிறோம் என்று தெரிவித்தார். இது குறித்து அவர் அங்கு பேசியபோது, திலீபனின் தியாகம் இந்த நாள், செப்டம்பர் 26ம் திகதி தமிழர்களுக்குத் துக்க நாள் ஆகும். 1987 செப்டம்பர் 26ம் திகதியன்றுதான் தமிழ் ஈழத்தின் மாவீரனும் தியாகியுமான திலீபனின் உயிர்ச்சுடர் அணைந்தது. இலங்கையின் தமிழர் தாயகத்தில், வலுக்கட்டாயமாகக் குடியேற்றப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை அகற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட ஐந்து கோரிக்கைகளுக்காக, செப்டம்பர் 15 இல் உண்ணாவிரதத்தைத் தொடங்கி, 12 ஆம் நாள் தியாகதீபம் திலீபன் உயிர் நீத்தார்.

அயர்லாந்து மக்களின் விடுதலைக்காக மகத்தான உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய தியாகி பாபி சாண்ட்ஸ், 1981 மே 5 ஆம் தேதியன்று உயிர் நீத்தார். உலகெங்கிலும் உள்ள மனித உரிமைக் காவலர்கள் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். எங்கள் மாவீரன் திலீபன், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மன்னன் கணைக்கால் இரும்பொறை, சிறைச்சாலையில் அவமதிக்கப்பட்டதற்காக தண்ணீர் பருகாமலேயே உயிர் நீத்ததைப் போல, திலீபனும் தன் ஆவியைத் தந்தார். மனித உரிமைகள் மீறலின் விளைவுதான் திலீபனின் சோக மரணம் ஆகும் என்று குறிப்பிட்டார்.



*தியாக தீபம் திலீபனின் 30ம் ஆண்டு நினைவுநாளையொட்டி கடந்த 26ம் திகதி சென்னை வளசரவாக்கத்தில் உள்ள நாம் தமிழர் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் தியாகத்தீபம் திலீபன் அவர்களின் உருவப்படத்திற்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் சுடரேற்றி மலர்வணக்கம் மற்றும் வீரவணக்கம் செலுத்தினார்.*

# இவர்களும் அவர்களும்...

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் ஜேர்மன் மனித உரிமை ஆய்வாளரும் சட்டத்தரணியுமான அன்ரியஷ் சென்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அத்துடன், அம்மக்களுடன் மக்களாக அவர் போராட்டத்திலும் பங்கேற்றார். ஆனால், நம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளோ ஏதோ வேற்று நாட்டுப் பிரதிநிதிகள்போல், அந்த மக்களின் போராட்டத்திற்குச் சென்று கதிரையில் அமர்ந்துகொண்டு, நாலு கேள்வி கேட்டுவிட்டு, பெரும் வேலை இருப்பதுபோல் நான்கு நிமிடத்திலேயே அந்த இடத்தில் இருந்து பறந்துவிடுவார்கள். இதுதான் அவர்களுக்கும் இவர்களுக்கும் உள்ள வித்தியாசம். வாக்களித்த மக்களுடன் சேர்ந்து போராட இவர்கள் தயாரில்லை. எங்கிருந்தோ வந்தவர் அந்த மக்களுடன் இணைந்து போராடுகின்றார். இதுதான் அவர்களுக்கும் இவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.









# மலரும் சுதந்திர பூமியில்

1

கலாநிதி சிறீஸ்கந்தராஜா

# எதிர்மறையான மனப்படிமங்களுடன் தொடங்கிய பயணம்

05.09.2017: நான் பயணித்த வானூர்தி துருக்கியின் இஸ்ரான்புல் பன்னாட்டு விமான நிலையத்தில் தரைதட்டிய பொழுது நேரம் பின்னிரவு 11:50 மணியை எட்டியிருந்தது. தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் இஸ்ரான்புல் நகரை வானூர்தி வட்டமிட்ட பொழுது கீழே மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட நகரம் பளபளத்துக் கொண்டிருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. ஆனாலும் அதனையிட்டு நான் ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி கண்ட துருக்கியின் முன்னணி நகரம் ஒன்று பின்னிரவு வேளையில் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பது வழமையான ஒன்றே.

மறுபுறத்தில் எனது இறுதித் தரிப்பிடமான குர்திஸ்தானின் சுலைமானியா நகரம் பற்றிய எனது மனப்படிமம் அப்படி இருக்கவில்லை. சதாம் உசேனின் காலத்தில் அழிவின் விளிம்பிற்கு இட்டுச் செல்லப்பட்ட ஒரு தேசம் குர்திஸ்தான். மேற்குலக ஊடகங்களில் குர்திஸ்தான் பற்றிக் காண்பிக்கப்பட்ட காட்சிகள், அது ஏதோ மலையும், மணற்திட்டிகளும் நிறைந்த ஈராக்கின் பாலைவனப் பிராந்தியம் என்ற படிமத்தையே நீண்டகாலமாக எனது மனத்திரையில் ஏற்படுத்தியிருந்தது.

இலண்டனில் இருந்து நான் புறப்படும் முன்னர் என்னோடு தொலைபேசியில் உரையாடும் பொழுது எனது குர்தி நண்பர் கலாநிதி இப்ராகிம் மாலாசாடா அவர்கள் நம்பிக்கை ஊட்டும் வகையில் பின்வருமாறு கூறியிருந்தார்: "குர்திஸ்தானுக்கு நீங்கள் மேற்கொள்ளப் போகும் பயணம் நிச்சயம் உங்களுக்கு மனமகிழ்ச்சியைத் தரும் ஒன்றாகவே இருக்கும். தனியரசுக்காகப் போராடும் தமிழர்களும், குர்தி மக்களுக்கு ஒருவருக்கொருவர் பக்கபலமாக நிற்பதற்கும், இரு தரப்பினருக்கும் இடையில் உறவுப்பாலத்தை ஏற்படுத்துவதற்கும் உங்கள் பயணம் உதவிபுரியும்." ஆனாலும் குர்திஸ்தான் பற்றி என்னிடம் காணப்பட்ட எதிர்மறையான மனப்படிமங்களை அவரது வார்த்தைகள் மாற்றவில்லை.

ஏதோ ஒரு வரண்ட, புழுதி பறக்கும், அனல் காற்றால் சூழப்பட்ட பிராந்தியத்திற்குச் செல்லும் கற்பனையிலேயே எனது மனம் இலயித்துக் கொண்டிருந்தது. குர்திஸ்தானின் காலநிலை பற்றியும், புவியியல் அமைப்புப் பற்றியும் நான் வினவிய பொழுது இப்ராகிம் அவர்கள் கூறினார்: "எங்கள் நாடு ஒரு அழகான பச்சைப் பசேலென்ற பூமி. சித்திரை மாதத்தில் அங்கு வந்தால்தான் அதன் முழுமையான அழகை நீங்கள் தரிசிக்கலாம்."

இதனை என்னால் துளியளவுகூட நம்ப முடியவில்லை. தன் தந்தையர் பூமி மீது கொண்ட ஆழ்ந்த காதல் காரணமாக இப்படி இப்ராகிம் மிகைப்படுத்திக் கூறுகின்றார் என்றே எண்ணிக் கொண்டேன். இப்ராகிம் அவர்களின் கூற்று எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை உறுதி செய்வதற்காக குர்திஸ்தான் மாநில அரசாங்கத்தின் இணையத்தளத்தில் போய் அதன் புவியியல் அமைப்புப் பற்றி வாசித்துப் பார்த்த பொழுது கூட, தமது தந்தையர் பூமி பற்றி அவர்கள் அழகாக விபரித்திருந்ததை என்னால் நம்ப முடியவில்லை: வெளிநாட்டவர்களை கவர்ந்திழுப்பதற்காக மேற்கொள்ளப்படும் கவர்ச்சிப் பரப்புரை என்றே அதனை நான் புறந்தள்ளினேன்.

மீண்டும் என் நினைவுகள் இஸ்ரான்புல் விமான நிலையத்தின் பக்கம் திரும்பின: வானூர்தியின் கதவுகள் திறக்கப்பட்டு, இஸ்ரான்புல் விமான நிலையத்தின் ஓடுபாதையில் நான் கால் பதித்த பொழுது இதமான காற்று என் முகத்தை வருடிச் சென்றது. குர்திஸ்தானுக்கான எனது பயணம் இதமாக அமையப் போவதைக் கட்டியம் கூறுவது போன்றே அது இருந்தது. ஆனாலும் அதனை ஏற்பதற்கு என் மனதில் ஏற்பட்டிருந்த படிமம் இடமளிக்கவில்லை.

பன்னாட்டு அரசறிவியல் கற்கையில் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடையாத, அல்லது வெளிநாட்டு ஏற்றுமதிப் பொருளாதாரத்தை அதிகளவில் நம்பியிருக்கும் கீழைத்தேய நாடுகளை 'பனானா ரிப்பப்ளிகஸ்' (வாழைப்பழக் குடியரசுகள் என்று தமிழில் பொருள்படக்கூடியது) என்றுதான் ஏளனமாக அழைப்பார்கள். குர்திஸ்தான் பற்றிய எனது மனப்படிமமும் ஏறத்தாள அப்படித்தான் இருந்தது. இலண்டனில் இருந்து ஒரு பனானா ரிப்பப்ளிக்கிற்கு, அதுவும் தனிநாடாக அங்கீகாரம் பெறாத ஒரு பனானா மாநிலத்திற்குச் செல்வதாக நான் எண்ணிக் கொண்டேன். குர்திஸ்தானின் அரசியல் தலைநகரான ஏர்பில், மற்றும் அதன் பண்பாட்டுத் தலைநகரான சுலைமானியா ஆகிய நகரங்களில் பன்னாட்டு விமான நிலையங்கள் இருக்கின்ற பொழுதும், ஐரோப்பிய நாடுகளில் இருந்து அங்கு நேரடி விமானப் போக்குவரத்துக்கள் எவையும் இடம் பெறுவதில்லை. பெரும்பாலான விமானப் போக்குவரத்துக்கள் துருக்கி அல்லது ஏனைய முன்னணி மத்திய கிழக்கு நாடுகளின் பன்னாட்டு விமான நிலையங்கள் வழியாகவே நிகழ்வதுண்டு.

இலண்டனில் இருந்து புறப்படும் பொழுது எனது எண்ணத்திரையில் இன்னுமொரு படிமமும் ஏற்பட்டிருந்தது. துருக்கியின் இஸ்ரான்புல் விமான நிலையத்தில் இருந்து குர்திஸ்தானின் சுலைமானியா நகரம் நோக்கிப் புறப்படும் எனது வானூர்தி கொழும்பு இரத்மலானைக்கும், யாழ்ப்பாணம் பலாலிக்கும் இடையில் பயணிக்கும் சிங்கள வான்படையின் அன்ரனோவ் ரகத்தைச் சேர்ந்த தட்டிவான் (சகடை) விமானம் போன்றே இருக்கும் என்பதே அந்த மனப்படிமமாகும். ஐரோப்பிய நாடுகளில் இருந்து குர்திஸ்தானுக்கு நேரடி விமானப் போக்குவரத்துக்கள் இடம்பெறுவதில்லை என்பதும், எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட பயணச்சிட்டையில் இஸ்ரான்புல்லில் இருந்து சுலைமானியா நோக்கிப் பயணிக்கும் வானூர்தி மத்திய தரத்தைச் சேர்ந்தது என்று குறிப்பிடப்பட்டிருந்ததும் இம் மனப்படிமத்தை மேலும் வலுப்படுத்தியிருந்தது.

நேரம் நள்ளிரவு கடந்து மறுநாள் (06.09.2017) அதிகாலை 1:00 மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. சுலைமானியா நோக்கிய எனது பயணத்தில் பிரித்தானியாவில் இருந்து ஒரு அரசறிவியலாளரும், பிரான்சில் இருந்து நான்கு அரசறிவியிலாளர்களும் இணைந்து கொள்வதாகவே ஏற்பாடு. ஆனாலும் எவரையும் காணவில்லை. இவர்களில் எனக்கு வேண்டப்பட்டவர் குர்தி அரசறிவியலாளர் கலாநிதி அடெல் பகவான். எனது நண்பர் இப்ராகிம் அவர்கள் அறிமுகம் செய்து வைத்ததன் அடிப்படையில் குர்திஸ்தானுக்கான எனது பயணத்தை அடெல் அவர்களே ஏற்பாடு செய்திருந்தார். பிரான்சில் இருந்து ஏனைய மூன்று அரசறிவியலாளர்களுடன் பயணிக்கும் அடெல், இஸ்ரான்புல் விமான நிலையத்தில் என்னைச் சந்திப்பார் என்றே இப்ராகிம் தெரிவித்திருந்தார்.

அதில் இன்னுமொரு சிக்கலும் இருந்தது. அடெல் அவர்களுக்கு மருந்துக்குக் கூட ஆங்கிலம் தெரியாது. அவரால் தனது தாய் மொழியான குர்தி மொழியையும், தான் வாழும் பிரான்சு நாட்டின் மொழியாகிய பிரெஞ்சு மொழிகயையும் மட்டுமே பேசத் தெரிந்திருந்தது. அப்படித்தான் எனது நிலையும்: எனது தாய் மொழியாகிய தமிழையும், நான் வாழும் நாடான பிரித்தானியாவின் மொழியாகிய ஆங்கிலத்தையும் தவிர எனக்கு வேறு எந்த மொழிகளும் தெரியாது. இதுவரை காலமும் எனக்கும் அடெல் அவர்களுக்கும் இடையிலான மொழிபெயர்ப்பாளராக இப்ராகிம் அவர்களே திகழ்ந்தார். ஆனால் இம்முறை எனது பயணத்தில் இப்ராகிம் பங்கேற்கவில்லை.




அதில் இன்னுமொரு சிக்கலும் இருந்தது. அடெல் அவர்களுக்கு மருந்துக்குக் கூட ஆங்கிலம் தெரியாது. அவரால் தனது தாய் மொழியான குர்தி மொழியையும், தான் வாழும் பிரான்சு நாட்டின் மொழியாகிய பிரெஞ்சு மொழிகயையும் மட்டுமே பேசத் தெரிந்திருந்தது. அப்படித்தான் எனது நிலையும்: எனது தாய் மொழியாகிய தமிழையும், நான் வாழும் நாடான பிரித்தானியாவின் மொழியாகிய ஆங்கிலத்தையும் தவிர எனக்கு வேறு எந்த மொழிகளும் தெரியாது.

தொடர்ச்சி 16ம் பக்கம்



கிரிக்கெட் விளையாட்டில்

# சர்வதேச கிரிக்கெட் சபையின் புதிய விதிமுறைகள்...

# மோசமாக நடந்து கொள்ளும் வீரரைக் களத்தை விட்டு வெளியேற்றலாம்!

சர்வதேச கிரிக்கெட் விதிமுறைகளில் அதிரடி மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதில் முக்கியமாக கால்ப்பந்தாட்டப் போட்டிகளின்போது களத்தில் மோசமாக நடந்து கொள்ளும் வீரர் சிவப்பு அட்டைத் தண்டனை மூலம் வெளியேற்றப்படுவதுபோன்று, இனி கிரிக்கெட்டிலும் மோசமாக நடந்து கொள்ளும் வீரர் களத்தை விட்டு வெளியேற்றப்படுவார்.

சர்வதேச கிரிக்கெட்டில் மேலும் சுவாரஸ்யத்தையும், விறுவிறுப்பையும் கொண்டு வருவதற்காக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நிபுணர்களுடன் ஆலோசித்து விதிமுறைகளில் மாற்றம் செய்வது உண்டு. அந்த வகையில் தற்போது கிரிக்கெட்டில் முக்கியமான சில விதிமுறைகள் மாற்றப்பட்டுள்ளன. கடந்த 28ம் திகதி முதல் இது நடைமுறைக்கு வந்துள்ளது.

ஐ.சி.சி.யின் புதிய விதிமுறை விவரம் வருமாறு...

* டெஸ்ட் கிரிக்கெட்டில், 80 ஓவர்களுக்கு பிறகு கூடுதலாக இரண்டு டி.ஆர்.எஸ். (Umpire Decision Review System) வாய்ப்பு வழங்கப்படும் நடைமுறை நீக்கப்படுகிறது. அதாவது இனி நடுவரின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்ய உதவும் டி.ஆர்.எஸ். தொழில்நுட்பத்தை ஒரு இன்னிங்சில் இரு அணியும் தலா 2 முறை மட்டுமே பயன்படுத்த முடியும். மேன்முறையீடு சரியாக இருக்கும் பட்சத்தில் அது வழக்கம் போல் நீடிக்கும். முன்பு இருந்த கூடுதல் வாய்ப்பு கிடையாது.
* சர்வதேச 20 ஓவர் போட்டிகளிலும் இனி டி.ஆர்.எஸ். பயன்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு இன்னிங்சிலும் தலா ஒரு டி..ஆர்.எஸ். வாய்ப்பு வழங்கப்படும்.
* துடுப்பாட்டவீரர் அடிக்கும் பந்தை எல்லைக்கோடு அருகே தாவி குதித்து கட்ச் செய்ய முயலுகையில், பந்தை பிடிக்கும் வீரரின் கால்கள் கட்டாயம் எல்லைக்கோட்டின் உள்பகுதியில் இருக்க வேண்டும். மாறாக எல்லைக்கோட்டுக்கு வெளியே இருந்து (நீண்ட தூரம் ஓடி வரும்போது இவ்வாறு நடப்பது உண்டு) ஜம்ப் செய்து கட்ச் செய்தபடி உள்ளே வந்தால், அது அவுட் இல்லை என்று அறிவிக்கப்பட்டு, பவுண்டரியாக கணக்கில் கொள்ளப்படும்.
* ரன்-அவுட்டில் இருந்து தப்பிக்க ஓடும் துடுப்பாட்ட வீரர் ஸ்டம்பின் எல்லைக்குள் (கிரீசுக்குள்) துடுப்பை (பட்) வைத்து விட்ட பிறகு அவரது துடுப்பு தரையில் இருந்து சற்று மேலே தூக்கிக்கொண்டு இருந்தாலோ அல்லது கிரீசை தொட்ட பிறகு துடுப்பாட்ட வீரரின் தொடர்பில் இருந்து துடுப்பு நழுவி இருந்தாலோ அந்த சமயத்தில் ஸ்டம்பை தாக்கும் பட்சத்தில் அது ரன்-அவுட் ஆக தீர்ப்பு வழங்கப்பட்டு வந்தது. இந்த முறையில் திருத்தம் செய்யப்படுகிறது. ஒரு முறை துடுப்பை கிரீசுக்குள் வைத்து விட்டால் போதும். அதன் பிறகு துடுப்பு அந்தரத்தில் இருந்தாலும் இனி ரன்-அவுட் செய்ய முடியாது. இது துடுப்பாட்ட வீரருக்கு கூடுதல் அனுகூலமாக அமையும். ஸ்டம்பிங்குக்கும் இந்த விதி பொருந்தும்.
* துடுப்பாட்ட வீரர் பந்தை அடிக்கும் போது, அருகில் நிற்கும் வீரரின் (பீல்டர்) தலைக்கவசத்திலோ அல்லது விக்கெட் காப்பாளரின் தலைக்கவசத்திலோ பந்து பட்டு எழும்பும் போது, அதை கட்ச் செய்தால் துடுப்பாட்ட வீரர் அவுட் என்றே அறிவிக்கப்படுவார். இந்த மாதிரி பந்து பட்டு வரும் போது ரன்-அவுட் அல்லது ஸ்டம்பிங்கும் செய்யலாம்.
* களத்தில் நிற்கும் வீரர்கள் (பீல்டர்கள்) தங்களது மேன்முறையீட்டை திரும்பப் பெறும்போது, அவுட் ஆனதாக வெளியேறும் துடுப்பாட்ட வீரரை நடுவர் எந்த நேரத்திலும் திரும்ப அழைக்கலாம். அதாவது முன்பு துடுப்பாட்ட வீரர் எல்லைக்கோட்டை கடந்து விட்டால் திரும்ப அழைக்க முடியாது. இனி அப்படிக் கிடையாது. துடுப்பாட்ட வீரர் எல்லைக் கோட்டை கடந்திருந்தாலும் அடுத்த பந்தை வீசுவதற்குள் திருப்பி அழைக்க முடியும்.
* துடுப்புகளின் அளவுகளில் குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படுகிறது. துடுப்பின் நீளம், அகலங்களில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் துடுப்பின் விளம்பின் தடிமன் 40 மில்லி மீற்றரை தாண்டக் கூடாது. இதே போல் ஒட்டுமொத்த துடுப்பின் தடிமன் 67 மி.மீ. மேல் இருக்கக்கூடாது. துடுப்பை அளவீடு செய்ய நடுவரிடம் கருவிகள் வழங்கப்படும்.
* டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒவ்வொரு அணியும் தலா 6 மாற்று ஆட்டக்காரர்களை (முன்பு 4 வீரர்கள்) அறிவிக்கலாம்.
* 20 ஓவர் கிரிக்கெட் மழையால் பாதிக்கப்பட்டு, 10 ஓவருக்கும் குறைவான போட்டியாக மாற்றப்படும் போது, ஒரு பந்து வீச்சாளர் குறைந்தபட்சம் 2 ஓவருக்கு குறையாமல் பந்து வீச வேண்டும். இதன்படி பார்த்தால் 5 ஓவர் ஆட்டமாக மாற்றப்படும் போது, இரண்டு பந்து வீச்சாளர்கள் தலா 2 ஓவர்களை வீச முடியும்.
* ஸ்டம்ப் மீது வைக்கப்பட்டிருக்கும் சிறுகட்டைகள் (பெய்ஸ்ல்) பந்து பட்டு தெறிக்கும் போது சில சமயம் விக்கெட் காப்பாளரையோ அல்லது அருகில் நிற்கும் வீரரையோ பதம் பார்த்து விடுகிறது. தென் ஆபிரிக்க முன்னாள் விக்கெட் காப்பாளர் மார்க் பவுச்சருக்கு பெய்ல்ஸ் தாக்கி கண் பாதிக்கப்பட்டு, அத்துடன் அவரது கிரிக்கெட் வாழ்க்கையும் முடிவுக்கு வந்தது. இந்த மாதிரியான காயங்களை தவிர்க்கும் வகையில், பெய்ல்ஸ் அதிக தூரம் பறக்காத வகையில் அதை ஸ்டம்புடன் ஒரு சிறு பிணைப்பு மூலம் இணைப்பது என்ற பரிந்துரை ஏற்கப்பட்டுள்ளது. அதே சமயம் பந்து தாக்கி பெய்ல்ஸ் விழாமலும் இருந்து விடக்கூடாது. இந்த புதிய வசதி கொண்ட பெய்ல்சை உபயோகிப்பது குறித்து சம்பந்தப்பட்ட கிரிக்கெட் வாரியங்களே முடிவு எடுத்துக்கொள்ளலாம்.
* வீரர்களின் நடத்தை விதிமுறை மேலும் கடுமையாக்கப்படுகிறது. களத்தில் மூர்க்கத்தனமாக நடந்து கொள்ளும் வீரரை உடனடியாக வெளியேற்ற நடுவருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இது கால்பந்தில் வீரரை சிவப்பு அட்டை காண்பித்து வெளியேற்றுவது போன்றதாகும். அதாவது நடுவரை தாக்குவது, மிரட்டுவது, வேண்டுமென்றே இடிப்பது, வீரர்களுடனோ அல்லது வேறு நபர்களுடனோ உடல்ரீதியாக மோதலில் ஈடுபடுவது, இதர வன்முறைகள் ஆகியவற்றை 'லெவல்-4' வகை குற்றமாக கருதி சம்பந்தப்பட்ட வீரரை நடுவர் உடனடியாக களத்தை விட்டு வெளியே அனுப்பலாம்.

மேற்கண்டவாறு புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

# காமுகர்களால் கல்லறை....

வித்தியாவின் படுகொலையும் அதன் பின்னரான விசாரணைகள், நீதி வழங்கல்களும் அதிகாரத்தின் பெயரால் நீதி முறை கேட்டுக்குள்ளாக்கப்பட்டுள்ளமையை வெளிக்காட்டியிருக்கின்றது. பதவியில் இருப்பவர்களைப் பாதுகாப்பதற்கே நீதிமன்றம் முயன்றதா என்ற கோணத்தில் மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர்.

சிறீலங்காவைப் பொறுத்தவரை இந்த அதிகார வன்முறை நீதித்துறையில் மிக அதிகமாகவே ஆதிக்கம் செலுத்துகின்றது. நல்லாட்சி என்ற நாமத்துடன் கோலோச்சும் மைத்திரி - ரணில் - சம்பந்தன் இணைந்த அரசு பதவி நாமங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றது.

உயர் பதவிகளில் இருப்பவர்கள் செய்கின்ற தவறுகளைத் தட்டிக்கழித்துவிட்டு, அப்பாவிகள் அதில் தொடர்புபட்டிருப்பின் அவர்களைக் கைது செய்து குற்றவாளிப் பட்டம் கட்டுவதில் தற்போதைய அரச இயந்திரம் மிக வேகமாகவே செயற்பட்டு வருகின்றது.

அதற்காக, வித்தியாவைப் படுகொலை செய்தவர்களைத் தண்டித்த விதம் தவறு, அதில் பிழைகள் உள்ளன என இக்கட்டுரை வாதிடவில்லை. அவர்களுக்கு தண்டனை கிடைத்துவிட்டதே, அதில் இருந்து அவர்களையும் விடுவித்திருக்கலாமே என்ற ஆதங்கத்தில் இக்கட்டுரை எழுதப்பட்டது என அர்த்தம் கொள்ளக்கூடாது. சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது.

வித்தியா படுகொலைக் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து சிறீலங்கா நீதித்துறையை சிலர் வெகுவாகவே பாராட்டுகின்றனர். நல்லாட்சி அரசின் மிக உயர்ந்த செயற்பாடு எனக் கூறுகின்றனர். மற்றும் சிலர், ட்ரயல்



அட்பார் விசாரணை நடத்த உத்தரவிட்ட மைத்திரிபால சிறிசேனவை பாராட்டுகின்றனர்.

இந்த வழக்கில் அவர்கள் பாராட்டப்படவேண்டுமாயின், படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பாக உடனடியாக வழக்குகளைப் பதிவு செய்து விசாரணை நடத்தி, அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கட்டும்.

இறுதி யுத்தத்தில் இசைப்பிரியா உட்பட எத்தனையோ தமிழ் யுவதிகள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். செம்மணியில் கிரிசாந்தி, புங்குடுதீவில் சாரதாம்பாள் போன்று படையினரால் படுகொலை செய்யப்பட்ட பல பெண்கள் தொடர்பாக இதுவரை உரிய விசாரணைகளே ஆரம்பிக்கப்படாமல் உள்ளன. அரசு அவற்றை நடத்தவேண்டும். அதன் பின்னர் சிறிலங்காவில் நீதி சாகவில்லை என முகப்புத்தகப் போராளிகள் எழுத முடியும்.

ஆக, வித்தியா கொலை வழக்கில் சிறீலங்காவின் ஆட்சியாளர்கள் மக்களுக்குப் பயந்துதான் விசாரணைக்கு உத்தரவிட்டனர். வித்தியா படுகொலை செய்யப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் போர்க்களமானது. வடக்கு - கிழக்கு என்று இல்லாமல் நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. அதற்கு அப்பால் சர்வதேச ரீதியாகவும் போராட்டங்கள் இடம்பெற்றன.

இந்தப் போராட்டங்கள் காரணமாகவே வித்தியா படுகொலை விடயம் ட்ரயல் அட்பார் விசாரணை வரை சென்றது. அதிலும் சிலர் தவிர்க்கப்பட்ட நிலையில் ஏனையோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

சட்டம், நீதி நடைமுறைகள் அனைவருக்கும் சமமானதாக இருக்கவேண்டும். அதுவும், ஒரு குற்றம் நடைபெற்றவுடன் அது தொடர்பாக பூர்வாங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மக்கள் போராட்டம் நடத்தினால்தான் நீதி கிடைக்கும் என்ற நிலை மாற்றப்பட வேண்டும். குற்றம் செய்த படையினரைப் பாதுகாக்கக்கூடாது.

ஐ.நா யுத்த விதிகளை மீறி வன்னி மண்ணில் பெரும் அழிவுகளைச் செய்த, பெண்களை மானபங்கப்படுத்திய படையினரையும் சிறீலங்கா அரசு விசாரிக்க வேண்டும். அவர்களுக்கும் இதுபோன்ற மரண தண்டனைகளைக் கொடுக்கவேண்டும்.

# லாச்சப்பலில் தியாக தீபம் திலீபன், கேணல் சங்கர் உள்ளிட்ட புரட்டாதி மாத மாவீரர் நினைவு வணக்க நிகழ்வு!

தியாக தீபம் லெப்.கேணல் திலீபன், கேணல் சங்கர் மற்றும் புரட்டாதி மாதம் வீரகாவியமான தேசப் புதல்வர்களின் நினைவு வணக்க நிகழ்வு பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மாவீரர் பணி மனையின் ஏற்பாட்டில் கடந்த 26.09.2017 செவ்வாய்க்கிழமை பரிசு லாச்சப்பல் பகுதியில் உணர்வெ ழுச்சியுடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தியாக தீபம் திலீபன் அவர்களின் திரு உருவப்ப டத்திற்கான ஈகைச்சுடரினை 03.12.2007 அன்று கரிப்பட்டமுறிப் பில் வீரச்சாவடைந்த வீரவேங்கை யாழ்நம்பியின் சகோதரியும் மாவீரர் பொதுப்படத்திற்கான ஈகைச் சுடரினை 26.06.1989 அன்று வவுனி யாவில் வீரச்சாவடைந்த கப்டன் ரூபனின் சகோதரியும் கேணல் சங் கர் அவர்களின் திரு உருவப்படத் திற்கான ஈகைச்சுடரினை 01.03.2009 அன்று வீரச்சாவடைந்த வீர வேங்கை வினிதனின் சகோதரனும் ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித் தனர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவ ரும் சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து தியாக தீபம் திலீபன் மற்றும் கேணல் சங்கர் தொடர்பான நினைவுரை கள் இடம்பெற்றன.









# கேணல் பரிதி, லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் நினைவு சுமந்த உதைபந்தாட்டப் போட்டி!

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு தமிழர் விளையாட்டுத் துறை 4ஆவது தடவையாக நடாத்திய கேணல் பரிதி, லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோர் நினைவு சுமந்த உதைபந்தாட்டப் போட்டி 2017 கடந்த (17.09.2017) ஞாயிற்றுக்கிழமை பிரான்சு Bondy பகுதியில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஈகைச்சுடரினை 08.11.2012 அன்று பிரான்சில் வீரச்சா வடைந்த கேணல் பரிதியின் தாயார் ஏற்றிவைத்து மலர்வணக்கம் செலுத்தினார். அகவணக்கத்தைத் தொடர்ந்து பிரான்சு தமிழர் ஒருங் கிணைப்புக்குழு விளையாட்டுத்துறையினர் போட்டியில் பங்குபற்றும் அணிகளை வரவேற்று போட்டிகளை ஆரம்பித்துவைத்தனர். தொடர் ந்து போட்டிகள் விறுவிறுப்பாக இடம்பெற்றன.

**13 வயதின் கீழ்**

1ஆம் இடம் : 93 தமிழர் விளையாட்டுக் கழகம்
2ஆம் இடம் : காந்தீஜீ விளையாட்டுக் கழகம்
3ஆம் இடம் : யாழ்ட்டன் விளையாட்டுக் கழகம்

**இறுதி ஆட்ட நாயகன்**

நீவேதன் ( 93 தமிழர் விளையாட்டுக் கழகம்)

**சிறந்த விளையாட்டு வீரன்**

பரந்தாமன் ( 93 தமிழர் விளையாட்டுக் கழகம்)
சிநோத் (காந்தீஜீ விளையாட்டுக் கழகம்)

**15 வயதின் கீழ்**

1ஆம் இடம் : விண்மீன் விளையாட்டுக் கழகம்
2ஆம் இடம் : நல்லூர்ஸ்தான் விளையாட்டுக் கழகம்
3ஆம் இடம் : யாழ்ட்டன் விளையாட்டுக் கழகம்
இறுதி ஆட்ட நாயகன் பிரவீன் (விண்மீன் விளையாட்டுக்கழகம்)

**மேற்பிரிவு**

1ஆம் இடம் : 93 தமிழர் விளையாட்டுக் கழகம்
2ஆம் இடம் : வல்வை புளுஸ் விளையாட்டுக் கழகம்
3ஆம் இடம் : யாழ்ட்டன் விளையாட்டுக் கழகம்

இறுதி ஆட்ட நாயகன்
சுபன்( 93 தமிழர் விளையாட்டுக் கழகம்)
சிறந்த விளையாட்டு வீரன்
சீனிவாசன் ( வல்வை புளுஸ் விளையாட்டுக் கழகம்)
பிரகாஷ் (93 தமிழர் விளையாட்டுக் கழகம்)

















# மலரும் சுதந்திர பூமியில்....

அதனால் மொழிபெயர்ப்பதற்கு ஆள் இன்றி அடெல் அவர்களுடன் எப்படி உரையாடுவது என்ற பிரச்சினை. ஊமைப் பாசையா பேச முடியும்? மொழியும் தெரியாது, இடமும் தெரியாது ஒரு யுத்த வலயத்திற்கு நான் பயணம் செய்வது தேவை தானா? என்ற கேள்வியும் என்னிடம் ஏற்பட்டிருந்தது. ஆம்! குர்திஸ்தான் ஒரு யுத்த வலயம் என்ற இன்னுமொரு படிமமும் ஆரம்பத்தில் இருந்தே என் மனதில் விரவியிருந்தது.

ஈராக்கில் ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கு எதிராகக் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக உள்நாட்டு, பன்னாட்டுப் படைகள் முன்னெடுக்கும் யுத்தத்தில் குர்திஸ்தானின் பெஸ்மேகா படை வீரர்களே முன்னணிப் பாத்திரத்தை வகித்து வருகின்றார்கள். அதன் காரணமாக குர்திஸ்தானும் ஒரு யுத்த வலயமாகவே மேற்குலக ஊடகங்களில் சித்தரிக்கப்பட்டு வந்தது.

திடீரென யாரே இருவர் நடந்து வருவது என் கண்களில் நிழலாடியது. நிமிர்ந்து பார்த்தேன். சந்தேகமே இல்லை. முகநூலில் நான் பார்த்த அதே முகம் தான்: கலாநிதி அடெல் பகவான் வந்து கொண்டிருந்தார். அவரது அருகில் இன்னுமொரு பெண்: அவரையும் எங்கோ பார்த்ததாக ஞாபகம்.

உடனே எனது ஆசனத்தை விட்டு எழுந்து அவர்களை நோக்கிச் சென்றேன். நான் எழுந்து வருவதை அடெல் அவர்களும் அவதானித்திருக்க வேண்டும். என்னை உற்றுப் பார்த்தார். கைலாகு கொடுப்பதற்கு நான் எனது வலது கையை நீட்டிய பொழுது, நான்தான் தான் சந்திக்க வேண்டிய தமிழன் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

நானும் வழமைபோன்று ஆங்கிலத்தில் பேசினேன். அவரது அருகில் நின்ற பெண் ஆங்கிலத்தில் பதில் கூறினார். ஆனால் அடெல் ஆங்கிலத்தில் பேசவில்லை. பிரெஞ்சு மொழியில் ஏதோ கூறினார். அதனை அவரது அருகில் நின்ற பெண் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறிய பொழுதுதான் நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். ஊமைப் பாசையில் பேச வேண்டியதில்லை என்ற ஆசுவாசம். பின்னர் வழமையான குசலம் விசாரிப்புக்கள்: பயணம் சிறப்பாக அமைந்ததா? என்ற கேள்விகள். அதனைத் தொடர்ந்து 'குர்திஸ்தான் உங்களை வரவேற்கின்றது' என்றார்.

நான்தான் அடெல் சந்தித்த முதல் தமிழராக இருக்க வேண்டும். முதல் கேள்வியாக 'உலகெங்கும் எத்தனை தமிழர்கள் இருக்கின்றார்கள்?' என்று கேட்டார். 'நூறு மில்லியன் பேர் இருக்கின்றோம்' என்றேன். என்னை ஆச்சரியத்தோடு பார்த்தார். நான் கூறியதை பிரெஞ்சிலும், தான் கூறுவதை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துக் கொண்டிருந்த கலாநிதி இனெஸ் ஹசன் அவர்களிடம் தனது புருவத்தை உயர்த்திப் பிரெஞ்சு மொழியில் ஏதோ கேட்டார். 'தமிழர்களின் மொத்த எண்ணிக்கை நூறு மில்லியனா? அல்லது பத்து மில்லியனா?' என்பதுதான் அவரது கேள்வியாக இருந்தது. நூறு மில்லியன் என்று நான் மீண்டும் கூறிய பொழுது அவரால் அதை நம்ப முடியவில்லை.

'இந்த நூறு மில்லியன் பேரும் ஒரு நாட்டில்தான் இருக்கின்றீர்களா? அல்லது குர்தி மக்களைப் போல பல நாடுகளில் பரந்து வாழ்கின்றீர்களா?' என்று வினவினார். எங்களின் தாயகங்களான தமிழீழம், தமிழகம் ஆகியவை சிறீலங்கா, இந்தியா ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதையும், இவற்றை விட மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸ் மற்றும் மேற்குலக நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்பதையும் விளக்கினேன். அப்பொழுது இனஸ் அவர்கள் என்னிடம் கூறினார்: என்னை சந்திக்கும் வரை குர்தி மக்கள் தான் நாடற்றவர்களாக இருக்கும் அதிக எண்ணிக்கையைச் சேர்ந்தவர்கள் என்று அடெல் அவர்கள் கருதியதாகவும், இப்பொழுது தான் அவர்களை விட எண்ணிக்கையில் அதிகமானவர்களான தமிழர்கள் நாடற்றவர்களாக இருப்பதை அடெல் அவர்கள் அறிந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

பின்னர் அடெல் அவர்களின் கேள்விக் கணைகள் தமிழர்களின் தனியரசுப் போராட்டத்தின் பக்கம் திரும்பியது. 'எந்தெந்த நாடுகளில் இருந்து பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்கு நீங்கள் முற்படுகின்றீர்கள்??' என்று கேட்டார். அதற்கு நான், 'சிறீலங்காவில் இருந்து மட்டும் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்கு நாம் போராடுகின்றோம்' என்றேன். அப்பொழுது அவர், 'எத்தனை பேர் தனியரசு கோருகின்றீர்கள்?' என்றார்.

அதற்கு நான், 'நான்கு மில்லியன் பேர்' என்று பதிலளித்த பொழுது அவர் மீண்டும் வியப்புற்றார். அப்பொழுது நான், தமிழர்களில் ஏறத்தாள எண்பது மில்லியன் பேர் இந்தியாவில் வாழ்கின்றார்கள் என்பதையும், எனினும் அவர்கள் தனிநாடு கேட்கவில்லை என்றும் கூறினேன். அதற்கு அடெல் அவர்கள் என்னிடம் கேட்டார்: 'சிறீலங்காவில் இருந்து பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்குப் போராடும் இந்த நான்கு மில்லியன் தமிழர்களுக்கும் இந்தியாவில் உள்ள எண்பது மில்லியன் தமிழர்களின் ஆதரவு உண்டா?' அதற்கு நான், 'ஆம்' என்று பதிலளித்த பொழுது அவர் என்னை வியப்புடன் பார்த்தார். பின்னர் தூக்கி வாரிப் போடும் கேள்வியொன்றைக் கேட்டார். 'இந்தியாவில் வாழும் எண்பது மில்லியன் தமிழர்களின் ஆதரவு இருந்தும் உங்களால் ஏன் தனிநாட்டை அமைக்க முடியவில்லை?' என்பது தான் அவர் என்னிடம் கேட்ட கேள்வி.

ஈராக்கில் இருந்து பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்கு குர்தி மக்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு துருக்கி பெரும் இடையூறாக இருப்பது போன்று, சிறீலங்காவில் இருந்து பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்குத் தமிழர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு இந்தியா பெரும் தடையாக இருக்கின்றது என்று கூறுவதைத் தவிர என்னால் வேறு எதனையும் கூற இயலவில்லை.

ஒரு பக்கத்தில் அடெல் அவர்களின் கேள்வியில் இருந்த நியாயம் எனக்குப் புரிந்தது. ஒரு சிறிய இனமாகிய ஈழத்தமிழர்களுக்காக தாய்த் தமிழகத்தில் இருந்து ஆதரவுக் குரல்கள் மட்டும் ஒலிக்கின்றனவே தவிர, அதற்கு அப்பால் எதுவுமே பெரிதளவில் எங்களுக்குக் கிடைப்பதில்லை என்ற ஆதங்கம் எனக்கு இருந்தாலும், எமது தொப்புள் கொடி உறவுகளான தாய்த் தமிழக மக்களை விட்டுக் கொடுப்பதற்கு மனம் வரவில்லை.

அப்பொழுது என் நினைவில் சில நாட்களுக்கு முன்னர் எனது நண்பர் இப்ராகிம் அவர்கள் கூறியது தான் நினைவுக்கு வந்தது. 2014ஆம் ஆண்டு சிரியாவில் குர்தி மக்களுக்கு எதிரான இனவழிப்பு நடவடிக்கைகளில் ஐ.எஸ் பயங்கரவாதிகள் ஈடுபட்ட பொழுது, அவர்களுக்கு உதவியாக துருக்கியில் இருந்து குர்தி விடுதலைப் போராளிகளும், ஈராக்கின் குர்திஸ்தான் மாநிலத்தில் இருந்து கனரக ஆயுதங்கள் சகிதம் பெஸ்மேகா படை வீரர்களும் உதவிக்கு விரைந்து அந்த மக்களைப் பாதுகாத்தார்கள். அதனைப் பெருமிதத்துடன் இப்ராகிம் அவர்கள் என்னிடம் குறிப்பிட்டிருந்தார்.

முள்ளிவாய்க்காலில் எமது இனம் அழிக்கப்பட்ட பொழுது, எங்களை மீட்பதற்காக தமிழ்நாட்டில் இருந்து எவருமே வரவில்லையே என்று நினைத்த பொழுது வேதனையாக இருந்தது. அதே நேரத்தில் தமது இனத்திற்கு ஒரு ஆபத்து என்றவுடன் படை கொண்டு செல்லும் குர்தி மக்களின் இனவுணர்வை நினைத்துப் பார்க்கும் பொழுது, இவர்களிடம் இருந்து கற்றுக் கொள்வதற்கு தமிழர்களாகிய எங்களுக்கு நிறையப் பாடங்கள் இருக்கின்றன என்றே எனக்குத் தோன்றியது.

குர்திஸ்தான் பற்றி எனது மனத்திரையில் விரவியிருந்த எதிர்மறையான படிமங்கள் பற்றி அப்பொழுது இரைமீட்டுப் பார்த்தேன். 'ஒருவேளை குர்திஸ்தான் நான் நினைப்பது போல் ஒரு பனானா ரிப்பப்ளிக் இல்லையோ?' என்று என்னை நானே வினவிக் கொண்டேன். எதற்கும் நேரில் சென்று பார்ப்போம் என்று என்னை நானே தேற்றிக் கொள்வதைத் தவிர இருள்சூழ்ந்த அன்றைய அதிகாலைப் பொழுதில் எனக்கு வேறு எந்தத் தெரிவுகளும் இருக்கவில்லை.

ஆனால் அவ்வாறு நான் சிந்தித்த சில நிமிடங்களின் பின் அடுத்தடுத்து நிகழ்ந்தேறிய சம்பவங்கள் என் மனப்படிமங்களை சுக்குநூறாக்கியது.

**குர்திஸ்தான் பயணம் தொடரும்...**

## வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## எரிசக்தி நிறுவனம் உலகின் முதலிடத்தில் ரஷ்யா

உலகின் முதலாவது மிகப்பெரிய எரிசக்தி நிறுவனமாக ரஷ்யாவைச் சேர்ந்த கஸ்ப்ரோம் (Gazprom) உருவெடுத்துள்ளது.குளோபல் எனர்ஜி (Global energy) தரக்குறியீட்டு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது. 2017ம் ஆண்டின் சர்வதேச எரிசக்தி முன்னணி 250 நிறுவனங்களின் பட்டியலை அது வெளியிட்டுள்ளது. இதில் இரண்டாவது இடத்தை ஜேர்மனியைச் சேர்ந்த இ.ஒன்.சி (E.On SE) பிடித்துள்ளது.

3வது மிகப்பெரிய எரிசக்தி நிறுவனமாக இந்தியாவின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பிடித்துள்ளது. 2016ம் ஆண்டில் 8வது இடத்தில் இருந்த இந்த நிறுவனம் ஐந்து படிகள் முன்னேறியுள்ளது.

இதேவேளை 2015ம் ஆண்டில் 66வது இடத்தில் இருந்த இந்தியாவின் பொதுத் துறையைச் சேர்ந்த இந்தியன் ஒயில் கோர்ப்பரேஷன் வேகமாக முன்னேறி 2016ல் 14வது இடத்தையும், 2017ல் 7வது இடத்தையும் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பட்டியலில் கடந்த ஆண்டில் 20வது இடத்தில் இருந்த ஓஎன்ஜிசி நிறுவனம் நடப்பு ஆண்டில் 11வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. பாரத் பெட்ரோலியம் 27வது இடத்திலும், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் 48வது இடத்திலும், பவர் கிரிட் கார்ப்பரே'ன் 81வது இடத்திலும், கெயில் நிறுவனம் 106வது இடத்திலும் உள்ளன. இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள 14 இந்திய நிறுவனங்களில் கோல் இந்தியா நிறுவனம் மட்டுமே 38வது இடத்திலிருந்து 45வது இடத்துக்கு பின்னடைவைக் கண்டுள்ளது என அந்த தரக்குறியீட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 4வது இடத்தை கொரியன் எலற்றிக் பவர் நிறுவனமும், 5வது இடத்தை சீன பெற்றோலியம் நிறுவனமும் பிடித்துள்ளன. அத்துடன், ஐரோப்பாவில் முக்கிய அங்கம் வகிக்கும் ரோற்றல் (Total) 10வது இடத்திலும், பிரான்சின் ஈடிஎப் (EDF) நிறுவனம் 25வது இடத்திலும், பிரிட்டிஷ் பெற்றோலியம் (Bp) 99வது இடத்திலும் இருக்கின்றன.

## ஐபோன் வாங்க கால்கடுக்க நின்ற கோடீஸ்வரர்!

மகளுக்கு திருமணப் பரிசாக ஐபோனை பரிசளிக்க விரும்பிய இந்தியாவைச் சேர்ந்த அமீன் அகமது தோலியா (Amin Ahmed Dholiya 43 வயது) என்ற கோடீஸ்வரத் தொழிலதிபர், அதற்காக சிங்கப்பூர் சென்று இரவு முழுவதும் சுமார் 13 மணி நேரம் செல்பேசி கடை முன் வரிசையில் காத்திருந்து அதை



வாங்கினார். தொழிலதிபரான அமீன் அகமது தோலியாவுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். அவர்களுக்காக அப்பிள் நிறுவனத்தின் புதிய அறிமுகமான ஐபோன் 8-பிளஸ் என்ற செல்பேசியை வாங்க அவர் விரும்பினார். இதற்காக அமீன் கடந்த வியாழக்கிழமை (21) இரவு, சிங்கப்பூர் சென்றார். அங்குள்ள Orchard சாலையில் உள்ள அப்பிள் செல்பேசி கடைக்குச் சென்றார். அப்போது கடை மூடப்பட்டிருந்தது. மறுநாள் காலையில் திறக்க உள்ள கடையில் ஐபோன் வாங்குவதற்காக வெளிநாட்டினர் உள்பட சுமார் 200 பேர் அப்போதே அங்கு வரிசையில் காத்திருந்தனர். அந்த வரிசையில் முதல் ஆளாக அமீனும் இரவு முழுவதும் கால் கடுக்கக் காத்திருந்தார். வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்குக் கடை திறந்ததும் அவர் இரண்டு ஐபோன்களை வாங்கினார். ஐபோன்களை வாங்கிய பின் அவர் வெள்ளிக்கிழமை இரவே நாடு திரும்பினார்.

ஒரு கதை

## மக்கள் நேர்மையானவர்களா?

ஒருநாள் அக்பர் தனது அரசவையில் கூடியிருந்தவர்களிடம், எனது அரசாட்சியில் மக்கள் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேட்டார். உடனே சபையிலிருந்த அனைவரும் ஆம் அரசே உங்கள் பொன்னான ஆட்சியில் அனைவரும் நேர்மையைக் கடைபிடிக்கின்றனர். இதை யாரும் மறுக்கவே முடியாது என்றனர்.



ஆனால் பீர்பால் மட்டும் அமைதியாக இருப்பதைக் கண்ட அக்பர், ஏன் மௌனமாக இருக்கிறாய் பீர்பால்? மக்கள் நேர்மையாக இருப்பதைப் பற்றி உன் கருத்து என்ன? என்று கேட்டார்.

உடனே பீர்பால், இதற்கு நான் பதிலளிக்க வேண்டுமென்றால், நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும் அரசே. மக்கள் அனைவருக்கும் நீங்கள் விருந்து வைக்க வேண்டும். விருந்துக்கு வரும்போது ஒரு குடத்தில் பால் கொண்டு வர வேண்டும் என்று உத்தரவிட வேண்டும், என அக்பரிடம் வேண்டுகோள் வைத்தார்.

பீர்பால் கேட்பதில் ஓர் உள்ளர்த்தம் இருப்பதை உணர்ந்து கொண்ட அக்பர், உடனே விருந்து பற்றி பொதுமக்களிடம் தெரிவிக்கும்படி உத்தரவிட்டார். தண்டோரா போட்டபடியே அனைத்து வீதிகளுக்கும் சென்ற அரசவை அறிவிப்பாளர், நமது பேரரசர் அனைவருக்கும் விருந்து வைக்கிறார். விருந்துக்கு வருவோர் கண்டிப்பாக ஒரு குடத்தில் பால் கொண்டு வர வேண்டும். இது அரசு உத்தரவு, என்று உரத்த குரலில் அறிவித்தார்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு விதை

## மண்ணிற்காய் விதையான வித்து

முல்லைத்தீவு முள்ளியவளை முதலாம் வட்டாரத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இப்போராளி, இறுதி இனஅழிப்புப் போரில் இறங்கியிருந்த சிறீலங்காப் படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 21.09.2008 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.



**லெப்.இசைக்கலைஞன்/ காவியன்**
(சண்முகலிங்கம் ரமேஷ் )
வீரச்சாவு 21.09.2008

ஒரு குறள்

அறத்துப்பால் – நடுவு நிலைமை

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.



பிறர் பொருளாக இருப்பினும் அதனைத் தன் பொருளைப் போலவே கருதி நேர்மையுடன் வாணிகம் செய்தலே வணிக நெறியெனப்படும்.

ஒரு மருத்துவம்

## கரட் உணவினால் என்ன பலன்?

- விட்டமின் ஏ சத்து நிறைந்துள்ள காரணத்தால் கரட் ஆரோக்கியமான கண்களுக்கும், சருமத்துக்கும், உடல் வளர்ச்சிக்கும் உதவுகிறது.
- கரட்டில் உள்ள பீட்டா கரோட்டீன், கொழுப்பைக் கரைக்கும் சக்தி கொண்டது.
- தினமும் ஒரு கரட் சாப்பிடுவதன் மூலம், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றலாம் என்பது அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.
- கரட் இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, விருத்தியும் அடையச் செய்கிறது. மேலும், குடல் புண்கள் வராமல் தடுக்கிறது. வாய் துர்நாற்றத்தைத் தடுக்கிறது.
- கரட் சாற்றுடன், எலுமிச்சைச் சாறு கலந்து குடித்தால் பித்தக் கோளாறுகள் நீங்கும்.
- பாதி வேகவைத்த முட்டையுடன், கரட் மற்றும் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் ஆண்மை சக்தி அதிகரிக்கும்.




- கரட் சாப்பிட்டால் பெண்களின் மார்பகப் புற்றுநோய் முற்றாமல் ஆரம்ப நிலையிலேயே விடுபடலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள புற்றுநோய் ஆராய்ச்சிக்கான அமெரிக்க அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.
- கரட்டின் விட்டமின் ஏ–யில் இருந்து பெறப்படும் ரெட்டினாய்க் அமிலம், புற்று நோய் உண்டாக்கும் செல்களை ஆரம்ப நிலையிலேயே அழித்துவிடும்.
- சருமத்துக்கு பொலிவைத் தந்து தோலில் ஏற்படும் சுருக்கத்தை கரட் நீக்குகிறது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு தகவல்

## நாஸ்கா மர்மக் கோடுகள்
(Nazca Lines)

அறிவியலின் அதீத வளர்ச்சியினால் மனிதன் பல புதிய விடயங்களை கண்டுபிடிக்கிறான். செவ்வாய் கோளில் நீர் உள்ளதா என கண்டறிய முயற்சி செய்கிறான். அப்படிப்பட்ட அறிவியல் வளர்ச்சியால் கூட ஒரு சில மர்மங்களுக்கு விடை காண இயலவில்லை. அதில் ஒன்று தான் நாஸ்கா கோடுகள்.



தென் அமெரிக்காவின் பெரு நாட்டின் தெற்கில் அமைந்திருக்கும் நாஸ்கா பாலைவனத்திலிருந்து, லிமா, பல்பா, பம்பாஸ் சமவெளிகளுக்கிடையே 400 கிலோ மீற்றர் நீள மிகப்பிரமாண்டமான கோடுகள் அவை. சாதாரணமாக நிலத்தின் மீது நின்று பார்த்தால் இவைகள் நீண்ட ஒற்றையடி பாதைகள் போலவும், வாய்க்கால்கள் போலவும் தெரியும்.

ஆனால் விமானத்தில் இருந்து பார்த்தால் இந்தக் கோடுகள் விமானங்கள் தரையிறங்கும் ஓடுதளம் போலவும், குரங்கு, நாய், மனிதன், பறவை போன்ற உருவங்கள் போல காணப்படும்.

1920ல் இந்த வழியாக விமானத்தில் பறந்து சென்ற சுற்றுலா பயணிகளால் எதேச்சையாக கவனிக்கப்பட்டு கண்டறியப்பட்டவை இவை. அதுவரை இவைகள் சிறிய சாலைகள் போலவும், வாய்க்கால்கள் போலவும் பார்க்கப்பட்டு வந்தன.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பொன்மொழி

**பொய் சொல்வதில் ஒரு பிரச்சனை, அதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.**

- காந்தி

ஒரு பழமொழி

**ஒருமுறை தீச் சூடுபட்ட மாடு சிவப்பு மேகத்தைக் கண்டாலும் நடுங்கும்**

ஒரு வரலாறு

## ஆங்கிலேய ஆணவம்!

ஒரு காலத்தில் ஆங்கிலேயர்களின் ஆட்சியிலிருந்து தற்போது சுதந்திரமாக இருக்கும் நாடுகளை ஆங்கிலத்தில் (commonwealth countries) கொமன்வெல்த் நாடுகள் (பொதுநலவாய நாடுகள்) என்று கூறுவார்கள். இந்த கொமன்வெல்த் தலைவர்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கூடுவார்கள். 1975ம் ஆண்டு ஜமைகா நாட்டில் இந்த கூட்டம் நடந்தது. அதில் கலந்து கொள்வதற்காக அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி சென்றிருந்தார். இந்திராவை இரும்பு பெண் என்று அப்போதைய ஆங்கிலேய பத்திரிகைகள் பட்ட பெயர் வைத்திருந்தனர். இந்த பெயருக்கு ஏற்ப ஒரு சம்பவம் நடந்தது.




மாநாடு நடந்து முடிந்த அன்று இங்கிலாந்து ராணி எலிசபெத் எல்லா தலைவர்களையும் சந்திக்க விரும்பினார். ஆனால் முன்னாள் தலைவர்களெல்லாம் ஒரு காலத்தில் தனது நாட்டுக்கு அடிமைகளாக இருந்தார்கள் என்ற எண்ணம் எலிசபெத் ராணிக்கு இருந்திருக்கும் போல. எல்லா தலைவர்களுக்கும் ஒரு கடிதம் அனுப்பினார்.

அதில் இருந்த வாக்கியம் என்னவென்றால் Her Majesty will be pleased to grant an audience to you என்று இருந்தது. அதாவது மற்ற தலைவர்கள் ஏதோ எலிசபெத்தை பார்க்க நாக்கை தொங்க போட்டுக் கொண்டு இருப்பது போலவும்

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பழமொழியும் விளக்கமும்

## ஆயிரம் முறை பொய் சொல்லி கூட ஒரு கல்யாணம் பண்ணலாம்.



ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணம் பண்ணலாம் என்பதல்ல.'ஆயிரம் முறை போய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலாம்' என்பதாகும். அதாவது, நம் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் நாம் பகைமை கொண்டு நம் வீட்டில் நடக்கும் கல்யாணம் போன்ற சுபதினங்களில் நாம் அழைக்காமல் இருப்போம்.

ஆனால், அவர்களை விட்டுவிடாமல் ஆயிரம் முறை போய் சொல்லியாவது அவர்களை அழைத்து நம் வீட்டில் திருமணம் நடத்தவேண்டும் என்பதாகும். அப்படி நல்ல நோக்கத்திற்காக சொல்லப்பட்ட பழமொழி தான் பின்னாளில் மருவி அல்லது மாறி இப்போது உள்ளதுபோல ஆகிவிட்டது.

# தமிழ்க்கதிர்

TAMILKATHIR.COM

எமது அன்புக்கும், மதிப்பிற்குமுரிய புலம்பெயர்வாழ் தமிழ் உறவுகளே,

மாவீரர்களின் இலட்சிய வழிநின்று, தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து, ஈழமுரசு பத்திரிகை, சங்கதி-24 இணையம், Tamilpolity இணையம் ஆகிய தமிழ்த் தேசிய ஊடகங்களை நிர்வகித்து வரும் உங்களின் ஊடக மையம், தனது அடுத்த பாய்ச்சலாக தமிழ்க்கதிர் தொலைக்காட்சி சேவையை ஆரம்பிக்க இருக்கின்றது என்ற மகிழ்வான செய்தியை, உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமையும், பெருநிறைவும் அடைகின்றோம்.

முள்ளிவாய்க்காலில் தமிழினம் சந்தித்த பெரும் இனவழிப்பிற்குப் பின்னர், ஊடகப் பரப்பில் பல தொலைக்காட்சிகள் இருந்தாலும், புலம்பெயர்ந்து வாழும் தமிழ்த் தேசிய உணர்வு மிக்க ஊடகவியலாளர்களுக்கும், கலைஞர்களுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் தளம் அமைத்துக் கொடுப்பதில் இவை தயக்கம் காட்டி வருகின்றன. தமிழ்த் தேசிய உணர்வைத் தொலைத்துப் பயணிக்கும் தொலைக்காட்சிகளுடன் இணைந்து பயணிப்பதற்கு, இவ் ஊடகவியலாளர்களோ, அன்றி கலைஞர்களோ, அல்லது செயற்பாட்டாளர்களோ தயாராகவும் இல்லை. இவ்வாறான பின்புலத்தில்தான் தமிழ்க்கதிர் தொலைக்காட்சியின் தேவை எம்மால் உணரப்பட்டது.

எமக்கான, எம் இனத்திற்கான தேவைகளை, எமது இளம் சந்தியினர்க்கான வழிகாட்டல்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய காட்சி ஊடகங்கள், செயற்படாமல் அல்லது, செயலிழக்கப்பட்ட நிலையில், வரலாற்றின் பதிவாகவும், எதிர்கால வழிகாட்டியாகவும் ஒரு காட்சி ஊடகம் தேவை என்பது, எமது இனத்தின் இருப்பிற்கான அத்தியாவசிய தேவையாகும். இதனை நிறைவேற்றும் நம்பிக்கையுடன் தமிழ்க்கதிர் தொலைக்காட்சி உங்கள் முன் உதிக்க உள்ளது.

இலைமறை காயாக இருக்கும், திறமை மிக்க, எமது தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்களுக்கும், கலைஞர்களுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் தளம் அமைத்துக் கொடுப்பதன் மூலம், புலம்பெயர் நாடுகளில் எமது தேசிய அடையாளத்தையும், பண்பாட்டையும், மொழியையும் பேணிப் பாதுகாப்பதற்கு, எம்மவர்களால் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு மெருகூட்ட முடியும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இது உங்கள் தொலைக்காட்சி: உங்களுக்கான தொலைக்காட்சி. இதனை மெருகூட்டி, வளர்த்தெடுப்பது உங்கள் கைகளிலேயே தங்கியிருக்கின்றது. எனவே தமிழ்க்கதிர் தொலைக்காட்சியின் பயணத்தில் இணைந்து தார்மீக ரீதியில் ஆதரவு நல்குமாறு உங்களை உரிமையுடன் வேண்டுகின்றோம்.

இதே நேரத்தில் தமிழ்க்கதிர் தொலைக்காட்சி மலர்வதை அறிந்து விளம்பரங்கள், நிதி அனுசரணைகள் வாயிலாக உதவி புரிந்து, உறுதுணை நிற்க முன்வந்திருக்கும் அனைத்துப் புலம்பெயர் தமிழ் வணிகப் பெருந்தகைகளுக்கும் எமது நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றோம்.

வாருங்கள்: புதியதொரு விதி செய்வோம்.

«உண்மைக்கு முன்னால் நடுநிலை என்பது இல்லை»

அன்புடன்
நிர்வாகம்
ஊடக மையம்

TKTV.TV
TAMILKATHIR.COM

tktv.info@gmail.com

# தனிநாடாக உதயமாகுமா குர்திஸ்தான்?

## ஈராக்கில் இருந்து பிரிவதற்கு ஆதரவு

இலங்கைத் தீவில் சிங்கள ஆட்சியாளர்களின் பிடியில் இருந்து தமிழீழ தேசம் பிரிந்துசென்று தனிநாடு அமைப்பதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என தமிழ் மக்கள் உலகெங்கும் போராடிவரும் நிலையில், ஈராக்கில் இருந்து பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பை குர்திஸ்தான் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

ஈராக்கில், பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் இடம்பெற்ற குர்திஸ்தான் சுயாட்சி குறித்த வாக்கெடுப்பில், 92 சதவீதத்துக்கு மேலானவர்கள் சுயாட்சிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஈராக்கில் குர்திஸ் மக்கள் செறிந்து வாழும் மூன்று மாகாணங்கள் அடங்கலான பகுதிக்கு சுயாட்சி அளிப்பதா, இல்லையா என்று முடிவு செய்யும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த வாக்கெடுப்பில், முப்பத்து மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட குர்திஸ்கள் மற்றும் குர்திஸ் அல்லாதவர்கள் பங்கேற்றார்கள். ஈராக் அரசின் கடும் எதிர்ப்பும் மத்தியில் வட ஈராக்கில், குர்திஷ்களும் ஈராக் அரசாங்கமும் உரிமை கோரும், சர்ச்சைக்குரிய இடங்களிலும் இந்த இவ்வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதில், சுயாட்சிக்கு ஆதரவாக 28 இலட்சத்து 61 ஆயிரம் பேர் வாக்களித்தனர். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவிருந்த கடைசி நேரத்தில், முடிவுகளை இரத்துச் செய்யுமாறு ஈராக் பிரதமர் ஹைதர் அல் அபாதி தேர்தல் ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார். தேர்தல் முடிவுகள் மூலமாக அன்றி, மத்திய அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி அதிகாரப் பகிர்வு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்றும் அவர் கோரியிருந்தார். எனினும், அவரது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. 'சுயாட்சிக்கு



ஆதரவாக முடிவுகள் வந்திருப்பதையடுத்தே பேச்சு வார்த்தைக்கு அரசு தயாராகியிருக்கிறது' என்று குர்திஸ் ஆதரவாளர்கள் தெரிவித்தனர். ஆனால், ஈராக்கியப் பிரதமர் ஹைடர் அல்–அபாடி, 'இந்த வாக்கெடுப்பு, அரசமைப்புக்கு முரணானது என்ற அடிப்படையில், அதன் முடிவுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கோ அல்லது பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கோ, நாம் தயாராக இல்லை' என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்த குர்திஸ்தானின் தலைவர் மசூட் பர்ஸானி, 'ஆம்' என்ற பிரிவு வெற்றிபெற்றுள்ளது எனவும், குர்திஸ் பிராந்திய அரசாங்கத்தை அச்சுறுத்துவதிலும் தடை விதிப்பதிலும் பார்க்க, அதனுடன் காத்திரமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறும் கோரினார். தடைகளை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியேற்படலாம். ஆனால், நாங்கள் வெற்றிபெறுவோம் என்று தெரிவித்த அவர், இவ்வாக்கெடுப்பில் வாக்களித்த மில்லியன்கணக்கான மக்களின் ஆணையை மதிக்குமமாறு, உலக வல்லரசுகளைக் கோருவதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக, அறிக்கையொன்றை வெளியிட்ட குர்திஸ்தான் பிராந்தியத் தொலைக்காட்சி, 90 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள், 'ஆம்'என வாக்களித்தனர் என்று குறிப்பிட்டது.

ஈராக் அரசாங்கத்தையும் அதன் தோழமை நாடுகளையும் எதிர்த்துக் கொண்டு நடத்தப்பட்ட இவ்வாக்கெடுப்பு, சட்டரீதியாக வலுவற்றது என்ற போதிலும், ஈராக் அரசாங்கம் மீது அழுத்தத்தை வழங்கும். அதைவிட, பிராந்தியத்தில் பதற்றத்தையும் ஏற்படுத்தக்கூடும். ஈராக்கின் அயல் நாடான ஈரானில், இவ்வாக்கெடுப்பைக் கொண்டாடி, அங்குள்ள குர்திஸ்கள், கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாக்கெடுப்புக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஈரான், குர்திஸ்தான் பிராந்தியத்துக்கு மேலாக விமானங்களைப் பறந்து, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தது. இந்நிலையில், அந்நாட்டு மக்களே, வாக்கெடுப்புக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

மறுபக்கமாக, குர்திஸ் ஆயுதக்குழுக்களுக்கு எதிராகத் தனது நாட்டில் போராடிவரும் துருக்கி, இவ்வாக்கெடுப்பை, தனக்கான அச்சுறுத்தலாகக் கருதுகிறது. ஏற்கெனவே, கடுமையான எச்சரிக்கையை, அந்நாடு விதித்திருந்தது. எனவே, அடுத்ததாக எதைச் செய்யுமென்பது, கேள்வியாக உள்ளது.

இந்நிலையில், ஈராக் மத்திய அரசு, குர்திஸ்தான் பகுதிக்குச் செல்ல வேண்டிய, அங்கிருந்து வெளியே வர வேண்டிய சர்வதேச விமானங்களை இரத்து செய்துள்ளது. குர்திஸ்தான் பகுதியில் உள்ள இர்பில், சுலைமானியா விமான நிலையங்களின் கட்டுப்பாட்டை 3 நாட்களுக்குள் மத்திய அரசாங்கத்துக்கு வழங்க வேண்டுமெனத் தெரிவித்ததோடு, அவ்வாறில்லையெனில், விமானங்களுக்கான சர்வதேசத் தடையொன்றை எதிர்கொள்ள வேண்டியேற்படுமென அறிவித்தது. எனினும், மனிதாபிமான, இராணுவ மற்றும் தூதரகம் சார்ந்த விமானங்களுக்கு இந்த தடையில் இருந்து விலக்கு இருப்பதாக ஈராக் கூறியுள்ளது.

ஈராக்கின் கோரிக்கையை ஏற்று தங்கள் விமானங்களை இரத்து செய்யவுள்ளதாக லுஃப்தான்சா, ஒஸ்ரியன் ஏர் லைன்ஸ், துருக்கிஸ் ஏர் லைன்ஸ் உள்ளிட்ட விமான நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இந்த தடை சட்டவிரோதமானது, குர்துக்களுக்கு எதிரான தண்டனை என்று குர்திஸ்தான் அரசு கூறியுள்ளது.

இந்த நிலையில், குர்திஸ் பேஸ்மேர்கா படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் வளம் மிக்க கிர்குக் உள்ளிட்ட சர்ச்சைக்குரிய பகுதிகளுக்கு இராணுவத்தை அனுப்பும்படி ஈராக் பிரதமரை அந்நாட்டுப் நாடாளுமன்றம் கேட்டுக் கொண்டதை எதிர்கொள்ள சட்ட நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதாகவும் குர்திஸ்தான் வட்டார அரசு சூளுரைத்துள்ளது. ஏற்கனவே, இர்பில், சுலைமானியா விமான நிலையங்கள் ஈராக் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. இந்தத் தடை ஐ.எஸ். படையினருக்கு எதிரான போரை பலவீனப்படுத்தம் என்றும் குர்திஸ்தான் வட்டார அரசின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பலஸ்தீன அரசுக்கு இன்டர்போல் அங்கத்துவம் வழங்கியது

இஸ்ரேலின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் சர்வதேச காவல்துறையான இன்டர்போல் பலஸ்தீன அரசுக்கு அங்கத்துவம் வழங்கியுள்ளது. சீனாவில் அண்மையில் இடம்பெற்ற இன்டர்போலின் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் சொலமன் தீவுகளுடன் பலஸ்தீனத்தின் விண்ணப்பமும் அங்கீகரிக்கப்பட்டது.

பலஸ்தீனம் ஒரு தேசமாக உருவெடுப்பதற்கு உதவும் சர்வதேச அமைப்பின் அங்கத்துவத்திற்கு எதிராக இஸ்ரேல் கடும் பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தது. கடந்த ஆண்டு பலஸ்தீனத்தின் விண்ணப்பம் இடைநிறுத்தப்பட்டதை இஸ்ரேல் பெரும் வெற்றியாக கருதியது.

இன்டர்போல் அங்கத்துவம் பெறுவதற்கு பொதுக்குழு கூட்டத்தில் உறுப்பு நாடுகளில் மூன்றில் இரண்டு ஆதரவு தேவைப்படுகிறது. இந்நிலையில் தமது அங்கத்துவத்திற்கு 75 வீதத்திற்கு அதிகமான வாக்குகள்




கிடைத்ததாக பலஸ்தீன விடுதலை அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

2012ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பார்வையாளர் அந்தஸ்த்தை பெற்றது தொடக்கம் பலஸ்தீனம் 50க்கும் அதிகமான சர்வதேச அமைப்புகள் மற்றும் ஒப்பந்தங்களில் இணைந்திருப்பதாக பலஸ்தீன வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவைகளில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் ஐ.நா கலாசார அமைப்பான யுனெஸ்கோவிலும் பலஸ்தீனம் அங்கத்துவம் பெற்றுள்ளது.

பிரான்ஸ் லியோன் நகரைத் தளமாகக் கொண்ட இன்டர்போல், கைது செய்யப்படவேண்டியவர்கள் தொடர்பான சிவப்பு அறிக்கைகளை வெளியிடுவதோடு, உறுப்பு நாடுகள் மற்றும் சர்வதேச நீதிமன்றங்களின் கோரிக்கையின் கீழ் சர்வதேச பிடியாணைகளையும் பிறப்பிக்கும்.

# உலகிலேயே முதல்தர குடிகார நாடு எது ?

ஆண்டுக்கு 2.5 மில்லியன் இறப்புகள் மது அருந்தும் பழக்கத்தால் ஏற்படுகிறது என்று உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட ஒரு அறிக்கை கூறுகிறது. உலகம் முழுவதிலும் 4 சதவிகித மரணங்கள் குடிப்பழக்கத்தால் ஏற்படுகிறது என்றும் அந்த ஆய்வறிக்கை தகவல் வெளியிட்டுள்ளது. பால்வினை (எய்ட்ஸ்), வன்முறை அல்லது கசநோய் ஆகியவற்றால் ஏற்படும் இறப்புகளை விட மது அருந்துவதன் காரணமாக மிக அதிகமான இறப்புகள் ஏற்படுகின்றன. அதிகப்படியான மது அருந்தும் நாடுகளாக 193 நாடுகளைப் பட்டியலிட்டு அவற்றின் மது நுகர்வு விகிதங்களையும் வெளியிட்டது உலக சுகாதார அமைப்பு.

பொதுவாக வளர்ந்த நாடுகளில் மதுப் பழக்கம் மிக அதிக அளவிலும், முஸ்லீம் மக்கள் அதிகமுள்ள நாடுகளில் இப்பழக்கம் குறைந்த விகிதத்திலும் இருந்து வருவதும் கண்டறியப்பட்டது. மேலும் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ள மதுபானங்களில் முதலிடம் பெற்றது பீர்தான். அடுத்து வைன். அதன் பின்னரே மற்ற குடிபானங்களின் வரிசை. சிலர் குடிப்பதற்காக சொந்தமாக தொழிற்சாலை கூட வைத்திருக்கிறார்களாம்.

உலகின் அதிக மது அருந்தும் முதல் 25 நாடுகள் இவைதான்.

பின்லாந்து, ஜேர்மனி, லக்ஸம்பேர்க், ஒஸ்ரியா, நெதர்லாந்து, ஸ்லோவாக்கியா, டென்மார்க், பிரித்

## குறுஞ்செய்தி அனுப்பத் தடை!

'வாட்ஸ் அப்' மூலம் செய்தி மற்றும் காணொளி பரிமாற்றம் செய்ய சீன அரசு தடை விதித்துள்ளது. வாட்ஸ் அப்பில் காணொளி பரிமாற்றம் கடந்த யூலை மாதமே சீனாவில் தடை செய்யப்பட்டது. தற்போது வாட்ஸ் அப்பில் குறுஞ்செய்திகளுக்கும் சீன அரசு தடை விதித்துள்ளது.

## லிபியாவில் டிரம்பின் முதல் தாக்குதல்!

லிபியாவில், அமெரிக்க வான்படையினர் நடத்திய தாக்குதலில், 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனல்ட் ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர் லிபியாவில் மேற்கொள்ளப்படும் முதலாவது தாக்குதல் இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது. லிபியாவில் தென்கிழக்காக 240 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பாலைவனப் பகுதியில் உள்ள ஐ.எஸ். ஆயுததாரிகளின் இலக்குகள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. லிபிய அரசாங்கத்தின் உதவியுடனேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க அறிவித்துள்ளது.

## வளி மாசடைவதால் மற்றுமொரு சவால்

வளி மாசடைவதன் காரணமாக சிறுநீரக நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளதென ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. இது, உலகம் எதிர்நோக்கியுள்ள மற்றுமொரு பாரிய சவால் என ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அமெரிக்க சிறுநீரகவியல் அமைப்பு, கடந்த 8.5 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. இந்த அமைப்பு சுமார் 2.5 மில்லியன் மக்களிடம் இது தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. மாசடைந்த வளியை, குறைந்த அளவிலேனும தொடர்ச்சியாக உள்வாங்கும் பட்சத்தில் சிறுநீரக தாக்கங்களுக்கு உள்ளாக நேரிடும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## 53 மில்லியன் டொலருக்கு வைர விற்பனை

ஒரு டென்னிஸ் பந்து அளவிற்கு பெரிதான ஆனால் வெட்டப்படாத முழுமையான, உலகின் பெரிய வைரம் 53 மில்லியன் டொலர்களுக்கு ஏலம் விடப்பட்டது. கனடாவின் லூகரா வைர கோர்ப்



பரேசன் இத்தகவலை தெரிவித்தது. இதன் நிறை 1,109 கரட்டாகும். ஏலத்தில் இதை பிரித்தானியாவின் பிரபல கிராஃப் டயமண்ட்ஸ் நிறுவனம் ஒரு கரட்டிற்கு 47,777 டொலர் வீதம் என்ற கணக்கில் ஏலம் எடுத்துள்ளது. இந்த வைரம் போட்ஸ்வானாவின் சுரங்கம் ஒன்றில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெட்டி எடுத்தனர். இது 2.5 முதல் 3 பில்லியன் ஆண்டுகள் பழைமையானது என்று கூறுகின்றனர். இதற்கு போட்ஸ்வானாவின் தேசிய மொழியில் நமது ஒளி என்று பெயரிட்டிருந்தனர்.

## ஜனாதிபதி மீது விமர்சனம் பட்டத்தை இழந்த அழகி

துருக்கி நாட்டு ஜனாதிபதியை விமர்சனம் செய்த குற்றத்திற்காக அந்நாட்டு அழகி ஒருவரின் மிஸ் துருக்கி பட்டம் பறிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. துருக்கி நாட்டில் சில தினங்களுக்கு முன்னர் 2017ம் ஆண்டின் 'மிஸ் துருக்கி' அழகி போட்டி நடந்துள்ளது. இப்போட்டியில் பங்கேற்ற இடிர் எஸென் (18) என்பவர் மிஸ் துருக்கியாக வெற்றி பெற்று மகுடம் சூட்டப்பட்டார். எனினும், பட்டம் அளித்த சில மணி நேரங்களில் மேடையில் பரப்பரப்பு ஏற்பட்டுள்ளது. மிஸ் துருக்கியாக தேர்வு செய்யப்பட்ட இடிர் எஸெனின் அழகி பட்டம் திரும்ப பெற்றுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதுக் குறித்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பேசுகையில், கடந்தாண்டு யூலையில் ஜனாதிபதியான எர்டோகனின் ஆட்சியை கைப்பற்ற புரட்சி நடைபெற்றது. இப்புரட்சியில் ஜனாதிபதிக்கு எதிராக போரிட்டு உயிரிழந்த படையினரை இடிர் எஸென் புகழ்ந்து பேசி டுவிட்டரில் பதிவு வெளியிட்டுள்ளார். இவ்விபரம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ள நிலையில், ஜனாதிபதியை எதிர்த்தவருக்கு மிஸ் துருக்கி அழகி பட்டம் கூட முடியாது என தெரிவித்துள்ளனர். மிஸ் துருக்கி அழகி பட்டத்தை இழந்த இடிர் எஸென் கூறுகையில் இராணுவ புரட்சி பற்றி நான் பொதுவாக தான் கருத்து கூறினேன். நான் ஒன்றும் அரசியல்வாதி இல்லை என வேதனையுடன் கருத்தை தெரிவித்துள்ளார்.

## பாம்புக் கணவனின் பரிதாப முடிவு

மனைவியின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாத கணவர், சமூக வலைதளத்தில் தனது வித்தியாசமான தற்கொலையை நேரடியாக ஒளிபரப்பிய சம்பவம் ரஷ்யாவில் இடம்பெற்றுள்ளது.



யூட்ரியூபில் தனது செல்லப் பாம்புகளுடன் காட்சி நடத்தி வந்தவர் பாம்பு நிபுணர் ஆர்ஸ்லான் வலீவ் (31). இவர் தனது மனைவி எக்டீனா காட்யாவுடன் நடத்தும் பாம்புக் காட்சிகள் யூட்ரியூபில் பெருவரவேற்புப் பெற்றவை. இந்த நிலையில், தன் மனைவிக்கு வேறொரு ஆணுடன் தொடர்பிருப்பதாகக் கூறி கடந்த ஓகஸ்ட் மாதம் வலீவ், காட்யாவைக் கடுமையாகத் தாக்கினார்.



இதனால் காட்யா பிரிந்து சென்றார். எனினும், சில தினங்களுக்கு முன் தனது செயலுக்கு வருந்திய வலீவ், பொது இடத்தில் வைத்து தனது தவறுக்காக

21

தானியா, பிரான்ஸ், அயர்லாந்து, போர்த்துக்கல், தென்கொரியா, லித்துவேனியா, குரேஷியா, பெலாரஸ், ஸ்லொவேனியா, ருமேனியா, அன்டோரா, எஸ்தோனியா, உக்ரெய்ன், ரஷ்யா, ஹங்கேரி, செக் குடியரசு, மோல்டோவா, லட்வியா ஆகிய நாடுகள் முதல் 25 இடங்களைப் பிடித்திருக்கின்றன.

## 2 ஆயிரம் தொன் புத்தர் ஆலயம் நகர்த்தப்பட்டது!

சீனாவின் ஷெங்காய் நகரில் உள்ள 135 ஆண்டுகள் பழமையான ஆலயம் பாதுகாப்பாக வேறு இடத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளது. சீனாவின் 'ஙங்காய் நகரில் 1882ம்



ஆண்டு கட்டப்பட்ட யூஃபூ புத்தர் ஆலயம் 135 ஆண்டுகள் பழைமையானதாகும். இந்த ஆலயத்தினுள் 3 மிகப் பெரிய புத்தர் சிலைகள் உள்ளன. இந்த ஆலயம், 2000 தொன் நிறை கொண்டதாகும். இங்கு வருடத்திற்கு சுமார் 15 இலட்சம் சுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில், இந்த ஆலயத்திற்கு வருடந்தோறும் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையிலும் பாதுகாப்பு கருதியும், இந்த ஆலயம் வேறு இடத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, ஆலயம் இருந்த இடத்திலிருந்து 30.66 மீற்றர் தூரம் நகர்த்தப்பட்டுள்ளதுடன், 1.05 மீற்றர் அளவு உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் அனைத்தும் 2 வாரங்களுக்குள் நடைபெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வங்காளதேச பிரதமரை படுகொலை செய்ய திட்டம்!

**இந்திய உளவுத்துறை உதவியுடன் முறியடிப்பு**

வங்காள தேச பிரதமர் ஷேக் ஹசீனாவை கொல்ல பயங்கரவாதிகள் சதித்திட்டம் தீட்டியது தெரியவந்துள்ளது. வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு சிறப்பு பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

அவர்களில் 6 முதல் 7 பேர் மூலம் டாக்காவில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து சுட்டுக்கொல்ல சதித்திட்டம் தீட்டப்பட்டு உள்ளது. முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி 1984ம் ஆண்டு ஒக்டோபர் 31ம் திகதி தனது மெய்க்காப்பாளர்களாலே சுட்டுக் கொல்லப்பட்டார். அதே போன்று இந்தத் தாக்குதலையும் நடத்துவதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.




ஆனால் அவர்களின் கொலை சதி முறியடிக்கப்பட்டுள்ளதாக் கூறப்படுகின்றது. இச்சம்பவம் கடந்த ஓகஸ்ட் 24ம் திகதி நடந்தது. இச்சதியை ஜமாத்–உல்–முஜாகிதீன் வங்காளதேசம் என்ற பயங்கரவாத அமைப்பின் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டு இருந்துள்ளது. இந்த சதித்திட்டத்தை இந்தியா மற்றும் வங்காளதேச உளவுப் பிரிவு கடைசிநேரத்தில் முறியடித்துள்ளது. பயங்கரவாதிகள் மற்றும் ஹசீனாவிற்கு பாதுகாப்பு அளிக்கும் படையினர் இடையிலான தொலைபேசி உரையாடல் மூலம் கண்டுபிடித்து தடுத்து நிறுத்தினர்.

பாதுகாப்பு படையினர் மற்றும் பயங்கரவாதிகள் இடையே கூட்டாக இப்போது சதித்திட்டம் தீட்டப்பட்டு இருந்துள்ளது. பயங்கரவாதிகள் ஹசீனாவின் அலுவலகத்தை சுற்றிய பகுதியில் வெடிகுண்டுகளை வெடிக்க செய்யவும், அவருக்கு பாதுகாப்பு அளிப்பவர்கள் அவரை சுட்டுக் கொல்லவும் திட்டம் தீட்டப்பட்டு இருந்துள்ளது. வெடிகுண்டுகளை வெடிக்க செய்வதன் மூலம் ஹசீனாவை சுட்டுக் கொல்லும் பாதுகாப்பு படையினர் எளிதாக பயங்கரவாத தாக்குதல் என தப்பிவிட முடியும் என்ன நோக்கில் திட்டம் தீட்டப்பட்டு இருந்து உள்ளது என தெரியவந்துள்ளது.

வங்காளதேசத்தில் செயல்பட்டு வரும் ஜமாத் உல் முஜாகிதீன் பயங்கரவாத இயக்கம் அங்கு பல்வேறு தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது. பயங்கரவாத சதிசெயல் முறியடிப்பு மிகவும் எச்சரிக்கையாக முறியடிக்கப்பட்டுள்ளது, இதில் தொடர்புடைய கடைசி நபர் வரையில் விசாரணை வளையத்திற்குள் வருவார்கள், இதில் சந்தேகத்திற்குரிய அனைத்து நபர்களிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது.

# மார்லின் மன்றோ அருகே உறங்கும் 'பிளேபோய்' நிறுவனர்!

உலகெங்கிலும் அதிக வாசகர்களை கொண்ட பிரபல பாலியல் கவர்ச்சி இதழான 'பிளேபோய் (Playboy)' சஞ்சிகையின் நிறுவனர் ஹூக் ஹெப்னர் (Hugh Hefner) தனது 91 வயதில் மரணமடைந்துள்ளார். அமெரிக்காவில் சிக்காகோ நகரில் பிறந்த ஹூக்



தனது முதல் இதழுடன்

ஹெப்னர், 1953ம் ஆண்டு பிளேபோய் இதழை தொடங்கினார். இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையில் இருந்து அமெரிக்கா மெல்ல மீண்டு வந்து கொண்டிருந்த காலம் அது. அப்போது ரசிகர்களின் பேராதரவை பெற்றிருந்த மார்லின் மன்றோவின் நிர்வாணப் படத்தை அட்டையில் போட்டு, நகைச்சுவை, நுட்பம் மற்றும் மசாலா என்கிற தலைப்பிட்டு முதல் இதழினை வெளியிட்டார். போரினால் ஏற்பட்ட மன அழுத்தங்களில் விடுபட பெருமளவான அமெரிக்க இராணுவத்தினரும் மக்களும் பிளேபோய் இதழுக்கு அடிமை ஆனார்கள்.

பிளேபாய் இதழ் வெளியாக தொடங்கிய ஒரு வருட காலத்துக்குள் அதன் விற்பனை 2 இலட்சம் பிரதிகளை எட்டியது. பிளேபாய் இதழின் அட்டையில், பிரபல ஹொலிவுட் நடிகை பமீலா ஆண்டர்சன் ஏராளமான பிரபலங்களின் கவர்ச்சி படங்கள் இடம்பெற்றன. 5 வருடங்களுக்குள் அதன் விற்பனை 10 இலட்சம் பிரதிகளாக உயர்ந்து, அமெரிக்க பத்திரிகைகளில் முதல் இடம் பிடித்தது. 1970களில் இந்த இதழ் 70 இலட்சம் வாசகர்களை கொண்டிருந்தது. பின்னர் 21ம் நூற்றாண்டில் இணையம் பயன்பாடு அதிகரித்ததாலும், போட்டி பத்திரிகைகள் உருவானதாலும் அதன் விற்பனை 30 இலட்சமாக குறைந்தது.

2015ம் ஆண்டில், பிளேபோய் இதழ் தனது அட்டைபடத்தில் பெண்களின் நிர்வாணப் படங்களை வெளியிடுவதை நிறுத்திக்கொண்டது. உயிரோடிருந்தபோது பிளேபோய் மாளிகையின் அந்தப்புரத்தில் இன்பத்தில் திளைத்திருந்த பிளேபோய் இதழின் நிறுவனர் ஹூக் ஹெப்னர், இறந்த பின்னும் ஹொலிவுட்டின் புகழ்பெற்ற நடிகை மாரிலின் மன்றோ கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பிளேபோய் முதல் இதழின் அட்டைப் படத்திற்காக காட்சி கொடுத்த மாரிலின் மன்றோ 1962ல் மரணித்தார். தனது 91 வயதில் இறந்த ஹெப்னர், 1992ம் ஆண்டே மார்லின் புதைக்கப்பட்ட இடத்தின் அருகிலேயே தன்னை புதைப்பதற்காக ஒரு இடத்தை 75,000 டொலருக்கு வாங்கி இருந்தார்.

இறப்புக்கு பிந்தைய தன் திட்டம் குறித்து லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸுக்கு ஒரு முறை பேட்டிக் கொடுத்த ஹெப்னர், லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள வெஸ்ட்வுட் வில்லேஜ் நினைவு பூங்காவில் திரை பிரபலங்களான நடாலியா வுட், டீன் மார்ட்டின் மற்றும் பரா பாவ்செட்டும் ஆகியோர் உட்பட தன்னுடைய பல நண்பர்கள் அடக்கம் செய்யபட்டு இருக்கிறார்கள். நான் இந்த உணர்வுகளில் நம்பிக்கை கொண்டவன். எல்லையில்லா நேரத்தை மாரிலின் அருகில் செலவிடும் இனிமையான வாய்ப்பைத் தவிர்ப்பது மிகவும் கடினமானது என்று கூறி இருந்தார்.

இந்த விடயத்தை மக்கள் இரு வேறு விதமாக பார்க்கிறார்கள். சிலர் இதனை நெகிழ்ச்சியான ஒரு விடயமாக பார்க்கும்போது, வேறு சிலர் இதனை ஒழுக்கக்கேடான விடயமாக பார்க்கிறார்கள். ஹெப்னரின் இந்த செயலை சமூக ஊடகங்களில் அவரது இரசிகர்கள் புகழ்கிறார்கள். எல்லையில்லா நேரத்தை மாரிலின் அருகில் செலவிடும் இனிமையான வாய்ப்பைத் தவிர்ப்பது மிகவும் கடினமானது, என்று முன்பு ஹெப்னர் கூறியதை குறிப்பிட்டு டுவிட்டரில் பதிவிட்டு இருக்கிறார்கள்.

ஆனால், வேறு சிலரோ 1953 டிசம்பர் மாதம் வெளியான பிளேபோய் முதல் இதழுக்காக காட்சி கொடுத்ததற்காக, மாரிலின் வெட்கப்பட்டார். தன்னுடைய எதிர்காலம் இதனால் பாதிக்கப்படுமோ என்று அச்சப்பட்டார் என்று கூறுகிறார்கள். மாரிலின் தனது நடிப்பு தொழிலில் ஏற்பட்ட தொய்வை ஈடுசெய்யவும் மற்றும் பண தேவைகளுக்காகவும் பிளேபோய் இதழுக்



தனது மூன்றாவது மனைவியுடன்

காக காட்சி கொடுத்தார். அதற்காக 50 டொலர்கள் ஊதியமாக பெற்றார். அவருடைய வார்த்தைகளில் அவரது வாழ்க்கை (Marilyn: Her Life in Her Own Words) புத்தகத்தில் இவ்வாறாக குறிப்பிடப்பட்டுள்ளது : மாரிலினின் நிர்வாணப் படத்தை வைத்து பல கோடி பொருளீட்டியவர்களிடமிருந்து நான் அதற்கான நன்றியை பெறவில்லை. என் படம் வெளியான முதல் இதழை எனக்கு யாரும் தரவில்லை. அதன் பிரதியை நான் தான் வாங்கினேன்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுடன் உறவு வைத்துக்கொண்டதாக பெருமைப்படும் ஹூக் ஹெப்னர், 3 பெண்களை திருமணம் செய்து மனைவியாக்கியிருந்தார். தனது 86வது வயதில் தன்னைவிட 60 வயது குறைவான கிறிஸ்டன் ஹாரீஸ் என்பவரை மூன்றாவது மனைவியாக ஹெப்னர் திருமணம் செய்து கொண்டார். தற்போது வரை கிறிஸ்டல் என்ற மனைவியுடனேயே வாழ்ந்துவந்தார்.

# கியூபாவில் உள்ள அமெரிக்க தூதரகம் தொடரும் விசித்திர மர்மத் தாக்குதல் பலர் பாதிப்பு – மூடுவதற்கு முடிவு

கியூபாவின் தலைநகர் ஹவானாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தினுள் நடக்கும் மர்மான விசித்திரத் தாக்குதல்களால் 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், அந்தத் தூதரகத்தை மூடுவது குறித்து ஆலோசித்து வருவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை



அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் அறிவித்துள்ளார். ஏறத்தாழ அரை நூற்றாண்டாக மூடப்பட்டிருந்த தூதரகம், கியூபாவுடன் ஏற்பட்ட உறவையடுத்து, அப்போதைய அமெரிக்க அதிபர் ஒபாமா தரப்பிலிருந்து நல்லிணக்க நடவடிக்கையாக கியூபா தலைநகர் ஹவானாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தை திறக்க முடிவாகியது. இதனையடுத்து கடந்த 2015ம் ஆண்டு திறக்கப்பட்டது.

இந்த நிலையில், கடந்த சில மாதங்களாக தூதரக கட்டடத்தில் பணியாற்றி வந்த பலருக்கு விசித்திரமான உடல் உபாதைகள் ஏற்பட்டு சிகிச்சை பெற்றனர். இதுவரை அங்கு பணியாற்றிய 21 பேர் மிக மோசமாக பாதிக்கப்பட்டனர் என்று ரெக்ஸ் டில்லர்சன் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், இதுவரை 21 பேர் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது நிலைமையின் தீவிரத்தை உணர்த்தும். இவர்கள் கியூபாவிலிருந்து அமெரிக்காவுக்கு திரும்பிவிட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களில் அதிகாரிகளும் அவர்களுடைய குடும்பத்தினரும் அடங்குவர். சிலர் நிரந்தரமாக செவி கேட்கும் திறனை இழந்துவிட்டனர். சிலர் தலையில் காயம் ஏற்பட்டது போன்ற வலியை எப்போதும் உணர்கின்றனர். சிலரின் காதுகளில் இடைவிடாத ஒலி கேட்பது, விடாத தலைவலி, நினைவுத் திறன் பாதிப்பு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. சிலருக்கு சாதாரணமாகப் புழக்கத்தில் இருக்கும் சில சொற்களைக் கூட நினைவுக்குக் கொண்டு வந்து பேச இயலவில்லை. அறையின் ஒரு பகுதியில் இருக்கும்போது மட்டும் சிலர் தலையில் அதிர்வுகள் அல்லது தலைக்குள் பெரும் ஓசைகளை உணர்கின்றனர். இவற்றிலிருந்து அந்தக் கட்டடம் ஒலி ரீதியான ஏதோ ஒரு வகைத் தாக்குதலுக்கு உள்ளானதாக கருத இடமிருக்கிறது. இந்த நிலையில் அங்கு மேலும் எவரும் பாதிப்புக்கு உள்ளாவதை அமெரிக்க அரசு விரும்பவில்லை. எனவே தூதரகத்தை தாற்காலிக அளவிலாவது மூடுவது குறித்துப் பரிசீலித்து வருகிறோம் என்றார்.

இதேவேளை, பாதிக்கப்பட்டவர்களின் உடல் அறிகுறிகளை வைத்து அந்தக் கட்டடத்தில் மின்காந்த ஆயுதத் தாக்குதல் நடைபெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. கியூபா உளவு அமைப்பின் ஒரு பிரிவு அல்லது வேறு ஏதேனும் ஒரு நாடு உளவு பார்ப்பதற்காக செய்த முயற்சியில் தவறு ஏற்பட்டு மின்காந்தத் தாக்குதல் அல்லது சொனிக் (ஒலி) தாக்குதல் ஏற்பட்டிருக்கலாம் என்று அமெரிக்க நிபுணர்கள் கருதுகின்றனர்.

## 25 மில்லியன் பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள்!

உலகில் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் சுமார் 56 மில்லியன் கருக்கலைப்புகளில் ஏறத்தாழ பாதியளவிலானவை, பாதுகாப்பற்றவையாகக் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ள சுகாதார அமைப்புகள், கருக்கலைப்புக்கு எதிரான தற்போதைய அமெரிக்க அரசாங்கத்தின் நிலைப்பாடு, இதை மேலும் அதிகமாக்கும் என அச்சம் வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் நிதியுதவியைப் பெறும் அரச




சார்பற்ற நிறுவனங்கள், கருக்கலைப்பிலோ அல்லது கருக்கலைப்புக்கு ஆலோசனை வழங்குவதிலோ ஈடுபடவில்லை என்ற உறுதிமொழியை வழங்க வேண்டுமென, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், உலக சுகாதார நிறுவனமும் குட்மச்செர் நிறுவனம் என்ற அமைப்பும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், 2010ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், ஆண்டுதோறும் முழு உலகிலும், 25 மில்லியன் பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கிறது. இந்த 25 மில்லியன் கருக்கலைப்புகளில் சுமார் 97 சதவீதமானவை, ஆபிரிக்க, ஆசியக் கண்டங்களிலும், இலத்தீன் அமெரிக்காவிலுமே மேற்கொள்ளப்பட்டன என, அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்படுகிறது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த, உலக சுகாதார நிறுவனத்தின் இனப்பெருக்கச் சுகாதாரத்துக்கும் ஆராய்ச்சிக்குமான திணைக்களத்தைச் சேர்ந்த டொக்டர் பேலா கனாத்ரா, உலகிலுள்ள கருக்கலைப்புகளில் ஏறத்தாழ பாதியளவிலானவை, பாதுகாப்பற்றவை. அது, வியப்பளிக்கிறது. ஏனென்றால், விஞ்ஞான ரீதியாகப் பேசும்போது, பாதுகாப்பான கருக்கலைப்பென்பது, மிகவும் எளியதான ஒரு செயற்பாடாகும் என்று தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், கருக்கலைப்பை இறுக்கமாக்கும் விதிகளுக்கும், பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்குமிடையில், சம்பந்தமிருக்கிறது என்று தெரிவித்தார்.

## 177 திமிங்கிலங்களை வேட்டையாடிய ஜப்பான்!

தனது வருடாந்த வேட்டை நிகழ்வில் 177 திமிங்கிலங்களை வேட்டையாடி கொன்று குவித்துள்ளதாக ஜப்பான் அரசு தற்பொழுது அறிவித்துள்ளது. தீவு நாடான ஜப்பானின் வடகிழக்கு கடற்கரைப் பகுதியில் திமிங்கிலங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. இந்நிலையில் ஜப்பானைப் பொறுத்தவரை பலவேறு காரணங்களுக்காக ஆண்டுதோறும்




அந்தப் பகுதிகளில் அதிகாரப்பூர்வமாக திமிங்கில வேட்டை நடத்துவதனை வழக்கமாகக் கொண்டுள்ளது.

திமிங்கில வேட்டை நிறுத்தி வைப்பு தொடர்பாக சர்வதேச திமிங்கில வேட்டை ஆணையத்தின் ஒப்பந்தத்தில் ஜப்பானும் கையெழுத்திட்டுள்ளது. ஆனாலும் அறிவியல் ஆராய்ச்சியின் பொருட்டு திமிங்கிலங்களைக் கொல்லலாம் என்ற அந்த ஒப்பந்தத்தின் சரத்துகளில் உள்ள வசதியை பயன்டுத்தி ஜப்பான் இத்தகைய வேட்டையில் ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான வேட்டை தற்பொழுது முடிந்துள்ளதாக அரசின் மீன்வளத்துறை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இது தொடர்பாக மீன்வளத்துறை அதிகாரி கோஹி கூறியதாவது: கடந்த யூன் மாதம் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட மூன்று கப்பல்கள் தற்பொழுது வேட்டை முடிந்து திரும்பியுள்ளன. அவற்றில் இருந்து 43 மிங்கே வகை திமிங்கிலங்களும், 134 செய் வகை திமிங்கிலங்களும் கிடைத்துள்ளன. இந்த வேட்டை மூலம் நடத்தப்படும் ஆராய்ச்சிகளின் விளைவாக நீடித்து அந்த பகுதிகளில் இருக்கும் திமிங்கிலங்களின் எண்ணிக்கையினை துல்லியமாக நம்மால் பெற முடியும். ஜப்பான் மிக விரைவில் வர்த்தக ரீதியிலான் திமிங்கில வேட்டையில் ஈடுபட உள்ளதால் இந்த தகவல்கள் அதற்கு உதவும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் நோர்வே மற்றும் ஐஸ்லாந்து ஆகிய இரு நாடுகள் மட்டுமே அதிகாரபூர்வமாக திமிங்கில வேட்டையில் ஈடுபடுகின்றன. திமிங்கிலத்தினை உணவுக்காக பயன்படுத்தும் பொருட்டே வர்த்தக ரீதியிலான திமிங்கில வேட்டையில் ஈடுபட உள்ளதாக ஜப்பான் கூறுகின்றது.

## நேபாள எல்லையை இணைக்கும் நெடுஞ்சாலையைத் திறந்தது சீனா

திபெத் வழியாக நேபாள எல்லையை இணைக்கும் முக்கிய தேசிய நெடுஞ்சாலையை சீனா திறந்து வைத்துள்ளது. சீனாவின் ஒரு பாதை, ஒரு பட்டி (one road one belt) திட்டத்தின் அடிப்படையில் இந்தப் பாதை திறக்கப்பட்டுள்ளது. இந்த நெடுஞ்சாலையைத் திறந்திருப்பதன் மூலமாக, தெற்காசிய பிராந்தியத்தில் கால் பதிக்க சீன அரசு முயல்வதாகக் கூறப்படுகின்றது. திபெத்தில் உள்ள ஜிகாஸ் (Xigaze) விமான நிலையத்தில்

தொடர்ச்சி 22ம் பக்கம்

காட்யாவிடம் மன்னிப்புக் கோரினார். எனினும், தனது புதிய காதலருடன் வாழ்க்கையைத் தொடங்கப் போவதாகக் கூறிய காட்யா, வலீவுடனான விவாகத்தை இரத்துச் செய்யவும் விண்ணப்பித்தார். இதைத் தாங்கிக்கொள்ள முடியாத வலீவ், தனது செல்லப் பிராணிகளுள் விசம் நிறைந்த மம்பா (mamba) என்ற பாம்பை விட்டு தன்னைக் கடிக்க வைத்து தற்கொலை செய்துகொண்டதுடன், அதை நேரடியாகவும் ஒளிபரப்பியிருந்தார்.

## ஹெரியின் காதல் உறுதியானது!

பிரித்தானிய இளவரசர் ஹெரி முதன்முறையாக தனது காதலியும் தொலைக்காட்சி நடிகையுமான மேகன் மார்கல்லுடன் பொது இடத்தில் தோன்றி




யிருக்கிறார். மேகன் மார்கல் ஏற்கனவே திருமணமாகி விவாகரத்தானவர். அத்துடன் அவரது தந்தை வெள்ளையரானாலும் தாய் கறுப்பினத்தைச் சேர்ந்தவர்.

கனடாவில் நடைபெற்றுவரும், காயமடைந்த இராணுவத்தினர் பங்கேற்கும் விளையாட்டு நிகழ்வில் இளவரசர் ஹெரி பங்கேற்றுள்ளார். இந்தப் பொது நிகழ்விலேயே, இளவரசர் ஹெரி தனது காதலியான மேகன் மார்கல்லுடன் கைகளைக் கோர்த்தவாறு முதன்முறையாக கலந்துகொண்டார். இதன்மூலம், தமது காதலைப் பகிரங்கப்படுத்தியுள்ளார். இளவரசர் ஹெரி கடந்த ஒரு வருடமாக மேகனுடன் தொடர்பில் இருந்து வருவதாகச் சொல்லப்பட்டாலும், இதுவரை அதை உறுதிப்படுத்தும் விதமாகப் பொது இடங்களில் கலந்துகொண்டதில்லை என்பதால், இந்த நிகழ்வு பிரித்தானிய அரச குடும்பத்திலும் அதன் விசுவாசிகளிடமும் ஒரு அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது.

## உலக மக்களில் 11 வீதம் பேர் பசியில்...

ஆண்டுக்கு ஆண்டு உலகத்தில் பசியால் தவிப்பர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்கின்றது. உலகம் முழுவதும் சுமார் 81.5 கோடி பேர் பசியால் வாடுகின்றனர் என உலக சுகாதார அமைப்பு தகவல்

வெளியிட்டுள்ளது. ஆசியாவில் மட்டும் 52 கோடி பேரும், ஆபிரிக்காவில் 24 கோடி பேரும் உண்ணுவதற்கு உணவின்றி பசியால் தவித்து வருகின்றனர். 81.5 கோடி பேர் பசியால் வாடுகின்றனர் என்பது உலக மக்கள் தொகையில் 11 சதவீதம் என்பது முக்கியமான ஒன்றாகும். உள்நாட்டுப் போர் காரணமாகவும், பருவநிலை மாற்றத்தின் காரணமாகவும் ஆண்டுதோறும் பசியால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு நாடுகளில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளது. இதுவே பசியால் வாடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணம் என்று உலக சுகாதார அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

# வெற்றுக் கதிரைகளுடன் பேசிய மைத்திரி இனப்படுகொலையாளிக்கு விசா மறுப்பு



அமெரிக்காவிலுள்ள ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றிய போது, அரங்கில் பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாகவே காட்சியளித்தன. ஐ.நா. பொதுச் சபையின் 72வது கூட்டத்தொடர் கடந்த 19ம் திகதி தொடங்கியது. இந்தக் கூட்டத் தொடரில் மூன்றாவது ஆண்டாகப் பங்கேற்று உரையாற்றிய மைத்திரிபால சிறீசேன உரையாற்றினார். அதுவும் முதல் நாள் அவருக்கு உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. காலை அமர்வில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உரையாற்றியிருந்தார். அன்றைய நாளின் 27வது பேச்சாளராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றியபோது பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாகக் காட்சியளித்தன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது உரையைச் சிங்களத்திலேயே நிகழ்த்தினார். இதற்கிடையே, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள, தானும் ஜனாதிபதியுடன் செல்லத் தயாராக இருந்த நிலையில், தனக்கு விசா வழங்கப்படவில்லை என சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் முன்னாள் தளபதியும், அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள அமைச்சர் திலக் மாரப்பன, பிரதியமைச்சர்கள் சிலருடன் தன்னையும் ஜனாதிபதி தெரிவு செய்திருந்ததாகவும் கூறிய பொன்சேகா, இரண்டு இலட்சம் வரையான இராணுவத்தினரில் ஏழு, எட்டுப் பேர் செய்த குற்றங்களால் தனக்கும், நாட்டின் அனைத்து இராணுவத்தினருக்கும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். அவரது இந்தக் கருத்தின் மூலம் இனப்படுகொலையில் ஈடுபட்டதால் போர்க் குற்ற அடிப்படையில் அவருக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது அவரது வாயாலேயே உறுதியாகியுள்ளது.

## சமூகம் சீரழிய அழிவே...

என அந்த ஆசிரிய தலையங்கம் நிறைவடைகின்றது.

இது எமது தாயகத்தின் இன்றை நிலையை தத்ரூபமாகக் காட்டுகின்றது. எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, பின்பு நல்லவராவாதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே... என்ற பாடல்தான் நினைவுக்கு வருகின்றது. அவர்கள் சேர்ந்த சேர்க்கைதான் இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்துள்ளது. இதனைத்தான் ஒரு ஞானி இப்படிக் கூறுகிறார் 'நன்மக்களிடம் பிரிந்திருக்கவும் கூடாது தீயவர்களிடம் சேர்ந்திருக்கவும் கூடாது' என்று.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வழி காட்டும் போது சரியான வழியைக் காட்டுவது அவசியமாகின்றது. ஆனால், அதனைச் செய்ய பெற்றோர்கள் தவறும்போதுதான் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுகின்றது.

இதேவேளை, குறித்த இரண்டு நாழிதழ்களின் ஆசிரியதலையங்கங்களிலும் ஒரு விடயம் அழுத்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சமூக சீரழிவுகளுக்குக் காரணமாக அமைவனவற்றை அதாவது போதைப்பொருள், ஆபாசப்படங்கள் போன்றவற்றை கட்டுப்படுத்துவதில் ஆட்சியாளர்கள் போதிய கவனம் செலுத்துதல் வேண்டும் என்று.

ஆனால், மேற்குறித்த விடயங்களை தங்கு தடையின்றிக் கொடுத்துவிட்டு, குற்றச்செயல்களை எப்படிக் கட்டுப்படுத்துவது, என்பதே எல்லோருக்கும் எழும் கேள்வி.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இவ்வாறான வன்கொடுமைகள் இடம்பெற்றனவா? அங்கு ஒவ்வொரு பிரிவுகள் இருந்தன. அந்த அந்தப் பிரிவுகள் அவற்றை நெறிப்படுத்தவதில் கவனம் செலுத்தின. அனைத்து விடயங்களும் பரிசோதிக்கப்பட்டு தணிக்கைக் குழுவின் அழுகையின் கீழே வழங்கப்பட்டன. அதனால் அங்கு குற்றச்செயல்கள் இடம்பெறவாய்ப்பே இல்லாமல் இருந்தன. இதனால்தான் இன்று விடுதலைப் புலிகளின் வரவை எதிர்பார்த்து தமிழ் சமூகம் காத்துக்கிடக்கின்றது. 'எப்போது வருவீர்கள் புலிகளே... தப்பாமல் நீங்கள் வர வேண்டும்......'

நிழலின் அருமை வெய்யிலில் தெரியும் என்பார்களே அது இதுதான். இது சிந்திக்கும் நேரமல்ல செயற்படும் நேரம்.

*(சூறையாடல்கள் தொடரும்)*

## நேபாள எல்லையை....

இருந்து ஜிகாஸ் நகரின் மையப் பகுதி வரை உள்ள 40.4 கி.மீ. தேசிய நெடுஞ்சாலை, பொதுமக்களின் பயன்பாட்டுக்காக கடந்த வாரம் திறக்கப்பட்டது.

இந்த நெடுஞ்சாலை திறக்கப்பட்டதால், விமான நிலையத்துக்கும், நகரின் பகுதிக்கும் இடையேயான பயண நேரம், ஒரு மணியில் இருந்து 30 நிமிடங்களாகக் குறையும். 25 மீற்றர் அகலத்துடனும், 4 வழித்தடங்களுடனும் அமைக்கப்பட்டுள்ள முதல் தர நெடுஞ்சாலை இதுவாகும். அந்த விமான நிலையம், பொது மக்களின் பயணத்துக்காகவும், இராணுவ விமானங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இந்த நெடுஞ்சாலையின் ஒரு பகுதி, நேபாள எல்லையை இணைக்கிறது.

இந்த நெடுஞ்சாலையைத் திறந்திருப்பதன் மூலம், தெற்காசிய நாடுகளை சீன அரசால் எளிதாக அணுக முடியும். மேலும், இந்த நெடுஞ்சாலை, தெற்காசிய நாடுகளுடன் பொருளாதார மற்றும் இராணுவ ஒத்துழைப்பு நடவடிக்கைகளை சீனா மேற்கொள்வதற்கு வழி வகுக்கும் என்று நிபுணர்கள் கருதுவதாக, சீன அரசின் பத்திரிகையான குளோபல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

மேலும், திறக்கப்பட்டுள்ள இந்த நெடுஞ்சாலை, எதிர்காலத்தில், சீனா – திபெத் இடையே தொடருந்துப் போக்குவரத்து தொடர்பையும் ஏற்படுத்தும் என்று 'ாங்காய் கல்வி நிறுவனத்தின் ஆசிய–பசிபிக் ஆய்வு மைய இயக்குநர் ஜாவோ கான்செங் கூறியுள்ளார்.

இந்தத் தொடருந்துப் போக்குவரத்து, பிராந்திய வளர்ச்சிக்காகத் தொடங்கப்பட்டாலும், இது, இந்தியாவுக்கு கோபத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகவே கருதப்படுகிறது. இந்த நெடுஞ்சாலை இராணுவ விமானங்களின் ஓடுபாதையாகவும் பயன்படுத்தப் படலாம் என்றும் அவர் கூறினார். திபெத் – நேபாளம் இடையே சாலை வசதியை மேம்படுத்துவதில் சீன அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இதனிடையே, நேபாளத்தில் இந்தியப் பொருட்களை முடக்கி, மாதேசி இன மக்கள் கடந்த ஆண்டு போராட்டங்களில் ஈடுபட்டு வந்த நேரத்தில், அப்போதைய பிரதமர் கே.பி.சர்மா ஒலி, சீனாவுடனான வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அப்போது முதல், நேபாள எல்லைக்கு தொடருந்துப் போக்குவரத்தைத் தொடங்குவதற்கான பணிகளை சீனா முடுக்கி விட்டிருக்கிறது. நேபாளத்தில் இந்தியாவின் செல்வாக்கை குறைப்பதற்காக, அந்நாட்டுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்த சீன அரசு விரும்புவதாக உலக வங்கி அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆங்கிலேய ஆணை...

ராணியார் 'தரிசனம்' தருவதற்கு சம்மதிப்பது போலவும் அந்த கடிதத்தின் தொனி இருந்தது. அவர் உடனே என்ன செய்தார் தெரியுமா? பதிலுக்கு "The Prime Minister of India will be pleased to meet you (இந்திய பிரதமர் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைவார்) என்று எழுதி அனுப்பினார். மற்ற தலைவர்கள் மத்தியில் இது மிகவும் பரபரப்பாக பேசப்பட்டது. தவறை உணர்ந்த எலிசபெத், முதலில் எழுதிய கடிதத்தை திரும்ப வாங்கி கொண்டு Her Majesty will be pleased to meet you என்று திருத்தி அனுப்பினார்.

அது மட்டுமல்ல, அதற்கு பிறகு நடந்த எல்லா கொமன்வெல்த் மாநாடுகளிலும் எந்த நாட்டில் மாநாடு நடக்கிறதோ, அந்த நாட்டின் தலைவர்தான் மற்ற தலைவர்களுாக்கு அழைப்பிதழ் கொடுக்க ஆரம்பித்தனர், எலிசபெத் ராணி அல்ல. 'ஒரு காலத்தில் நாங்கள் உங்களுக்கு அடிமையாக இருந்தோம், இப்போது இல்லை' என்று சொல்லாமல் சொல்லி ஆங்கிலேயர்களின் ஆணவத்தை அடக்கிய இந்த கடிதம் உண்மையில் சரித்திரம் படைத்து விட்டது என்றே கூறலாம்.

## நாஸ்கா மர்மக் கோடு....

இவை கி.மு. 600 முதல் கி.பி. 200ற்குள் வரையப்பட்ட 2000 ஆண்டுகள் பழமையானது என வல்லுனர்கள் கூறுகின்றனர். இதில் அதிசயம் என்னவென்றால் அன்றைய தொழில் நுட்பத்தில் இப்படிப்பட்ட சீரான நீண்ட, முறையான கோடுகளும் சித்திரங்களும் எவ்வாறு வரைய முடிந்தது என்பதுதான். அதனால் இந்த கோடுகளை பற்றி நிறைய கருத்துக்கள் நிலவுகின்றன.

இங்குள்ள நிலத்தில் கறுப்பு நிற கற்கள் உள்ளன. 1998ல் வந்த ஒரு வெள்ளத்தில் இந்த பகுதியின் தார் சாலைகள் பாதிக்கப் பட்டதாம். இருந்தும் ஆச்சர்யமாக இந்த கோடுகள் சிதையவில்லை. இதில் விமானம் ஓடுதளம் போன்ற ஒரு பட்டை 2 கி.மீ. நீளம் கொண்டது. இந்த பட்டை மிக சீராக நேரே செல்கிறது. இவ்வளவு தூரத்திற்கு இதை எப்படிதான் நிலத்தில் வரைந்தார்கள் என்று அதிசயிக்க வைக்கிறது.

இதைவிட ஆச்சர்யதக்க வகையில் மலைகளின் மீது பல கைகளை கொண்ட ஒரு உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அறிவியலாளர் ஜொனி இஸ்லா கருத்துப்படி இந்த கோடுகள் கி.மு. 500 இல் பரகாஸ் (Paracas) சமூகத்தினரால் உருவாக்கப்பட்டு கி.மு. 50 இல் நாஸ்கா சமூகத்தினரால் மேம்படுத்தப்பட்டது என அறியப்படுகிறது. டொர்பியோ மெஜ்ஜியா என்பவர்தான் இந்த கோடுகளைப் பற்றி 1927 இல் முதலில் ஆராய்ந்தார். அவர் இந்த கோடுகளை இன்கா சமூகத்தினரால் பயன்படுத்தப்பட்ட விமான ஓடுதளம் என்றார்.

அறிவியலாளர் மைக்கல் கேயே கூற்றுப்படி அன்றைய சமூகத்தினரால் இவைகள் தங்கள் மூதாதையருடன் தொடர்புபடுத்தும் பாதைகள் எனவும், தங்கள் விளை நிலத்திற்கு நீர் கொடுக்கும் பாதைகள் எனவும் நம்பப்பட்டதாம். மாரியா ரிச்சே எனும் கணிதவியலாளர் இக் கோடுகள் வானவியல் நாட்காட்டி என்கிறார். இந்த பட்டைகள் முக்கிய நட்சத்திரங்கள் மற்றும் கோள்களின் இடத்தை குறிக்கின்றது என்கிறார். ஒரு சிலர் இந்த கோடுகள் வேற்றுக்கோள் வாசிகளால் உருவாக்கப்பட்டவை என்று கூறுகின்றனர். வேறு சிலர் இவை வேற்றுக்கோள் வாசிகளை தொடர்பு கொள்ள வரையப்பட்டதாக கூறுகின்றனர். இருப்பினும் இவை உருவாக்கப்பட்டதற்கான காரணங்களை கண்டறிய முடியவில்லை.

இரண்டு கால்பந்தாட்ட மைதானங்கள் அளவிற்கு உள்ள இடத்தில் ஒரு குரங்கு வரையப்பட்டுள்ளது. ஒரு இடத்தில் ஆரம்பிக்கும் கோடு சிறிய காதுகள், தலை, கால்கள், அளவான உடல், ஆறேழு சுற்று சுற்றிய வால் என சீராக வரையப்பட்டு ஆரம்பித்த இடத்திலேயே முடிகிறது. இந்தக் குரங்கின் முழு உருவத்தைப் பார்க்க வேண்டுமென்றால் குறைந்தது வானத்தில் ஒரு கிலோ மீற்றர் உயரத்திற்கு மேலே செல்ல வேண்டும். அதுவும் இப்பொழுது இருப்பதைப் போல உயரத்தில் இருந்து கண்காணிக்கும் கருவிகள், கட்டுமானத்துறையில் பயன்படுத்தப்படும் அளவெடுக்கும் கருவிகள் எதுவும் இல்லாத 2000 ஆண்டுகளுக்கு முன்பு குரங்குகள், பறவைகள், சிலந்திகள், சுறாமீன்கள், பல்லிகள் என பெரிய உருவங்களும், முக்கோணம், நாற்கரம் போன்ற வடிவங்களும்



ஏராளமான நீண்ட கோடுகளும் பீடபூமி முழுவதும் வரையப்பட்டுள்ளன. நாஸ்காக் கோடுகளை ஆராய்ச்சி செய்யும் வல்லுனர்கள், எப்படி பல நூறு மீற்றர்கள் தொலைவில் இருந்து வரும் 60 கோடுகளை ஒரே புள்ளியில் இணைத்திருக்கிறார்கள் என்று வியக்கிறார்கள்.

விமான ஓடுதளம் மனித கைகள் இவற்றை எப்படி வரைந்தனர், எதற்காக வரைந்தனர் என்பதை கண்டு பிடிக்க முடியமலேயே உள்ளது. 2000 வருடங்களாக அழியாமல் நிலைத்து நிற்கும், எந்த அறிவியல் வளர்ச்சியும் இல்லாத காலத்தில் பிரமாண்டமாக வரையப்பட்ட இவையும் உலக அதியங்களே.

## மக்கள் நேர்மையான....

இதைக் கேட்டு குழப்பமுற்ற மக்களில் பலர், அரசர் விருந்தளிப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குய விடயம் தான். ஆனால் குடத்தில் எதற்காக பால் கொண்டு செல்ல வேண்டும், என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டனர். அங்கிருந்த பெண்கள், சரி ஒரு குடம் பால் தானே? கொண்டு போய் என்ன நடக்கிறது என்று பார்ப்போம், என்று குழப்பத்துடன் கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தனர்.

அரசர் அறிவித்த விருந்து நடைபெறும் நாள் வந்தது. அக்பர், பீர்பால் உள்பட அரசவையில் முக்கியப் பதவிகளில் இருப்போர் அனைவரும் கூடியிருந்தனர். பீர்பால் ஏற்பாட்டின் படி, திடலின் பிரதான வாசலில் மிகப் பெரிய பாத்திரம் மூடி போட்டு வைக்கப்பட்டிருந்தது. மூடியில் பெரிய ஓட்டை போடப்பட்டிருந்தது.

பொதுமக்கள் அனைவரும் உத்தரவின் படி தாங்கள் கொண்டுவந்த பாலை, மூடியிலிருந்த ஓட்டை வழியாக பாத்திரத்தில் கொட்டி விட்டு வெறும் குடத்துடன் திடலுக்குள் நுழைந்தனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அக்பர், நீ சொன்னபடி செய்தாகிவிட்டது பீர்பால். இவ்வளவு பாலையும் என்ன செய்யப் போகிறோம்? என்று கேட்டார்.

உடனே பீர்பால் காவலர்களைப் பார்த்து, பாத்திரத்தை மன்னருக்கு அருகில் கொண்டு வாருங்கள் என உத்தரவிட்டார். பாத்திரம் அருகில் கொண்டுவரப்பட்டதும், அதன் மூடியை அகற்றச் சொன்னார் பீர்பால். மூடி அகற்றப்பட்டதும் பாத்திரத்தைப் பார்த்த மன்னர், அதில் வெறும் தண்ணீர் மட்டுமே இருப்பதைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போனார். பீர்பால்? என்ன இது, பால் இருக்க வேண்டிய பாத்திரத்தில் வெறும் தண்ணீர் உள்ளதே? என அதிர்ச்சி மாறாமல் கேட்டார்.

ஆனால் இதை முன்பே எதிர்பார்த்தது போல நிதானமாக பேசிய பீர்பால், மக்களின் நேர்மை பற்றி என்னிடம் நீங்கள் கேட்ட கேள்விக்கு இதுதான் பதில் அரசே! மற்றவர்கள் பால் கொண்டு வரட்டும், நாம் தண்ணீர் கொண்டு போய் பாத்திரத்தில் கொட்டினால் யார் கண்டுபிடிக்க முடியும் என்று ஒவ்வொருவரும் நினைத்துள்ளனர். எனவேதான் பாத்திரம் முழுதும் தண்ணீர் உள்ளது. கூட இருப்பவர்களின் பேச்சைக் கேட்டு எந்த முடிவுக்கும் வந்து விடக்கூடாது அரசே... என்று சிரித்தபடியே கூறினார்.

பீர்பாலின் அறிவுக்கூர்மையை மெச்சிய அக்பர், அவரை ஆரத் தழுவிக் கொண்டார்.

# சங்கொலி 2017 தேசவிடுதலைப் பாடற்போட்டி!

## வெற்றி பெற்றவர்கள்

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரான்சு - தமிழர் கலை பண்பாட்டுக்கழகம் ஐரோப்பிய ரீதியில் வருடாந்தம் நடாத்திய தேச விடுதலைப் பாடற்போட்டி சங்கொலி 2017 கடந்த (24.09.2017) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இம்முறை சங்கொலி 2017 விருதினை செல்வி சோதிராசா சோனா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

### போட்டி முடிவுகள்

**பாலர் பிரிவு**

*1ஆம் இடம் : டியூரா ஆதிஷா*

**கீழ்ப்பிரிவு**

*1ஆம் இடம் : ஜீவராசா பிரசாதினி*
*2ஆம் இடம் : சுரேஸ்குமார் தமிழினி*
*3ஆம் இடம் : சார்ளி மிராண்டா கபறினா*

**மத்தியபிரிவு**

*1ஆம் இடம் : சுரேஸ்குமார் சாகித்யன்*
*2ஆம் இடம் : சுரேஸ்குமார் சங்கீதன்*
*3ஆம் இடம் : சிறீரங்கன் ஹரினி*
*செல்வரசா ஏஞ்சலீனா*

**அதிஅதி மேற்பிரிவு**

*1ஆம் இடம் : கோகுலதாஸ் சூர்ஜா*

**சிறப்புப் பிரிவு**

*1ஆம் இடம் : அருளானந்தம் ஆனந்தராஜன்*
*2ஆம் இடம் : கந்தையா பகீரதன்*

**சங்கொலி 2017 விருதுபெறுபவர்**

**அதிஅதி மேற்பிரிவு**

செல்வி சோதிராசா சோனா

**மேற்பிரிவு**

*1ஆம் இடம் : சிறீதரன் ஆரபி*
*2ஆம் இடம் : தெய்வேந்திரம் ஹரிஹரிணி*
*3ஆம் இடம் : நிக்ஷன் ரஞ்சித்குமார் தேவஅமிர்தா*
*உதயகுலசிங்கம் உவானா*

**அதி மேற்பிரிவு**

*1ஆம் இடம் : ஜெயதாசன் யாழ்மொழி*
*2ஆம் இடம் : புஸ்பகரன் அட்ஷயா*
*3ஆம் இடம் : தேவசுதன் மானசிகா*



# பிரான்சு வாழ் மாவீரர் பெற்றோர், உடன் பிறந்தோர்களின் கவனத்திற்கு!



தமிழீழ தேசத்தின் அற்புத தெய்வங்களான மாவீரர்களின் புனிதத் திருநாளான நவம்பர் 27ம் நாள் தமிழீழ தேசத்திலும், புலம்பெயர்ந்து தமிழீழ மக்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் உணர்வுபூர்வமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பிரான்சில் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாட்டில் பரிசில் வரும் நவம்பர் மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை நடைபெறவுள்ள தமிழீழ தேசிய மாவீரர் நாளில், வழமை போன்று மாவீரர் திருவுருவப் படங்களுக்கு சுடர் ஏற்றி வீர வணக்கம் செலுத்தப்படவுள்ளது. இந்த வணக்க நிகழ்வில் தங்கள் குழந்தைகள், சகோதரர்களாகிய மாவீரர்களின் திருவுருவப் படங்களை இதுவரை வழங்காதவர்கள் எதிர்வரும் நவம்பர் 20 ஆம் நாளுக்கு முன்பாக படங்களையும் விபரங்களையும் எம்மிடம் தந்துதவுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

மாவீரர் பணிமனை – பிரான்சு

மேலதிக தொடர்புகளுக்கு:
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு– பிரான்சு
தொலைபேசி : 01 43 15 04 21
மின்னஞ்சல்: maaveerarpanimanai.fr@gmail.com

கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30



Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram money transfer WESTERN UNION MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள்
வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60




பாலன்ஸ் சலூான்
தமிழர்களால்
நடத்தப்படும்
ஆண்கள்
அழகு நிலையம்
29 rue Philippe de Girard,
75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80



பிரெஞ்சு அரசினால்
அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
திரு.சகாதேவன்
SAGADEVAN PIERRE
எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.
தொடர்பு கொள்ள
சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
(Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42



சுவர்ண மஹால்
SWARNA MAHAL
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான
புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் தேவையாயினும் ஒரு கிழமைத்
தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
www.swarnamahal-france.com
122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com




Mohan
Jewellery Mart
பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
VISA
Aurore
3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord


பிரசாத்தின்
OLYMPIC PRINTERS
OLYMPIC PRINTERS
Tous les services d'impression
Ria
பணப்பரிமாற்று சேவை
Tous les services d'impression
T-SHIRTS PRINT
அழைப்பிதழ்கள்
விளம்பர பிரசுரங்கள்
அறிவித்தல், அஞ்சலி பிரசுரங்கள்
பிறந்தநாள் பனர்கள்
மெனு காட்
விசிட்டிங் காட் அனைத்தும்
அழகாக – மலிவாக – விரைவாக
அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள
அச்சுப்பதிப்பு வேலையில் நீண்டகாலம்
அனுபவம் பெற்றவர்கள்
அச்சுப்பதிப்பு வேலைகள் அனைத்தையும் அதிவேகமாகப் பூர்த்தி செய்ய லாச்சப்பலில்
ஒலிம்பிக் அச்சகம்
EN FACE DE
31, RUE PHILIPPE DE GIRARD - 75010 PARIS
லீடர் பிறைஸ் எதிராக
LEADER PRICE
Métro : La chapelle ou Gare du Nord - Contact : 09 51 55 51 14 - 06 51 10 44 78


ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்
STOP !
எலிகள் – சுண்டெலிகள்
கரப்பான் பூச்சிகள்
தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V,
75004 Paris.
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
Tél.: 01 60 07 34 29
சுதா / விமல் : 06 34 18 80 04